கல்கி

KALKI
5.9.2004
ரூ.6.00



ஷாக் அடிக்குது ஷமா!

ம.பி. ஸ்டண்ட்!

"ஜெ அரசை கலைக்கத் தேவையில்லை"
-சீதாராம் எச்சூரி அதிரடி

காக்கிச்சட்டை கொடுமை!
-ஜெயலக்ஷ்மி விவகாரம்



S.V.முதியோர் இல்லம்



Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப்படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.



மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

முதிய பருவத்தில் மறதி நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.



உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!


நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

Charitable Trust (Reg)

50 / 88, Panchali Amman Kovil Street, Arumbakkam, Chennai - 600 106.
(Near Panchali Amman Temple) Tel. Off: 044 - 2475 5700, 2475 6700,
2475 7777 2475 5799,
e-mail:svhome@vsnl.net



கல்கி அடுத்த இதழில்...
அரபு நாடுகளுக்கே உரித்தான
சாம்பிராணிப் புகை,
அத்தர் மணம்,
கண்ணுக்கு எட்டியவரை
பரந்து விரிந்த பாலைவனம்,
அதில் வரிசையாகச் செல்லும்
பாலைவனக் கப்பல்கள்,
புகழ்பெற்ற ரத்தினக் கம்பளங்கள்,
பபைரஸ் ஓவியங்கள்...
சிவசங்கரி எழுதும்
பிரமிட் தேசம்
வர்ணஜால பயணத் தொடர் ஆரம்பம்!



ஒளிகாட்டி!
களம்பூர், யு லவ் மீ ஷிவா

✉ உருவ அமைப்பில் அப்படியே விஜய் போலிருக்கும் விக்ராந்த், நடிப்பில் எப்படி வித்தியா சப்படுத்தப் போகிறார் என்பது, அவர் படம் வெளி வந்தால்தான் தெரியும்.
மதுரை, என். பாலகிருஷ்ணன்

✉ ஆசிரியர் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அத்தாளநல்லூர் பெருமாள் கோவிலைப் பற்றி ஒரு கூடுதல் செய்தி. மூலவர் மற்றும் தேவி களின் விக்கிரகங்கள் நெல்லி மரத்தால் செய்யப்பட்டுள்ள தால்; அபிஷேக வழிபாடு கிடை யாது.
தூத்துக்குடி - 5, எஸ்.வி.அமிர்தகௌரி



✉ 'ஆசிரியர் பக்கம்' அருமையான வாசிப்பு அனுபவம். நயத்தகு நாகரிகம் காப்பது மட்டுமல்ல, பக்தி சிரத்தை யுடன் ஆலய அபிஷேக ஆராதனைகள் செய்து, நமது அழகியல் உணர்வைத் தூண்டும் தொண்டும் செய் கிறார்கள் சிவாசார் யார்களும், வைணவ பட்டர்களும்!
ராஜபாளையம், எஸ். கோதை

தன்னம்பிக்கை ஒளிகாட்டி!

✉ புதுமுகம் விக்ராந்த் மனம் விட்டுப் பேசி எங்களைக் கவர்ந்தார். அண்ணன் எட்டடி பாய்ந்தால், தம்பி பதினாறு அடி பாய்வாரா?
புரசைவாக்கம், சீதா பிரேமானந்த்

✉ 'ஹலோ இறைவா' கட்டுரை, அவநம்பிக்கை இருளில் தத்தளிக்கும் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை

✉ 'பட்சியார் சொன்ன பரம ரகசியங்கள்' பலே போட வைத்தன. அதிலும் நமது கிரிக்கெட் டீமைக் குறித்த செய்தி குபீர் சிரிப்பை வரவழைத்தது!"
ஸ்ரீரங்கம், எஸ். கௌரிலக்ஷ்மி,

✉ 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்' படத்தில் தம்மாத்துண்டு வேடத்தில் நடித்த பிரபு


வட்டமேஜை வட்டமேஜை வட்டமேஜை வட்ட

பற்றி ஒரு வரி கூட குறிப்பிடவில்லையே... அவர் மீது உமக்கு என்ன கோபமோ...?
ஈரோடு, ரேவதிப்ரியன்

✉ லதானந்தின் 'குரல்' சிறுகதைக்கு ஜெ...வின் ஓவியம் வெகு இதம்!
நெய்வேலி, எஸ். சாந்தி சுந்தர்

✉ இளம் வயதுக் 'காதல் அனுபவ நினைவுகள்' கல்வெட்டு போன்றது. "மழை நின்ற பிறகும்..." சிறுகதை இனிமை.
கருமத்தம்பட்டி, அ. இராஜப்பன்

✉ 'மழை நின்ற பிறகும்' மனதுக்கு அது தரும் ஜில்லிப்பு சுகம். அது போலத்தான் மன லாக்கரில் உறங்கியிருக்கும் காதலும். ஏராளமான கதைகள் இதே கருவில் வந்திருந்தாலும் கூட, காதல் அலுப்பதில்லை. எப்போது மழை



பெய்தாலும், மழை சுகம்தானே?
மும்பை-79, செந்தில்

✉ ஒலிம்பிக் வேளையில் அரசியல் கூத்துகளை விளையாட்டுப் படங்களென கார்ட்டூன்கள் தந்து அசத்திய 'கல்கி'க்கு மகா சல்யூட்.
திருவண்ணாமலை, எல்.எம். மகாநந்தினி

✉ பாலு மணிவண்ணன் எழுதிய 'அய்யனார் மட்டும்' மனத்தை நெருடும் கவிதை. கிராமங்கள் மாறி வருவது நிதர்சனம்!
சென்னை, கண்ணன்

ஜை வட்டமேஜை வட்டமேஜை

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு



காணாமல் போன நட்சத்திரம்!

ஜாதகத்தில் எத்தனை ராசி என்றால் டக்கென்று பன்னிரண்டு என்போம். அதே போல் நட்சத்திரங்கள் இருபத்து ஏழு எனக் கூறுவோம். ஆனால் முன்பு விருச்சிக ராசிக்கும், தனுர் ராசிக்கும் இடையில் ஒபிச்கயஸ் என்ற ஒரு ராசி இருந்தாலும், காலப் போக்கில் எதனாலோ அது விடப்பட்டுவிட்டது. நட்சத்திரங்களும் 28 இருந்ததாம். 'அபிசித்து' என்று 28வது நட்சத்திரம். அது ஆகாயத்திலிருந்து விழுந்து விட்டதாகவும், ஆகவே விடுபட்டதாகவும் கூறுகின்றனர். ஜோதிடம், ராசிபலன் என்று நாம்தான் சுவாரசியம் காண்பிக்கிறோம் என்றில்லை. வெளி நாட்டினரும் நம்மைவிட அதிகமாக ஈடுபாடு காட்டுகின்றனர். ஒரு தகவல் ஆச்சரியம் கொடுக்கும். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் ஒரு ஜோதிடப் புலியாம். நிரம்ப நம்பிக்கை உள்ளவராம். ரொனால்ட் ரீகன் நேரம் பார்த்து நடு ராத்திரியில் பதவி ஏற்றாராம். வாங்க, நாம 'அக்னிசர்மா' பக்கம் போவோம்!

- குவளை எழில், சென்னை - 22

மன்னிச்சுடு பாரதி!

சமீபத்தில் பிரபல செய்தித்தாளில் ஏர்செல் செல்ஃபோன் நிறுவனம் முழுப்பக்க விளம்பரம் வெளியிட்டிருந்தது. அதில் பாரதியாரின் பாடலான ... 'தேடிச்சோறு நிதந் தின்று...' என்று ஆரம்பிக்கும் எட்டு வரிப் பாடல் அச்சிடப்பட்டிருந்தது. அப் பாடலின், 6-ஆம் வரியில்... 'கூற்று கிறையெனப் பின் மாயும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த வரியில் இரண்டு பிழைகள் உள்ளன. அதாவது.... 'கூற்றுக் கிரையெனப் பின் மாயும்...' என்று இருக்க வேண்டும். 'இரை'. 'இறை'யானதில் அர்த்தமே மாறிவிட்டது! பாரதியாரின் பாடல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு விட்டன. யாவரும் விருப்பத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்தான். ஆனால் இப்படியா செய்வது...?

- ரத்னபாரதி, கும்பகோணம்

4,5,6 விஷயம்!

பசுமை நிறைந்த நினைவுகளே!

ஆழ் கடலுக்குக் கூட எல்லை உண்டு. ஆனால் நட்புக்கு





எல்லை இல்லை என்பதற்கு, எங்கள் நண்பர்கள் தின சந்திப்பு ஓர் இனிய உதாரணம்.

தஞ்சை கல்யாண சுந்தரம் உயர்நிலைப் பள்ளியில் 1968 - 74 வரை படித்த மாணவர்களில் சிலர் சந்தித்து மகிழ்ந்தோம். பதினாறு வயதில், பசுமை நிறைந்த நினைவுகளுடன் பிரிந்தவர்கள், நாற்பத்தாறு வயதில் சந்தித்தபோது, பேச்சு, பேச்சு, பேச்சுதான்!

அன்றைய தினத்தில் எங்களது பள்ளி ஆசிரியர் சுவாமிநாதன், துணைவியாருடன் வந்து ஆசீர்வதித்தபோது, உள்ளம் உருகி நின்றோம்.

- சுதா கோபாலகிருஷ்ணன்,
திருச்சி- 2



சரி, குத்து!

விருதுநகர் கடைவீதியில் பலரது கவனத்தையும் கவரும் வகையில் ஒரு விளம்பர போர்டு வைக்கப்பட்டிருந்தது. "இங்கு மணமகளை தேவதை போல் அலங்கரிக்கப்படும். வலியின்றி காது குத்தப்படும்."

விருதுநகர் பகுதியில் 'காது குத்துதல்' என்பது சாமர்த்தியமாகப் பொய் சொல்வதையும் குறிக்கும்!

- கே.கே. ஸ்டாலின்,
விருதுநகர்



பாட்டுப் பாடற ஜிக்கி!

ஜிக்கி, ராஜாவின் பரம ரசிகை நான். பள்ளியில் படிக்கும்போது அருகிலுள்ள மண்டபத்தில் நடக்கும் திருமண வரவேற்புக்குப் பாடிக் கொண்டிருந்தவர்களைப் பார்க்க, சிநேகிதிகளோடு உள்ளே நுழைந்து, பின்பு 'ஜனகணமன' தேசிய கீதத்துக்குப் பின்புதான் வெளியே வந்து, வீட்டில் செமையாக கவனிக்கப்பட்டது. இன்றும் மறக்க முடியாதது.

எனது மகனுக்குப் பூணூல் போட்ட போது, இவர்கள் பாடல்களைக் கேட்பதற்காகவே பூணூல் வரவேற்பு வைத்து ரசித்தோம். இது நடந்தது 1989ல். பின்பு பல வருடங்களுக்குப் பின்பு ஜிக்கியின் தேன்குரல் எங்கள் போனில் கேட்டது. "நான்தான் பாட்டுப் பாடற ஜிக்கி பேசறேன். எங்க மருமகன் கோவை ஒப்பணக்கார வீதியில் இருக்கிறார். சொத்து விற்பனை விஷயமாக அவரை இங்கு வரச் சொல்லணும். ஆனால் தகவல் தொடர்பே இல்லையே" என்றார்.

ஆம், அது கோவை மேல் கண்பட்டு, புண்பட்டு, குண்டு வெடித்த வருடம்.

காவல் துறையின் உதவியுடன் அவரது மருமகனை வயர்லெஸ்ஸில் பேசச் செய்தேன். மறுநாள் போன் வந்தது. "நான்தான் பாட்டுப் பாடற ஜிக்கி. ரொம்ப நன்றி" என்றார் இனிமையாக.

'ஏரு பூட்டிப் போவாயே' ஜிக்கியை மறக்க முடியுமா?

- மஹாலக்ஷ்மி சுப்ரமணியம்

சார்...மணியார்டர்!

மணியார்டர் கூப்பனில் மணியார்டரை வாங்கிக் கொள்பவர் கையெழுத்துப் போட்டதும், அந்தப் பகுதி கிழிக்கப்பட்டு பணம் அனுப்பியவருக்கு வந்து சேருகிறதல்லவா? அந்தப் பகுதியில் பணம் வாங்கிக் கொள்பவர் ஏதாவது எழுதுவதற்குக் கொஞ்சம் இடம் விட்டால் என்ன? பணம் பெற்றுக் கொள்பவர் உடனே கடிதம் போட முடியாவிட்டால், அந்தப் பகுதி உபயோகமாக இருக்குமே! கடிதம் எழுதும் செலவும் பல ஏழைகளுக்கு மிச்சமாகும்.

- அனிதா ராமச்சந்திரன், பெங்களூர்

LEADER IN FASHION JEWELLERY FOR THE PAST 10 YEARS

FABULOUS 10% DISCOUNT
+ CORAL GANESH FREE



INTRODUCING NEW ARRIVALS
Meenakari Jimiki
Bangles and Pendent Sets

1gm & 2gm Gold Forming
Jewellery with RESALE VALUE

Exclusive Silver Anklets, Bangles, Studs, Bracelets, Gift Articles

• Pearls • Corals • Kundan • Polki Sets • American Diamond Jewellery
• Coral Jade Flower Sets • Theva Sets • Hyderabad Gold Foil Beads
• Korean Jewellery • Ranihaars • Saajan Sets • Chokers • Ruby
• Emerald • Blue Sapphire Necklace Sets • Temple Jewellery
• Imported Beads in all Colours • Lucky Birth Stones & Bangles Etc.,

NARMADAA PEARLS

(Fashion Jewels & Gems)

Adyar	Purasawalkkam	Singapore
# A17, Ground Floor, # 2 Gokul Arcade, Sardar Patel Road, Adyar, Ch-20. Ph: 2440 0035, 5205 4846	# 24, Ground Floor, Waikiki Complex, Doveton Signal, Purasawalkam, Ch-7. Ph: 2532 8011, 2640 0414, 5205 4856	#01-14, Tekkammal, No.2, Serangoon Road, Singapore - 218227 Ph: 6292 4349, Mobile: 94277255

நீங்கள் கேட்டவை

● கே.எல். கந்தரூபி,
மேலகிருஷ்ணன்புதூர்

? அ.தி.மு.க அரசு, மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது என காங்கிரஸ் பொதுச்செயலாளர் சொல்வது குறித்து...?

! சரி; ஆனால், மக்கள் நம்பிக்கையைப் பெற காங்கிரஸ் என்ன செய்கிறது என்பதைச் சொல்லவில்லையே.

● வீ. முத்தையா, திருநெல்வேலி - 6

? ராஜ்யவர்தன் சிங் ரத்தோரின் ஒலிம்பிக் சாதனை பற்றி...?

! இந்திய ஒலிம்பிக் வழுக்கையில் ஒரே ஒரு வெள்ளி முடி!

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்

? முதல்வர் ஜெ. சுதந்திர தின விழாவில் துவக்கிய 'நமது கிராமம்' திட்டம் பற்றி தராசின் கருத்து என்ன...?

! மருத்துவர் பற்றாக்குறை, ஆசிரியர் காலிப் பணியிடங்கள், தண்ணீர்ப் பஞ்சம் - எல்லாவற்றையும் கிராம மக்களே சரி செய்து கொண்டால், பிறகு அரசு 'நமது கிராமம்' என்று அறிவிக்கும் என்கிறார். போகாத 'கிராமத்துக்கு' வழி!

● என். உஷா தேவி,
மதுரை ★

? நம்மால் முடிந்ததைப் பிறருக்குக் கொடுப்பது; பிறருக்குத் தேவையானதைக் கொடுப்பது - எது சிறந்தது?

! பிறருக்குத் தேவையானதை, உரிய நேரத்தில் உவந்து கொடுக்கிற வகையில், நமது தேவைகளைக் குறைந்தபட்சமாக வைத்துக் கொள்வது யாவினும் சிறந்தது.

● என். பாலகிருஷ்ணன், மதுரை

? 'அங்கு பாபுவுக்குக் கிடைக்கும் மரியாதை இங்கு கலைஞருக்குக் கிடைக்காதே' என்று சொல்லி, நீங்கள் கலைஞர் சட்டசபை செல்லாததை நியாயப் படுத்துவதை ஒப்புக் கொள்ள முடியவில்லை. அப்படியென்றால் கலைஞர் தேர்தலில் நிற்காமலே இருந்திருக்கலாமே! வாக்களித்த தொகுதி மக்களுக்காக அவர் பேச வேண்டாமா...?

! கலைஞர் சட்டசபைக்குப் போகாததை நியாயப்படுத்த முடியாது. ஆனால், சட்டசபை நடக்கிற லட்சணத்தைப் பார்க்கையில், அங்கே போய் அவர் பேசவே வாய்ப்பின்றித் திரும்புவதைவிட, சட்டசபைக்கு வெளியே கூறிவரும் விமர்சனங்களும், அறிக்கைகளும் அர்த்தமுள்ளவையாக இருக்கின்றன.

● ஆர்.எம்.இ. மலை, அக்ராவரம்

? இந்தியாவில் வெளி நாட்டுப் பத்திரிகைகள் வெளியிடுவதைத் தடுப்பதற்குச் சட்டம் இயற்ற, மத்திய அரசு பரிசீலனை செய்வது அவசியமா?

! அயல்நாட்டு மீடியாவால் (டி.வி, சினிமா, இன்டர்நெட்) ஏற்கெனவே நமது பண்பாடு வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. பத்திரிகைத் துறையிலும் அயல்நாடுகள் உட்புகுந்தால், நமது கலாசாரம் மியூஸியத்துக்குப்



* விவகார வலையில்...

மன்மோகன் சிங் தாக்குப் பிடிப்பாரா..?

– தராசு



* சபைக்கு வெளியே...!

போய்விடும். வலுவான பொரு ளாதார அமைப்போடு உட் புகும் அயல்நாட்டுப் பத் திரிகை (வார, மாத, நாளிதழ் கள்) சுதந்திரமாக இயங்கும் போது, அரசியல் ரீதி யான பாதிப்பும் பெருமளவில் ஏற்படும். குறிப்பாக, நமது மக்களிடம் பகுத் தறிவும் தரமான கல்வி அறிவும் இல் லாத காரணத்தால், அயல் நாட்டவருக் குப் பிடித்தமான ஆட்சி இங்கு அமைய, முயற்சிகள் மேற் கொண்டு எளி தில் வெற்றி பெறு வார்கள். மெய்யான மக்கள் நாயகத் துக்கு 'குட் பை' கூற வேண்டியதுதான்.



* வெள்ளி நாயகர்

● சியாமளா ஈஸ்வரன்,
தேவூர் மேட்டுக்கடை

? சிபுசோரன், தஸ்முதீன் விவகாரங் களைப் பார்க்கும்போது, மன்மோகன் சிங் தாக்குப் பிடிப்பது குறித்து சந்தேகம் வரவில்லை?

! அதான் பதிலுக்கு உமாபாரதி விவ காரத்தைப் பெரிதாக்கிக் கொண்டிருக் கிறார்களே...! காங்கிரஸ் வரிந்து கட்டிக் கொண்டு விவ காரத்தைக் கிளப்ப, 'இதை நாங்க எப்படி அர சியலாக்கறோம் பாருங்க...' என்று அத்வானி அண்ட் கோ களமிறங்கியுள் ளனர்.

● வே.ந. கதிர்வேல்,
வேலூர் - 6

? 'பாண்டிய மன்னன் முன்பு கண்ணகி நியாயம் கேட்டு நின்றது போல், சீதை தன் கற்பை நிரூபிக்க தீக்குளித்தது போல், இந்த நீதிமன்றம் முன்பு நிற் கிறேன். எனக்கு ஜாமீன் வழங்க வேண் டும்' என்று முகமது அலி கேட்டது பற்றி...

! போலி முத்திரைத்தாள் போல இவர் குறிப்பிடுவதும் போலிக் கண்ணகி, போலி சீதை என்பதைப் புரிந்து கொண்டு நீதிமன்றம் ஜாமீன் மறுத்து





யாகத் தடுக்கப்பட வேண்டும் என்பது, இன்று இரு தரப்பிலும் நடக்கிற அரசியல் ஆர்ப்பாட்டம். எனவே, இரண்டுக்கும் இடையில் ஒரு நிலை கண்டு, இரு தரப்பினரும் ஒத்துழைத்துச் சட்டம் இயற்றுவது, சிறிய ஜனநாயகம். தேர்தல் கமிஷனும் இதைத்தான் கோரி பரிந்துரையை அனுப்பியுள்ளது.

* சுதந்திரச் சிந்தனை!
விட்டது.

* போலி முறைவீடு!

● எம். ஜான்,
இளையான்குடி

? சிறுகதை எழுதுவது கடினமா? நாவல் எழுதுவது கடினமா...?

! நேரமும் நீளமும் அனுமதிக்கிற நாவலைக் காட்டிலும், குறைந்தபட்ச எல்லைக்குள் அதிகபட்ச தாக்கத்தைக் கோரும் சிறுகதையே கடினம்.

● ஏ.ஆர்.என். மணி,
(முழுவிலாசம் தேவை) ❑

? ஊழல் கறைகளுடன் ஒருவர் எம்.எல்.ஏ அல்லது எம்.பி ஆக முடிகிறது; பிறகு அவரே அமைச்சர் ஆகிற போது தடுப்பது எப்படி...?

! வழக்கு நடந்து தண்டனை பெற்றிருந்தாலொழிய, தடுக்க முடியாது என்பது இன்றுள்ள சட்டம். தார்மிக ரீதி

● ஆர். மாதவராமன்,
கிருஷ்ணகிரி

? சுயாட்சி அடிப்படையில்தான் மீண்டும் பேச்சுவார்த்தை என அறிவித்துள்ளனரே விடுதலைப்புலிகள்...?

! A Leopard will not change its spots என்னும்போது, புலிகளின் உடலிலுள்ள கோடுகள் மட்டும் மாறிவிடுமா என்ன!

● ப.கா. மணி மொழியான், நாகமலை

? சுய முன்னேற்றத் தொடர்கள் இதழுக்கு இதழ் அதிகரித்து வருவது எதைக் காட்டுகிறது?

! நம்பிக்கையற்றவர்கள் மன உறுதியும் புத்துணர்ச்சியும் பெற உதவி, நம்பிக்கையுடன் செயலாற்றுகிறவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும், இக் கட்டுரைகள் வழங்குவதால் இரு தரப்பிலும் வரவேற்பு உள்ளது.


● டி. சுப்ரமணியன், மேலையூர்

? ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வது என்பது இந்தியாவுக்குக் குதிரைக் கொம்பா...?

! கொம்பில்லாவிட்டால் போகிறது; குதிரையாவது இருக்கட்டுமென்று பார்த்தால், 'ஊக்க மருந்து' சாப்பிட்டு குழியல்லவா பறிக்கிறது இந்திய மானத்துக்கு! அரசியல்வாதிகள்தான் ஜனநாயக ஒழுங்கு முறையும், நேர்மையும் இன்றி நடந்து கொள்கிறார்கள் என்றால், விளையாட்டுத் துறையிலுமா? கடவுளே! கடவுளே!

❑ ரூ 100 பரிசு பெறுபவர்
ஏ.ஆர்.என். மணி,
(முழு விலாசம் தேவை)

★ ரூ 50 பரிசு பெறுபவர்:
என். உஷா தேவி
விக்னேஷ் வில்லா,
78 சுபேதார் தோப்பு,
நியூ பங்கஜம் காலனி,
மதுரை 625 009



கொடி ஏற்றுவது குற்றமா?

“தேசியக் கொடியை ஏற்ற முயன்றது தவறா! அதற்காக என் பேரில் கைது வாரண்ட் பிறப்பிப்பது தேசத் துரோகம்” என்று உணர்ச்சி பொங்க வாதாடுகிறார் உமாபாரதி. “முதல்வர் பணியைக் காட்டிலும் கொடி காக்கும் பொறுப்பே என் இதயத்துக்கு இதமானது. எனவே, முதல்வர் பதவியிலிருந்து ராஜினாமா செய்கிறேன்... கொடி ஏற்ற முயன்றதற்காக என்னைக் கைது செய்து சிறையில் வைத்தால், மகிழ்ச்சியோடு சிறைவாசம் செய்வேன்...'' என்று நாடகத்தனமாக முழங்குகிறார். ஏதோ அன்னிய நாட்டு ஆதிக்கத்தை எதிர்ப்பது போல் அவர் வாதாடுவது, மக்களைக் கவர்ந்து அவர்களது அனுதாபத்தைப் பெற்றுத் தரும், என்று உமாபாரதியும் அவரது கட்சியினரும் கணக்குப் போட்டுச் செயல்படுகின்றனர்.

ஆனால், இந்த பா.ஜ.க பிராண்ட் ‘தேச பக்தி’க்கு அடிப்படை வேறு. இஸ்லாமியர்களை ஏற்றுக் கொள்ளாமல் தனிமைப்படுத்தும் அவர்களுடைய ஹிந்துத்வா கோட்பாட்டிலிருந்து எழுகிற ‘தேசபக்தி’ இது.


அதனால்தான் 1994ல், கர்நாடக மாநிலம், ஹுப்ளி



கல்கி



2004 செப்டெம்பர் 5
தாரண ஆவணி 20
மலர் : 63
இதழ் : 6




நகரில், ஈத்கா மைதானத்தில் கொடி ஏற்ற அரசு தடை விதித்திருந்தபோதும், அதை மீறிச் செயல்பட முற்பட்டார் உமாபாரதி. இஸ்லாமியர்கள் அந்த மைதானத்தைப் பிரார்த்தனைக்காக நீண்ட கால குத்தகைக்கு எடுத்திருந்ததாகவும்; - இல்லை; அது பொதுச்சொத்து - நகராட்சிக்கு உரியது என்றும் இரு தரப்பு வாதம் உள்ளது. வழக்கு, கோர்ட்டில் நிலுவையில் இருக்கிறபோது, அங்கே பா.ஜ.கவினர் அத்து மீறி நுழைவது, சட்டம் - ஒழுங்கு பிரச்னையைக் கிளப்பும் என்று எதிர்பார்த்துதான் அன்றைய கர்நாடக (காங்கிரஸ்) அரசு தடை விதித்தது. உமாபாரதி, தடையை மீறியதன் விளைவாக, வன்முறையும் உயிர்ச்சேதமும் ஏற்பட்டன. ஏழு பேர் இறந்தனர். இதுதான் வழக்கின் பின்னணி.

பா.ஜ.கவினர், ஒரு சட்ட மீறல் குற்றத்தை, வீர - தீரச் செயலாகத் திரித்துச் சித்திரிக்க முயன்று வருகின்றனர்.

காங்கிரஸ் கட்சியோ, பா.ஜ.கவுக்குப் போட்டியாக இந்த விவகாரத்தில் சின்னப்புத்தியுடன் செயல்பட்டிருக்கிறது. 1994ல் தொடரப்பட்ட வழக்கைத் திரும்பப் பெறுவதாக எஸ்.எம். கிருஷ்ணா ஆட்சியில் இருந்தபோது தீர்மானிக்கப்பட்டு, அதற்குரிய மனு தாக்கல் செய்யப்பட்டது. தற்போது, 'வழக்கு வாபஸ்' மனுவை கர்நாடக அரசு வாபஸ் பெற்றுவிட்டது. இதன் விளைவாக, நீதிமன்றம் கைது வாரண்ட் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்தச் சம்பவங்கள், காங்கிரஸ் மேலிடத்தின் தலையீட்டால்தான் ஒன்றன்பின் ஒன்றாக நடந்துள்ளன என்பது பா.ஜ.கவின் குற்றச்சாட்டு.

சிபு ஸோரன் முதலான குற்றம் சாட்டப் பெற்ற அமைச்சர்கள்




விவகாரத்துக்குப் பழி வாங்கும் விதமாக, காங்கிரஸ், பா.ஜ.க ஆட்சியாளர்கள் பேரில் குற்றச்சாட்டுகளைத் தோண்டி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பது தெளிவு.

மொத்தத்தில், பிரதான ஆளுங்கட்சியும் பிரதான எதிர்கட்சியும் சேர்ந்து, நாடாளுமன்ற இயக்கங்களை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டு, பழிக்குப் பழி என்று செயல்பட்டு வருகின்றன. இதனால் நாட்டுக்கோ மக்களுக்கோ எள்முனை அளவுகூட நல்லது நடக்கப் போவதில்லை.

இது ஒருபுறமிருக்க, ஹிந்து - முஸ்லிம் இணக்கத்துக்குச் சவால் விட்டுச் சீண்டிப் பார்க்கும் இத்தகைய விவகாரங்களை, அரசியல்வாதிகள் சுயநலக் காரணங்களுக்காகத் திரும்பத் திரும்பப் புதுப்பித்துப் புகழ் வெளிச்சம் பெற முயன்று வருவது பேராபத்து.

"கொடி ஏற்ற அனுமதியாத இஸ்லாமியர்கள் தேச விரோதிகள்; முஸ்லிம் லீகுடன் கூட்டணி அமைக்கும் காங்கிரஸ்ும், தேச விரோதக் கட்சி; சோனியாவுக்கு என்ன தெரியும் மூவர்ணக் கொடியைப் பற்றி...?" என்றெல்லாம் உமாபாரதி பேசுவதும்; 'பா.ஜ.க சிறுபான்மையினருக்கு விரோதி' என்று காங்கிரஸ் பதிலடி கொடுப்பதும், புளித்துப் போன பொட்டல் வாதங்கள். இந்தியாவில் ஹிந்து - முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழவே விரும்புகிறார்கள். அரசியல்வாதிகள் அவர்களை அவ்வாறு வாழ விடட்டும். கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம் போன்ற ஆக்கபூர்வமான திசைகளில் அறிவைச் செலுத்தி, உணர்வுபூர்வமாக உழைக்கட்டும்... நமது கொடி பூகோள எல்லைகளைத் தாண்டி பட்டொளி வீசிப் பறக்கும்! ○

வேலை



போஸ்ட் கார்ட் கதை

'தேவி' கணேஷ்

பூரித்துப் போனார் வாட்ச்மேன் கந்தப்பன். முதலாளி எடுத்துத் தந்திருக்கும் வெள்ளை வேட்டி, சட்டையை ஆசையாய்த் தடவினார்.

புதுத் துணி அணிந்து கல்யாண மண்டபத்திற்குள் நுழைந்த கந்தப்பனை இருகரம் கூப்பி முதலாளி வரவேற்க... உச்சிகுளிர்ந்தார் கந்தப்பன்.

"வா... கந்தப்பா... உடனே ஸ்டோர் ரூமுக்குப் போ... வாசல்லயே உட்கார்ந்துக்கோ... ஸ்டோர் ரூம்ல விலை உயர்வான பொருள் நிறைய இருக்கு. மண்டபம் காலி பண்ணும் வரை.... அந்த ரூமுக்கு நீதான் காவல். ஜாக்கிரதையா இரு!" முதலாளி சொல்ல...

கந்தப்பன் காக்கி உடையிலேயே வந்திருக்கலாம் என நினைத்தார்.

ம.பி.ஸ்டண்ட்!

'கறைபட்ட அமைச்சர்களை நீக்கியே ஆக வேண்டும்' என்கிற பா.ஜ.க.வின் போராட்டம், இப்போது பூமராங் ஆகி, பா.ஜ.க.வையே தர்மசங்கடத்தில் ஆழ்த்தி விட்டது. பத்து வருஷம் பழைய கேஸ் உயிர் பெற்று, மத்தியப் பிரதேச முதலமைச்சர் பதவிக்கு உலை வைத்து விட்டது. பாராளுமன்றத்தின் கறை படிந்த அமைச்சர்கள் விஷயத்தைச் சூடாக வைத்திருப்பதற்காக, பா.ஜ.க. சின்ன ஸ்டண்ட் நடத்தியுள்ளது. அரங்கேற்றியவர் மாயாவதி. உபயம் இட்கா மைதான விவகாரம்.

சர்ச்சைகளில் சிக்கிக் கொள்வது என்பது உமாபாரதிக்குப் புதிய விஷயமில்லை. உமாபாரதி, அரசியல் பின்னணி கொண்ட குடும்பத்திலிருந்து வந்தவரல்ல. பிறந்தது மத்தியப் பிரதேசத்தில், தூண்டா என்கிற சின்ன ஊரில். பெற்றோர் விவசாயம் செய்து பிழைத்தவர்கள். இருவருமே கல்வி அறிவு பெற்றவர்கள் இல்லை. பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்.

உமாபாரதி சிறுமியாக இருந்த போதே அபாரமான நினைவாற்றல் பெற்றிருந்தார். ஊரில் பெரியவர்கள் சொல்லுகிற ராமாயண, மகாபாரதக் கதைகள், பகவத் கீதை ஸ்லோகங்களை செவிவழியே கேட்டு, மனப்பாடமாகி விட்டது இவருக்கு. சின்னஞ்சிறுமி, அட்சரம் பிசகாமல் ஸ்லோகங்கள் சொல்வதும், சமயச் சொற்பொழிவாளர்களைப் போல பிரசங்கம் பண்ணுவதும், அக்கம் பக்கத்து ஊர் மக்களை பிரமிப்பில் ஆழ்த்தியது. இவரைப் பார்க்கவும், இவரது பேச்சைக் கேட்கவும் ஏராளமான மக்கள் வரத் துவங்கினார்கள். இவரை, 'தெய்வீகக் குழந்தை' என்று கொண்டாடினார்கள்.

உமாபாரதிக்கு எட்டு வயதாக இருக்கும் போது, குவாலியர் மகாராணி ராஜ்மாதா விஜய் ராஜே சிந்தியா வந்து பார்த்தார். அவருக்கு உமாபாரதியை மிகவும் பிடித்துப் போய் விட்டது. தம் கூடவே அழைத்துக் கொண்டு போய் விட்டார். குவாலியர் அரண்மனையிலேயே தங்க வைத்தார். இவருக்கென்றே பிரத்யேகமாக ஒரு கார், டிரைவர், இவரது பிரசங்கங்களின் போது, பணிகள் செய்ய உதவியாளர் என அனைத்தும் ஏற்பாடு செய்தார். குவாலியர் மகாராணிதான் இவரை ஆர்.எஸ்.எஸ். தலைவர்களிடம் அழைத்துச் சென்று, அறிமுகம் செய்து வைத்தார். உமாபாரதி, பத்து வயதில், தேர்தலில் ஜனசங்கத்துக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்திருக்கிறார்.

"பத்து வயதுச் சிறுமிக்கு என்ன அரசியல் அறிவு இருக்கும்? அவரால் எப்படித் தேர்தல் பிரசாரம் செய்ய முடியும்?" என்று கேட்டால், "எனக்கு, அரசியல் தெரியாமல் இருக்கலாம். ஆனால், கிராமத்தில் பிறந்து வளர்ந்த எனக்கு, ஏழ்மை என்றால் என்னவென்று தெரியுமே! மக்களுக்கு நல்லது செய்யும் கட்சி ஜனசங்கம் என பிரசாரம் செய்தேன்" என்கிறார்.

உமாபாரதியின் அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது எப்படி?

உமாபாரதி பிரம்மசாரிணி ஆன சில மாதங்களிலேயே அவரது தாயாரின் மரணம் நிகழ்ந்தது. இந்துமதச் சம்பிரதாயங்களில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவரான உமாபாரதி, அவரது அம்மாவின் ஆன்மா அந்தக் கிராமத்தையே சுற்றி வருவதாக நம்பி, தம் சொந்த வீட்டிலேயே தங்கி விட்டார். அப்போது,

கிராம மக்களின் அவல நிலையை இவரால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. அரசு இயந்திரத்தின் மெத்த னம், தார்மிகக் கோபத்தை ஏற்படுத்தியது. தற்காலிகமாக சமயப் பணிகளுக்கு குட்பை சொல்லிவிட்டு, மக்களுக்கு பணி புரியத் தொடங்கினார். அதுவே உமா பாரதியின் அரசியல் பிரவேசத்தின் ஆரம்பம். இதில் ஆச்சரியம் என்னவெனில், மக்களுக்குப் பணிபுரிய முடிவெடுத்ததும், இவர் சேர்ந்தது பா.ஜ.க.வில் இல்லை. இவரது நாட்டம் கம்யூனிசத்தின் மீதுதான் சென்றது. கார்ல் மார்க்ஸ் முதல் நக்ஸலைட்டுகள் வரை, அனைத்து சித்தாந்தங்களையும் படித் தார். காங்கிரஸ் கட்சியும், கம்யூனிஸ்ட்டு களும் இவரை தங்கள் கட்சி சார்பில் போட்டியிடச் சொன்னார்கள். ஆனால் தம்மைப் போற்றி வளர்த்த குவாலியர் மகாராணியின் ஆலோசனையின் பேரில், அந்த வாய்ப்புகளை மறுத்து விட்டார்.

பா.ஜ.க. இவருக்கு சீட்டு கொடுக்க முன்வந்த போது, ஏற்றுக் கொண்டு போட்டியிட்டாலும், தோல்விதான் கிட்டியது. 89ல் பாராளுமன்றத் தேர் தலில் போட்டியிட்ட போது ஜெயித் தார். அதன்பின் நான்குமுறை எம்.பி. யாக இருந்திருக்கிறார்.

1992ல் பெஜாவர் மடாதிபதியிட மிருந்து சன்யாசம் பெற்றுக் கொண் டார்.



பா.ஜ.க.வில் பல்வேறு பொறுப்புக் களிலும் இருந்துள்ள உமாபாரதி, மத்திய அமைச்சரவையில் சுற்றுலா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு, நிலக்கரி மற்றும் சுரங்கத் துறைகளுக்கு அமைச்ச ராக இருந்திருக்கிறார்.

மத்தியப் பிரதேசத்தில் 2003 சட்ட சபைத் தேர்தலுக்கு முன், பா.ஜ.க. 'மறுபடி ம.பி.யில் ஆட்சியைப் பிடித்தே தீருவது' என்கிற ஒற்றை நோக்குத் திட்டத்துடன், அமைச்சர வையிலிருந்து விடுவித்து, டெல்லி யிலிருந்து போபாலுக்கு அனுப்பி வைத்தது. கடுமையான, இரவு பகல் பாராத பிர சாரம். முதல மைச்சர் நாற் காலியில் ஒரு சன்யாசினி அமர்ந்து சரித்திரம் படைத்தார்.

ஒருவிதத் தில் பார்த் தால், தமிழக நாடகம்தான் ம.பி.யில் மறு படியும் அரங்கேறியுள்ளது. ம.பி.யின் புதிய முதலமைச்சராகப் பொறுப் பேற்றுள்ள பாபுலால் கௌர், "சட்டச் சிக்கல்களிலிருந்து உமாபாரதி விடுபட் டவுடன், அவர் மீண்டும் முதலமைச்ச ராக பதவி ஏற்க, நான் பதவியை ராஜினாமா செய்து விடுவேன்" என்று சொல்லியிருக்கிறார்!

அப்படிப் போடு அரிவாளை!

- எஸ். சந்திரமௌலி

மை

இடது கை ஆள்காட்டி விரலைப் பார்த்தபோது, அவனுள் ஓர் உணர்வு பெருக்கெடுத்தது. பெருமையாக இருந்தது. பூரிப்பாக இருந்தது. காரணம், முதல் முதலாக வோட்டுப் போட்டுவிட்டு வெளியே வந்தான். நல்ல அழுத்தமான வயலட் நிறம். புள்ளி வைத்தவள் இன்னும் சற்றுப் பெரிய புள்ளியாக வைத்திருக்கலாம் என்று தோன்றியது.

"எல... வோட்டுப் போட்டுட்டியால...?" என்றவாறு விரைசலாகப் பார்த்த அப்பாவிடம், பதில் பேசாமல் பெருமையுடன் விரலைக் காட்டினான்.

"நம்ம ஆளுக்குத்தானல போட்ட...?" என்றார் கண்களில் இலேசான கவலையுடன்.

"ஆமாம்பா..." என்றான் அவனும். வேறு யாருக்கும் போட முடியுமா என்ன? அப்பாவின் நண்பர். இந்த ஊருக்கே உபகாரி. அவரும் முதன் முதலாகத்தான் களத்தில் இறங்கியுள்ளார். ஊருக்கு சாலை, பொது நீர்நிலைத் தொட்டி, ஆரம்பப் பாடசாலை... இவை மூன்றும் பிரதான வாக்குறுதிகள்.

பத்திரன் வென்று விடுவார் என்று தோன்றியது.

மாடசாமிக்கு மகிழ்ச்சியில் தலைகால் புரியவில்லை. விரலைப் பார்த்தான். வயலட் மை இப்போது கறுப்பாக மாறி இருந்தது.

"ஐயா... நான் உங்களுக்குத்தான் வோட்டுப் போட்டேன்..." என்று மாலை குவிய, கழுத்து வளைய நின்ற பத்திரனிடம் கூவினான். அவர் காதுகளில் அவன் குரல் விழவில்லை. 'வாழ்க... வாழ்க...' கோஷத்தின் வீச்சில் அவன் குரல் வீழ்ந்தே போனது.

அவனுடைய கண் முன்னே கிராமத்தில் சாலை பளபளத்தது. நெடு நெடுவென்ற நீர்த் தொட்டி தெரிந்தது. பாடசாலையில் 'அறம் செய்ய விரும்பு' என்ற குழந்தைகளின் கூச்சல் கேட்டது...

பத்திரன் தலைநகருக்கு விரைந்து விட்டார்.

அவன் இப்போது தன் விரலைப் பார்த்தான்.

கே.ஜி.ஜவஹர்

மை ஏறியிருந்தது. இப்போது அந்தப் புள்ளி, விரலின் சதையை விட்டு மிகவும் விலகி விட்டிருந்தது. இந்த ஊருக்கு விரைவில் விடிவு காலம் வரும். பத்திரன் வடநாட்டிலிருந்து திரும்பும்போது பளீர் என ஆகிவிடப் போகிறது.

மக்கள் மகிழ்ச்சிக் கும்மாளமிடப்போகிறார்கள் என்று அவனுக்கு தெரிந்தது.

ஆனால் பத்திரனின் வரவு தள்ளிக் கொண்டே போனது. டெல்லியில் நிறைய சிக்கல்களாம். அரசியலில் பல பிரச்னைகளாம். பாவம். பத்திரன் அவற்றைக் களைய பாடுபட்டுக் கொண்டிருக்கிறாராம்.

கிராமமே கவலையில் இருந்தது.

மாடசாமி இடது கை ஆள்காட்டி விரலைப் பார்த்



தான். மை, நகத்தின் நுனிக்கு வந்திருந்தது.

''என்னல... நகத்தையே பார்த்துட்டு இருக்க...?'' என்றவாறே வந்தார் அப்பா. அவர் கால் எல்லாம் சேறு, சகதி.

''ச்சே... இந்த ஊருக்கு ஒரு ரோடு தேவைன்னு இருபது வருஷமா சொல்லிக்கிட்டு இருக்கோம். நம்ம ஆளு வந்த நேரம்... சரியாப் பூடும்னு நெனக்கேன்... தெரியுமால உனக்கு...? மூணாவது தெரு கோபிப்பய அப்பனுக்கு, சேற்றுப் புழு கால்ல நுழைஞ்சு... பெரிசாகி, ஆளே-காலி...''

மாடசாமிக்கு வயிறு கலங்கியது.

இந்த பத்திரன் சீக்கிரம் திரும்பி வந்து நம்ம கிராமத்துக்கு முதல்ல சாலையைப் போடணுமே. கடவுளே....

மாதங்கள் ஓடிவிட்டன.

> ''எல... வோட்டுப் போட்டுட்டியால...?'' என்றவாறு விரைசலாகப் பார்த்த அப்பாவிடம், பதில் பேசாமல் பெருமையுடன் விரலைக் காட்டினான்.

''எல கோட்டிக்காரப் பயல... ஏன்ல நகத்த இத்தன பெருசா வளர்த்து வைச்சிருக்க...?'' மாடசாமியின் இடது ஆள்காட்டி விரலைப் பார்த்து கேட்கிறார் வீராண்டி. ஊர்ப் பெரியவர்.

அவன் நகத்தையே பார்த்தான். அடையாள மை இருந்தது. சற்றுத் தேய்ந்த வட்டமாய்...

''பத்திரன் ஐயா வரவேயில்லீங்களே...''

''அடச்சீ... அவருக்கும் நகத்துக்கும் என்ன சம்பந்தம்ல? முதல்ல வெட்டி எறி...'' என்றவர், பாக்கு வெட்டும் கத்தியால் அவன் நகத்தை அவரே வெட்டி எறிய, அந்த 'மை' தூரப் போய் விழுந்தது. ●



யுவராஜ் சிங் க்ளீன் போல்ட்!



• யுவராஜ் சிங்

• 'சீனாதானா' பாட்டுக்கு அர்த்தம் கெட்ட ஆட்டம் போட முதலில் தியாவைதான் அணுகினார்களாம். இப்போது பாட்டு ஹிட் ஆனாலும் சென்சாரில் கட் என்பதால், தியா ஹெல்மெட் பிழைத்த சந்தோஷத்தில் இருக்கிறார்.

• ''எக் காரணம் கொண்டும் விஜயைப் பற்றிக் கேட்கக் கூடாது'' என்ற கட்டளையுடன் பேட்டி தருகிறார் அஜித்.

• '7G' க்குப் பிறகு, தான் எடுக்கும் படங்களெல்லாம் சர்வதேசப் பட விழாக்களில் கலந்து கொள்வதற்கான தரத்தைப் பெற்றிருக்கும் என்கிறார் இயக்குனர் செல்வராகவன்.



• தியா

• 'செல்லமே' படத்தின் ஹீரோ விஷால், நடிகர் அர்ஜுனிடம் உதவியாளராக இருந்தவர்.

• இசையமைப்பாளர் ஆதித்யன் அண்ணாநகரில் புதிய ஹோட்டல் திறந்திருக்கிறார்.

• 'செல்லமே' படத்தில் விவேக்கின் ஜோடியாக மீண்டும் இணைந்திருக்கிறார் இ. மும்தாஜ். (இளைத்த...?)

• கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கை லேட்டஸ்டாக காதலிப்பது யார் தெரியுமா? பினாக் பியூட்டி மாளவிகா!

• நடிகர் ஷாருக்கானுக்கு கபில்தேவ் கால்ஃப் கற்றுத் தருகிறார்.

- கண்


Muhurtham Collections
Steel / Wooden Wardrobes
Sathya
Furniture World
Since 1968
Specialist in Custom Made Furniture
One of India's Biggest Furniture Showroom
H.O : Mylapore
(20,000 sq.ft)
139, R H Road,
Next to Sanskrit College,
Ch-4. Ph : 24982930 / 31
Anna Nagar (West)
DABC Bldg.,
6, M T H Road, Padi,
Opp. TVS, Padi, Ch-50.
Ph : 52155929
Velachery
Paramount Park,
358, Velachery-Tambaram
Main Rd, Ch-42.
Ph : 52144929
Coimbatore
266, Mettupalayam Road,
Near Saibaba Temple
Bus Stop, Cbe - 43.
Ph : 2452929 / 30
Also Available
Living Room Furniture
Bed Room Furniture
Dining Sets
Kitchen Cabinets
Entertainment Sets
Office & Industrial Furniture
We also undertake all kinds of Interior Works
Exchange Option available for Old Furniture
Major Credit Cards accepted
Cloud 9 / Kalki - MM / 012 / 2004



• பிரியதர்ஷினி



• வைஷ்ணவி

“கும்பராசி நேயர்களே, இன்றைக்கு உங்களுக்கு அனுகூலமான நாள்” என்று அதிகாலையில் செந்தமிழ் செப்பும் விஷாலுக்கு, பிரபலம் பிரபு முதல் சூளைமேடு சூசம்மா வரை, ஏராளமான ரசிகர்கள்.

சன் டீ.வியில் பாதி நேரம் போக, மீதி நேரம் எல்.ஜி. காஸ்மெடிக்ஸ் நிறுவனத்தில் விற்பனை மேலாளர்.

“நான், ‘கொண்டாட்டம்’ வைஷ்ணவி, ‘திரை வானம்’ பிரியதர்ஷினி, ‘வானிலை அறிக்கை’ மோனிகா - பாத்திமா ஹனிடியூ...ன்னு ஒரு பெரிய கேங்கே எங்களுது தெரியுமா?” என்றபடி, தமது கேர்ள் ஃப்ரெண்ட்ஸின் ராசிச் சீட்டுக்களை எடுத்துப் போட்டது விஷால் பச்சைக்கிளி.



• ஃபாத்திமா

பிரியதர்ஷினி:

சின்னத்திரை சிவக்குமாரே, கடக ராசி மார்க்கண்டேயினியே, ஐந்து வயது குழந்தைக்குத் தாயான உன்னைப் பார்த்து, ‘நீங்க எந்த காலேஜ்?’ என்று கேட்கிறார்களாமே? இப்படியே இளமை நீடித்துப் போனால், உன் தங்கை திவ்யதர்ஷிணி உனக்கு அக்காவாகி விடும் அபாயம் உள்ளது. ஜாக்கிரதை! பிறகு ஜோதிகா போல் இரண்டு இட்லிக்கு ஒரு சொம்பு



• மோனிகா

“சீக்கிரமே பாய்

• விஷால்



ஃப்ரண்டு ப்ராப்தி ரஸ்து!

'மன்மத' ரகசியம்!

உஷ்... யார் கிட்டயும் சொல்லிடா தீங்க! 'மன்மதன்' படத்தில் சிம்பு கழுக்க மாக டுயல் ரோல் செய்து வருகிறார். (அதான் படத்தில் இத்தனை ஜிலுஜிலுப்பு களா?)

இப்படத்தில் காமெடி ரோல் செய் துள்ள நடிகர் நம்மிடம் இத்தகவலை ஓதி விட்டு, திடீரென "ஐய்யய்யோ, எழுதிட மாட்டீங்களே" என அலறினார். "அப்படி யெல்லாம் இல்லே. எழுதிடுவோம்" என அவரைத் தேற்றினோம்.

- ச.ந.



எண்ணெய் விட்டுக் கொண்டால் உடல் புஷ்டியாகும் வாய்ப்புக் கிடைக்கும். இந்த வாரம் ஏடாகூடமான வாரம். மாடு முட்ட வசதியான நிறம் - சிவப்பு.

ஃபாத்திமா ஹனிடியூ:

தேன் பெண்ணே! கன்னி ராசி என்பதனாலேயா உன் எதிரிகளுக் கெல்லாம் கண்ணி வெடி வைக்கிறாய்? நெஞ்சுமுட்ட கனவுகள் கொண்ட உனக்கு, விக்ரமன் படம் பாணியில் ஒரே பாட்டின் கேப்பில் முன்னேறி விடுவாய். உனக்கு ஒரு கோடி அடிக் கவே, தமிழக அரசு நாளை லாட்டரி சீட்டின் தடையை நீக்கவுள்ளது. இதோடு சீக்கிரமே ஒரு ஜக்கு பாய் ஃப்ரெண்ட் ப்ராப்திரஸ்து!

'அம்மா' வசிக்கும் போயஸ் கார்டன் உந்தன் அனுகூலமான திசை.

வைஷ்ணவி:

நம் 'பாண்டவாஸ்' கேங்கின் அறுந்த வாலே, அணிலைக் காட்டிலும் துறுதுறு என ஓடும் மிதுனமே, மாநகரப் பேருந்திற்கு நாள் முழுவதும் நிற்பதைக் காட்டிலுமான பொறுமை அவசியமா கட்டும். சென்ற வாரம் ஆடம் டீசிங் செய்து கொண்டாட்டம் கண்டதன் பலனாக, இவ்வாரம் மிஸ்டர் ஈவ்டீசிங் கைச் சந்திக்க நேரிடலாம். வழியாத ட்ராபிக் அங்கிளிடம் தண்டமாய் நூறு ரூபாய் அழலாம். இந்த வாரம் துரதிர்ஷ்டமான எண் 304. ராசியில் லாத நிறம் - வொய்ட் அண்ட் காக்கி.

மோனிகா:

மேஷ ராசியே, மிஞ்சி மிஞ்சிப் போனால் நீ எட்டாவது படிக்கும் பெண் என்பதற்கு மேல் கணிக்க முடி யாத காயகல்பமே, உந்தன் உண்மை யான வயது 23 என்று ஊருக்கு உரைத்திடும் வாரமிது! பூனையைக் காட்டிலும் பயந்தோடும் தொட் டாஞ்சிணுங்கியே, 'ஷாக்', 'அது' படங் களின் ட்ரெய்லர்களைக் கண்டால், 'போகோ' சேனல் மாற்றிவிடுவது உத்த மம். தலை வைத்துப் படுக்கக் கூடாத திசை - கண்ணம்மாபேட்டை. அதிர்ஷ் டமான நேரம்: பவ்யமாய் சொன்னது சொன்னபடியே வீட்டு வாசலில் மழை யடிக்கும் நேரம்.

ஒரே மூச்சில் அத்தனையும் சொல்லி முடித்தபோது சில இறகுகளை உதிர்த்திருந்தது கிளி.

"ம்... என் ராசியையும் பார்த்திட றேனே..."

துலாம் ராசிக்காரரான இந்தப் பெண்ணுக்கு சென்னையில் இரண்டு ஜிம்கள் வைத்திருக்கும் 'ஆணழகன்' கணவராய் வாய்த்தாலும், அவர் மீது எண்ணெயில் கடுகு தாளிப்பது போல் 'சுள்'என கோபப்படுவது நியாயமல்ல. நீ சினிமாவில் நடிக்காததாலேயே த்ரிஷா, சோனியா அகர்வாலெல்லாம் பிழைத்துக் கொண்டார்கள் என் றெண்ணி, நீ பணிபுரியும் எல்.ஜி.யில் வாழ்க்கையின் பி.ஜி. படிப்பாயாக.

மாளவிகாவுக்கு மட்டுமல்ல, உனக் கும் கறுப்பே பிடிச்ச கலராகட்டும்!

படம், சந்திப்பு: **ச.ந.கண்ணன்**


ஜிமிக்கி மேளா
The Legend in Fashion Jewellery
12th Anniversary
Offer
10% - 20% Discount
A well-known name for its Unbeatable, Irresistable and Dynamic design in Pearls, Corals, American Diamond Jewels, Theva Sets, Hyderabad Gold Foil Beeds, Full Range of Cutting Beeds, Coral Flower Sets, Kundhan Sets, Jade, Ruby, Emerald, Blue Sapphire Necklace Sets, Temple Jewellery, 1gm & 2 gm Gold Forming Jewellery and many more apart from Attractive Jewel Gift Articles, Lucky Birth Stones.
Best Customer Service
NARAYANA Pearls & gems
Main Show Rooms : KASI ARCADE
116, Theygaraya Road,
Next to GRT Hotel, T.Nagar,
Chennai- 17. Ph: 2815 3457 / 5624
Ample Car Parking (Unpaid)
Pondy Bazaar Branch :
FATHIMA PLAZA Ground Floor,
Next to Hotel Saravana Bhavan,
Pondy Bazaar, Chennai - 17.
Ph : 2815 5094
Adyar Branch :
L.B. Road, (EXACTLY OPP),
Ganapathy Ram Theatre,
(Next To Archies), Adyar,
Chennai - 20. Ph : 2446 2592
Open On all Sundays 11am - 8 pm
FULL TIME ASTROLOGER SERVICES AVAILABLE

எங்கிருந்தோ வந்தான்

பார்வதியம்மாள் சுற்றிலும் பார்த்துக் குழந்தை போல் மலங்க மலங்க விழித்தாள். சின்னக்குழந்தை முதன் முதலாய்ப் பள்ளிக் கூடம் போகின்ற நாளில், அதன் கண்களில் கலவையாய் ஓர் உணர்ச்சி தேங்குமே... அப்படிப் பட்ட பார்வை.

'நான் போய்த்தான் ஆகணுமா?' என்று விழிகளும் அதைத் தோய்த்திருந்த ஈரமும் கேட்டன.

''அண்ணா... லிஸ்ட்டைப் படி.. பார்வதியம்மாளின் மூன்றாவது மகள் கண்டிப்பான டீச்சரைப் போல் சொன்னாள்.

''லிஸ்ட் என்ன பெரிய லிஸ்ட்? ஒரு பெட்ஷீட், ரெண்டு தலையணை, ஒரு பக்கெட், ஒரு மக்...'' என்று மனப்பாடம் செய்தவனைப்



அமரர் கல்கி நினைவு சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை

போல் மடமடவென்று சொல்லிவிட்டுக் கையிலிருந்த சீட்டைப் பெருமிதத்துடன் பார்த்தான்.

பார்த்திபனுக்கு நினைவாற்றல் எப்போதுமே ரொம்பவும் அதிகம். சின்ன வயசில் அவன் அப்பா சபேசன் பெருமிதத்துடன் பார்வதியிடம் சொல்வார். "பார்த்தியாடி பார்வதி... வாத்யார் பிள்ளை மக்குன்னு சொல்லுவாங்களே... அந்தப் பழமொழியைப் பொய்யாக்கப் போறான் என் பிள்ளை..."



ஆமாம். அவர் தன் வாழ்க்கையை ஆரம்பப் பள்ளி வாத்தியாராய்த்தான் ஆரம்பித்தார். சும்மாயில்லாமல் தபாலில் மேலும் மேலும் படித்துக் கடைசியில் கல்லூரிப் பேராசிரியராய் ஓய்வு பெற்றார். குழந்தைக்குச் செல்லம் கொடுப்பது போலப் பெண்டாட்டிக்குச் செல்லம் கொடுக்க அவருக்குத்தான் தெரியும். அவ்வப்போது 'செல்லம்' என்றே அவளைக் கூப்பிட்டு வெட்கப்படச் செய்வார். அப்படிச் செல்லம் கொடுத்ததுதான் அவர் செய்த மிகப் பெரிய தப்போ என்று அப்புறம் யோசித்தாள் பார்வதி. அவர் செத்துப் போனதற்கு அப்புறம்.

பிள்ளையும் பெண்களும், அதன் பிறகுதான் குணத்தைக் காட்ட ஆரம்பித்தனர். இதோ இன்றைக்கு முதியோர் இல்லம் அனுப்பப்பட இருக்கிறாள்.

மூன்று பெண்களைப் பிரமாதமாய்க் கரையேற்றவென்றே லட்சக் கணக்கில் சம்பாத்தியம் வந்ததுபோலும். கடைசிப் பெண்ணுக்குக் கல்யாணம் செய்து நிமிர்ந்தபோதுதான் வீட்டுக்குப் போதாத வேளை ஆரம்பித்தது.

சபேசன் பாரிச வாயுவில் படுத்தார். அவருடைய சேமிப்பும், வீடும் அவருடைய வைத்தியத்துக்கென்றே செலவாயின.

வேதா கோபாலன்

செலவு செய்ய இனி தெம்பில்லை என்ற நிலையில், வேறு வழியில்லாமல் மகனிடம் கேட்டாள்.

"அடடே... என் ஃப்ரெண்டு ஒருத்தனுக்குக் கடனாய்க் குடுத்திருக்கேனே. அதனால் என்ன? எங்கப்பாவுக்கு உதவாத பணமா? உடனே போய் வாங்கிட்டு வந்துடறேன்..." என்றான்.

"ராஸ்கல்... இப்போதைக்கு இல்லைங்கறான்" என்று வீட்டுக்கு வந்து தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு சொன்னான்.

அவன் அப்படி அந்த நண்பனுக்கு கடன் கொடுக்கவில்லையென்பதும், மொத்தமும் நடிப்பு என்பதும் ரொம்ப நாட்கள் கழித்து அவன் பெண்டாட்டியிடம் ரகசியமாய்ப் பெருமிதப் பட்டுக் கொண்ட போதுதான் எதேச்சையாய்க் காதில் விழுந்ததனால் தெரிந்தது.

அப்பா செத்துப் போனபோது காரியங்களுக்காகவென்று பணம் கேட்ட போது, கடுமையான வார்த்தைகளை மென்மையான குரலில் சொன்னான்.

"பாவம்மா நீ... அத்தனையையும் உன் பொண்ணுங்களுக்குச் செலவழிச்சுத் தீர்த்திருக்கணுமா? கொஞ்சம் பாங்கில் போட்டு வெச்சிருந்தால் இப்போ உதவியாய் இருந்திருக்குமில்ல? பிள்ளைக்குக் கொடுக்கணும்னு எண்ணமே இல்லாம எல்லாத்தையும் செலவழிச்சுட்டியே?" என்று சமயம் தெரியாமல் ஊசியாய்க் குத்தினான்.

அதாவது... அவனுக்கென்று எதுவும் கொடுக்கவில்லையாம், அதனால் அவன் கொடுக்க மாட்டானாம்!

"இப்போ என்னடா செய்யறது?"


"நான் ஒரு ஐடியா சொல்லுவேன்... நீ கோவிச்சுக்கப்பே..."

"சீச்சீ... இப்போ இருக்கிற நிலையில் எனக்குக் கோபமாடா வரும்? உங்கப்பாவோட ஆத்மாவைக் கரையேத்தணும்டா..." பிழியப்பிழிய அழுதவாறு சொன்னாள்.

"வந்து...வந்து... உன் கழுத்தில் இருக்கும் சங்கிலி எத்தனை பவுன் இருக்கும்?" பொடி வைத்துப் பேசினான்.

அவளுக்கு அப்பாடாவென்றிருந்தது. சட்டென்று கழற்றினாள்.

சற்று நேரத்தில் பெட் ரூமில் குரல்



கேட்டது. "பைத்தியமா நீங்க. பரம்பரை நகை. விக்காதீங்க... என்ன மிஞ்சிப் போனால் நாப்பதாயிரம். சீக்கிரம் என் அக்கவுண்ட்லேர்ந்து எடுத்துக்கிட்டு வாங்க..." என்று அறிவுரை கொடுத்தாள் அவனுடைய மதியூகி மந்திரி. "யாருக்கும் தெரிய வேண்டாம்."

பார்வதிக்கு அதிர்ச்சியடையவோ அழவோ அதற்கு மேல் தெம்பில்லை. முதலில் பரம்பரை நகையை விற்க வேண்டாம் என்று, அம்மாவின் கழுத்திலேயே நகையைக் கொண்டு போடப் போகிறானாக்கும் என்று நினைத்த அந்த அம்மாவுக்கு விஷயம் புரியச் சிறிது நேரமாயிற்று.

"அம்மா... வித்துட்டேன். இந்தா பணம்" என்று மகன் பணம் கொடுத்த போது நெஞ்சு வலித்தது.

'இந்தக் குழந்தைகளுக்கா இத்தனை பாடுபட்டோம்' என்ற விரக்தி அப்போதும் அவளுக்குத் தோன்றவில்லை. 'ஏதோ நம் குழந்தைகள் தானே... நன்றாய் இருந்தால் அதைவிட என்ன வேண்டும்..." என்றுதான் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள்.

இதோ... இப்போது மகனுக்கு வடக்கே எங்கேயோ பெரிய வேலை கிடைத்து விட்டதாம். அம்மா பாவமாம். அந்த ஊர்க்குளிரையெல்லாம் அவள் தாங்க மாட்டாளாம். இந்த அளவுக்குக் கூட அவனுக்குப் பெண்டாட்டிதான் சொல்லிக் கொடுத்திருப்பாள்.

முதலில் மூத்த மகளைக் கேட்டாள்.

"பெரியவன் காலையில் எழுந்து

"உங்க பையன் தோல் வியாபாரம் செய்வதாக இருந்தானே... என்ன ஆச்சு?"

"தோல்வியாபாரம் என்கிற பெயரிலேயே 'தோல்வி' இருக்குனு வேண்டாம்னு சொல்லிட்டான்."

"இப்போ என்ன செய்றான்?"

"'வெற்றி'லை வியாபாரம்!"

- கருணை மஞ்சு

டான்ஸ் கிளாஸ், கம்ப்யூட்டர் கிளாஸ்னு பறக்கறா. நானும் இதுபானா கத்துக்கப் போறேன். அம்மா என் வீட்டுக்கு வந்தால் பேச்சுத் துணைக்குக் கூட ஆள் இருக்காது. பாவம். நீ அடுத்தவளைக் கேளு..." என்று தீர்மானமாய்ச் சொல்லி விட்டாள். அவனுக்குக் கோபம். மற்ற இரண்டு பெண்களுக்கும் படு கிராண்டாகக் கல்யாணம் பண்ணி வைத்த அம்மா... தன் கல்யாணத்தை மட்டும் எளிமையாய்ச் செய்து விட்டாள் என்று அவனுக்கு நினைப்பு. ஆனால் அப்புறம், அதற்காக இதற்காக என்று காரணம் காட்டி, இரண்டு, மூன்று, ஐந்து என்று சவரன்கள் தட்டிக் கொண்டு போனதெல்லாம் காந்தி கணக்கு!

இரண்டாவது மகள் வரும்போது, பார்த்திபன் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. எங்கே இவன் கேட்டு விடுவானோ என்ற பயத்தில், அவளே முந்திக் கொண்டாள்.

"இதபாரு... இத்தனை நாள் இல்லாமல் எங்க மாமியார் மாமனாரைக் கூட்டி வெச்சுக்கணும்னு என் வீட்டுக்காரர் புலம்ப ஆரம்பிச்சிருக்காரு. சம்பந்தியும் சம்பந்தியும் ஒரே வீட்டில் இருக்க முடியுமா? நீயே சொல்லு... ஆயிரம்தான் ஆனாலும், என் மாமியார் மாமனாரை வெச்சுக் காப்பாத்தறது எனக்குக் கடமை இல்லையா?" என்று சொன்னாள். மாமியாரை நீ வைத்துக் காப்பாற்று என்று அண்ணிக்கு மறைமுகமாக டோஸ் விட்டாள்.

"பொய் சொல்லாதே. உன் மாமியாரைக் கொண்டு வெச்சுக்கப் போறியா? முந்தா நாள் போன் பண்ண போது கூடச் சொல்லலையே?" என்று ஆரம்பித்த பார்த்திபனுக்கு, அவள் ஏதோ பதில் சொல்ல, கடுமையான சண்டையில் முடிந்தது.

"ஐயோ... எனக்காக யாரும் அடிச்சுக்காதீங்கடா?" பொங்கி வந்த கண்ணீரைப் புடைவைத் தலைப்பில் அழுத்தியபடி அழுதாள் அம்மா.

மூன்றாவது மகள் கண்டு கொள்ளவே இல்லை!

ஆக...

இதோ...

மூன்று பேருமாய்ச் சேர்ந்து அண்ணனுடன் ஆலோசனை செய்து, அம்மாவை பத்திரமாக முதியோர் இல்லத்தில் விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்து விட்டார்கள். இதற்குப் பணம் கட்ட மட்டும் ஆளாளுக்குப் போட்டி போட்டுக் கொண்டு முன் வந்தார்கள்.

கடைசி நிமிடத்தில் ஏதேனும் மன மாறுதல் வந்து, அம்மா தன்னுடன் இருக்கட்டும் என்று, ஏதாவது ஒரு குழந்தை சொல்லிவிடாதா என்று ரொம்பவும் எதிர்பார்ப்போடு இருந்தாள் அம்மா. அப்படி எந்த மாயமும் நடந்து விடவில்லை. அப்படியெல்லாம் மனம் மாறிவிட்டால், அது நிஜமில்லை. சினிமா!

"அம்மாவோட பையையெல்லாம் எடுத்து கால்டாக்ஸியில் வை..." என்றாள் சின்ன மகள்.

"அத்தை, உங்களோட ஃபேவரைட் சுலோக புத்தகம் வெச்சிருக்கேன்" என்று பெருமிதமான குரலில் மருமகள் சொன்னாள். அவள் எட்டுப்பவுன் சங்கிலி போன்ற சின்னப் பொருள்களுக்குத்தான் குறி வைப்பாள். சுலோக புத்தகம் போன்ற பெரிய பொருள்கள் அவளுக்குப் பொருட்டில்லை.

கிளம்பித்தான் ஆக வேண்டுமா என்று தோன்றிய மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். அந்த வீட்டை ஒரு முறை பார்த்தாள். நிறையப் பணம் வந்து கொண்டிருந்தபோது கிரகப்பிரவேசத்துக்கு 'அம்மாவும் அப்பாவும்தான் உட்காரணும்' என்று மருமகள் வற்புறுத்தியது நினைவுக்கு வந்தது.

கதைகளில் வருவது போல், தன் உயிர் பிரிந்துவிடாதா என்ற நப்பாசை எழுந்தது பார்வதிக்கு.

அப்போதுதான் வாசலில் அந்தக் கார் வந்து நின்றது.

“யாரு?” இந்தச் சங்கடமான நிமிஷத்தில் யார் வந்து நின்றாலும் அவஸ்தைதான்...

“வந்து... புரொபசர் சபேசன் சார் வீடு...”

கணவனின் பெயர் காதில் விழுந்தது பெரிய சகுனமாகவே தோன்றியது. “இதுதான்... ஆனால் அவர் இல்லையே...” மகன் சொன்னான்.

“தெரியும். ஆபிச்சுவரியில் பார்த்தேன். அப்போ நான் அமெரிக்கா கிளம்பிக்கிட்டிருந்தேன். வரமுடியலை. நான் சாரோட மாணவன். இன்னிக்கு நான் நல்ல நிலையில் இருக்கறதுக்கு அவர் தான் காரணம்.”

இது பலமுறை கேட்டுப் பழகிய வார்த்தைகளானாலும், இப்போதைய மன நிலைக்கு ஒத்தடம் தந்தன.

“அம்மா... ஒரு சமயம் காலேஜ் ஃபீஸ் கட்டக் கையில் பணம் இல்லை... அப்போ சார்தான் குடுத்து உதவினார். நான் நெகிழ்ந்து போய் அழுதேன். அப்போ ‘அழாதேடா... நீ சம்பாதிக்க ஆரம்பிச்சதும் வட்டி போட்டு வாங்கிப்பேன். மறக்காம குடு”ன்னு விளையாட்டாய்ச் சொன்னார்.”

எல்லோரும் இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருநதார்கள்.

“கூட்டுவட்டி போட்டேன். ஒண்ணே கால் லட்சம். கொண்டு வந்திருக்கேன்” அனைவரின் கண்களில் ஆர்வம் மின்னியது.

அம்மா மறுப்பாள் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள்.

“கொண்டாப்பா...” ஆசையாய் வாங்கிக் கொண்டாள். பிரித்துக் கொடுப்பாளோ? நினைத்தபோதே சொன்னாள்.

“நான் ஹோமில் சேரப் போறேன். அதுக்கு நன்கொடையாய்த் தந்துடறேன்” என்று தீர்மானமாய்ச் சொன்னாள்.

அவன் காலில் விழுந்தான்.

“அம்மா, எனக்குக் கல்யாணமாகி அஞ்சு வருஷமாகுது... குழந்தை பிறக்கலை.. ஆசீர்வாதம் பண்ணுங்கம்மா...” என்றான்.

முதலில் ‘குழந்தையே பெத்துக்காமல் நிம்மதியாய் இரு’ என்று சொல்லத்தான் நினைத்தாள். அவளின் தாயுள்ளம் அதை அனுமதிக்கவில்லை.

“அமோகமாய்க் குழந்தை பிறக்கும். அது உன் வயசான காலத்தில் உனக்கு ஆதரவாய் இருக்கணும்... இருக்கும்” என்று அழுத்தமாய்ச் சொல்லிவிட்டு, கம்பீரமாய் கால் டாக்ஸியை நோக்கி நடந்தான்.

பொடி (வைச்ச) கவிதை!

தேர்தலில் நிற்கவேயில்லை
பரவாயில்லை
மந்திரி பதவி இருக்கு







வங்கியில்
கணக்கு துவக்கம்
கடன் பெற


மந்திரிக்கு போடப்பட்ட
சால்வைகள்
மடித்து வைக்கப்படுகின்றன
மனுக்கள்

- பூ. சீனிவாசன்

உள்ளம் கவர் கள்வன்!

போஸ்ட் கார்ட் கதை

த.அருள்



தன் கணவன் உதய்ராஜுக்கு நடக்கும் பாராட்டு விழாவுக்கு நடிகை கலாரதி வருவதைக் கேள்விப்பட்ட மாலதி, தானும் விழாவுக்கு உடன் வருவதாக அடம் பிடித்துச் சென்று வந்தாள்.

"உங்களுக்கும் கலாரதிக்கும் பழக்கம் இருப்பதை நான் கண்டுபிடிச்சிட்டேன்" என்று சொல்லி அழுதாள், திரும்பி வந்தவுடன்.

உதய்ராஜுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

தன் கணவனுக்கும் அந்த நடிகைக்கும் ரகசியத் தொடர்பு இருப்பதாகப் பலர் சொல்லிக் கேள்விப்பட்டு அறிந்த மாலதி, இன்று அதை உறுதியாக நம்புகிறாள்.

"எதைவச்சி அப்படிச் சொல்றே?". கேட்டான் உதய்.

"அவள் வீட்டு நாய் குட்டி உங்களைக் கண்டதும் ஓடி வந்து வாலாட்டியதே, அதை வைத்துதான்" என்றாள் மாலதி.

வசமாய் பிடிபட்ட உதய்ராஜ் தப்பிக்க வழி தெரியாது விழித்தான்.



புக் போஸ்ட்

ஸ்ரீமத் பகவத் கீதை - உரை பி.எஸ். ஆச்சார்யா

கீதை எந்த நாட்டின், எந்த மக்களின், எந்தக் குழப்பத்தையும் தீர்த்து வைக்கும் தெளிவான அறிவுரைகள் நிரம்பிய பொக்கிஷம். யாரும் எதையும் கொண்டு வருவதுமில்லை, கொண்டு போவதுமில்லை. வாழ்கிற காலத்தில் தெளிவான அறிவோடு, மற்றவர்க்குப் பயன் தரும் விதமாய் வாழ வழி சொல்லும் கீதையின் தெளிவான உரை.

நர்மதா பதிப்பகம், 10. நானா தெரு, தி. நகர், சென்னை - 600 017. விலை ரூ. 90/-

நினைத்துப் பார்க்கிறேன் - விக்கிரமன்

தமிழ் எழுத்துலக வரலாற்றைத் தொகுத்தால், இரண்டே பிரிவுகள்தாம் இருக்கும். நேரடியாக மக்களைச் சென்றடைவது, மற்றது அப்படி இல்லாதது. அதாவது, கல்கிக்குப் பின், கல்கிக்கு முன். முதல் ரகத்துக்குப் பாதை போட்டவரைத் தொடர்ந்து வந்தவர்களில், கல்கியின் கதாபாத்திரத்தின் பெயரையே ஏற்று, தம் சொந்தப் பெயரையே மறந்து போனவர் இவர். கல்கிக்குப் பின் 'சரித்திரம்' படைத்த இவர், தம்மையும், தம் எழுத்தையும், பத்திரிகை உலக அனுபவங்களையும் பற்றி சுவையாக விவரிக்கும் நூல்.

- சிவரஞ்சனி பப்ளிகேஷன்ஸ், 12ஏ, சக்தி நகர், 2வது தெரு, குளைமேடு, சென்னை - 600 094. விலை ரூ. 55/-

திராவிட மாயை - சிங்காரவேலன்

சுதந்திரத்திற்குப் பின் தேர்தல் தோறும் ஆடிப் பெருவிழாதான். கொள்கைகளையும், வாக்குறுதிகளையும் தள்ளுபடி செய்து, தமிழகத்தை அடகு வைத்து, ஆட்சியும் பதவியும் பெற தலைவர்கள் நடத்திய, நடத்துகிற கூத்து. திராவிடக் கட்சிகள் மக்களை ஏமாற்றி வளர்ந்ததைக் கூறும் தமிழக அரசியல் வரலாறு.

உணர்ச்சிக் கவிஞர் பதிப்பகம், 2, காவேரி சாலை, திருச்சி - 620 002. விலை ரூ. 100/-

பதிற்றுப் பத்து - உரை: அ. ஆலிஸ்

சங்க இலக்கியங்கள் என்பவை கதையோ, கற்பனையோ, வெறும் காவியமோ அல்ல. 'போரென்றால் புலிக்குணம், பொங்குமின்பக் காதலென்றால் பூமணம், புகழுக்குரிய மானமென்றால் உலகுக்கே ஒரே இனம்' என்று வாழ்ந்த தமிழரின் சமூகத்தை, உறவுகளை, நெறிகளை விவரிப்பவை. தமிழகத்தின் சேர நாட்டு சங்க கால வரலாற்றை, தமிழ்ச் சுவையோடு விவரிக்கும் நூல். தமிழாராய்ச்சிக்கும், மாணவர்க்கும், ஆய்வுக்கும் மிக உதவும் பதிப்பு.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை - 600 098. (சங்க இலக்கிய நூல்கள் தொகுப்பு) விலை ரூ. 3000/-

மலர்மன்னன் கதைகள்

கடந்து போன காலத்தை மீண்டும் வாழ்ந்து பார்க்கிற அனுபவத்தைத் தருவது எழுத்து மட்டுமே. எழுத்தையே வாழ்க்கையாக்கிக் கொண்டவரின் நீண்ட பயணத்தில், அனுபவங்களையும், பாதிப்புகளையும், 'கல்கி' உட்பட பல இதழ்களில் சிறுகதையாக வடித்தவற்றின் அரை நூற்றாண்டுத் தொகுப்பு.

அமுதசுரபி, ஏ-7, 2வது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600 102. விலை ரூ. 100/-

- விஷ்வக்



கண்ணாடிக் கல்வெட்டுகள் 13

காவல் மரம்-1

பா. விஜய்

காலம்
2ஆம் நூற்றாண்டு

தமிழகத்தின் வயல்வெளிகளில்
நெல்லுக்கு பதில்
முத்து விளைந்த காலம்

புல்லுக்கு பதில்
பவழம் கொழித்த காலம்!

இமயம் தமிழகத்திற்கு
இடுப்பளவு இருந்த
இறுமாப்பான காலம்!

போர்க்களத்தில்
கறை படிந்த கத்திகளைத்
தேன் குளத்தில்
கழுவி வைத்து விட்டு

போகக் குளத்தில்
இறங்கிக் குளித்த பிறகு
பக்திக் குளத்தில்
நீராடினர் தமிழர்கள்!

வில் - மீன் - புலி
தமிழ் மண்ணில் பறந்த
ஒரு கட்டத்தில்...

ஆனமலைப் பகுதி!

பொள்ளாச்சிக்கு அருகே
மலைசார்ந்த இடம்!

தென்னிந்தியாவின்
மிக உயர்ந்த சிகரம்!
ஆழியாற்றங் கரையில்
அமைந்த ஒரு நகரம்!

கொன்கான மன்னன்
வேணிர் குலவண்ணன்
அவன் பெயர் நன்னன்!

நன்னன் ஒரு
போர்வெறி பிடித்த
மன்னன்!

ஆனைமலைப் பகுதியை
அரசாண்ட போதிலும்
நன்னனின் கண்கள்
சேரமன்னன் நார்முடிச் சேரலின்
கைவசமிருந்த
பாலக்காட்டுக் கணவாய் மீதே
பதிந்திருந்தன!

நன்னனின் படைகள்
பாலக்காட்டுக்
கணவாயை
பலவந்தமாய்க் கைப்பற்றுவதும்...
சேர மன்னன் அதை மீட்பதும்
சங்க கால அரசியல்!

பாலக்காட்டுக் கணவாய் என்பது
சங்க காலத்திலேயே
மூன்று தேசிய நெடுஞ்சாலைகளை
சங்கமிக்க வைத்திருக்கிறது!

முதல் வழி!
பேரூர் - அவினாசி ஈரோடு - சேலம்
வழியே ஸ்ரீரங்கப்பட்டணத்தைத்
தொட்டது!

இரண்டாம் வழி!
பேரூர் - சூலூர் - பல்லடம் -
காங்கேயம்
கரூர் - திருச்சி - வழியே



காவிரிப்பூம்பட்டினத்தைத்
தொட்டது!

மூன்றாவது வழி
ஆனைமலை - உடுமலை - பழனி
திண்டுக்கல் - வழியே
இராமேஸ்வரத்தைத்
தொட்டது!

நன்னன்
சினத்தில் தலைவன்
குணத்தில் குரூரன்!
மனத்தில் அசுரன்!

கொன்காண மன்னனுக்கு
உயிரைவிட
உச்சமாய் இருந்தன
மூன்று அம்சங்கள்!

நாட்டின் கொடி
பட்டத்து யானை
காவல் மரம்!

இம்மூன்றிற்கும் யாரால்
எது நேர்ந்தாலும்
காவலன் மானத்தைக்
காலால் மிதித்ததாய்க் கருதப்படும்.

நன்னனின் காவல் மரம்
ஒரு மாமரம்
அந்த மாமரத்துக்கு நன்னன் தான்
சாமரம்!

காவல்மரத்தின்
இலை ஒன்றைப் பறித்தாலும்
அவன்
தலைதன்னைத் துண்டிக்கும்
தண்டனை தருவான் நன்னன்!



வேளாளக் குடியினர்
விதைத்து அள்ளிய நெல்லும்
நெல்லை விற்ற பொன்னும்
பொக்கிஷ நிலவறையில் கிடந்தன!

ஆனால் நன்னனின்
காவல்மரத்துக்கு
நன்னனை விடவும் காவல்
கூடியிருந்தது!

அந்த ஊரில்
மன்னனுக்கு இணையாய் சில
வணிகர்களும் இருந்தனர்!
வீரர்களும் இருந்தனர்!

அதிலே ஒருவர்தான்
மாமூலனார் எனும்
தனவந்தர்!

நன்னனுக்கு
கற்கோட்டை இருந்ததென்று
கம்பீரப்பட்டால்
மாமூலருக்கு
நெற்கோட்டை உள்ளதென்று
நெஞ்சு நிமிர்த்தலாம்!

அந்த வணிகருக்கு ஒரு
வாலிப மகள்!
அந்த வியாபாரிக்கு ஒரு
மரகத வீணை!
நங்கை!
நயமான அழகாலும்
வியக்க வைத்த கலவை!

முத்துக்கள் பதித்த
ராஜாங்க ஆடைகளில்
புதைவதை விட...
இளந்தோழிகளோடு
சேர்ந்து
ஆனைமலைக்
குயிலாகவே
அவள் பறந்தாள்!

அவள் கண்கள்
ஆழியாற்றங்கரையோரம்
ஆஜானுபாகுவாய்
நன்னனைப் போலவே
படுபயங்கரக் கம்பீரமாய்
நிற்கும்
மாமரத்தையே நோக்கும்!

ஒரு குயிலும்
ஒரு வண்டும்
ஒரு விரலும் தீண்டிடாத
பாதுகாப்பில் நிற்கும்
காவல்மரம் நங்கைக்கு ஒரு
தெய்வ மரம்!

ஆனால் அந்தக் காவல்மரமே
அவள் தலைவிதியை மாற்றும்
ஏவல்மரம் என்று
எப்போதும் நினைத்ததில்லை!

(வளரும்)

தாய் மனை

வே. குருநாதன்

நமது கிராமங்களில் இன்றைக்கும் சில வீடுகள் 'வாழ்ந்து கெட்ட வீடுகள்' என்று பேசப்படுவதுண்டு.

"ஒரு காலத்தில் எப்படி இருந்த வீடு... ஹூம்... இன்னைக்கு இப்படி இருக்கு..."

என்று அந்த வீட்டைக் கடந்து செல்பவர்கள் பெருமூச்சு விடுவதுண்டு. அந்தப் பெருமூச்சு என் வீட்டுச் சுவரிலும் படாமல் இல்லை. என் முன்னோர்கள் வலிமையாய் வாழ்ந்ததற்கான தடயங்கள் முற்றிலும் அழிந்துவிடாமல், ஒன்றிரண்டு மிச்சமிருந்தன. அதில் ஒரு முக்கியமான மிச்சம்தான், எங்கள் வீட்டுக் கொல்லைக் கிணறு.

நின்று நீர் இறைப்பதற்கு வசதியாய் அகலமான படிக்கல்லையும் கூட தன் உச்சியில் கொண்டிருந்த பெருந்தன்மை அந்தக் கிணற்றுக்கு உண்டு.

ஆடு, மாடு, கோழி... மனிதர்களும்கூட அந்தக் கிணற்றில் தவறி விழுந்திருக்கிறார்கள். விழுந்ததை விழுங்கி ஏப்பம் விட எண்ணாமல்... பத்திரமாய்த் திரும்பத் தந்து, தன் நேர்மையை நிறையத் தடவை நிருபித்திருக்கிறது எங்கள் கொல்லைக்கிணறு.

கொஞ்சம் உப்புத் தண்ணீர்தான். என்ன செய்வது? கடல் நீரே உப்பாயிருக்கும்போது நான் எம்மாத்திரம் என்று தன்னைத்தானே தேற்றிக் கொள்ளுமே தவிர...

தாழ்வு மனப்பான்மை அந்தக் கிணறுக்கு வந்ததேயில்லை. இருக்கிற தண்ணீரை இல்லை என்று சொல்லாமல், வாளிகளுக்கெல்லாம் வள்ளலாய் வாரி வழங்கிய பாரம்பரியம் அதற்கு உண்டு.

கடையில் எண்ணெய் வாங்கி வரச் சொல்வாள் என் அம்மா. வாங்கப் போகும்முன் ஜாடியிலிருக்கும் கொஞ்ச எண்ணெயை அந்தக் கிணற்றுக்குள் விட்டு...

அது காட்டும் வர்ண ஜாலங்களை 'வாவ்' என்று கைதட்டி வியந்த கால்டவுசர் வயசிலிருந்தே அந்தக் கிணறு என்னைக் கவர்ந்தது.

பருத்தி வத்தல் வியாபாரியும், பலசரக்குக் கடை முதலாளியுமான என் அப்பா, மூன்று வருடங்களுக்கு ஒரு முறை அந்தக் கிணற்றைத் தோண்டுவதுண்டு. தூர் வாருவதும் உண்டு. அப்போது வெளியில் வந்து விழும் பொருள்களில் அநேகமானவை, நான் தொலைத்துத் தேடி அழுத விளையாட்டுப் பொருள்களாய்த் தான் இருக்கும்.

'இந்தா இருக்கு பாத்தியா? நான்தான் வச்சிருந்தேன்... எடுத்து விளையாடு...'

என்று எனக்கு இன்ப அதிர்ச்சியைத் தரும் அந்தக் கிணறை மனசுக்குள் நேசித்தேன்.

அம்மாவிடம், அப்பாவிடம், கம்மாப் பட்டி அத்தையிடம், கழுகுமலை மாமாவிடம், அந்தக் கிணற்றின் வயசும், வரலாறும் கேட்டுக் கேட்டு பிரமித்துப் போவேன்.

வீட்டு முன்னால் மரம் வளர்க்க மறந்த என் அப்பா, அந்தக் கிணற்றை வளர்த்தது உண்மை. என் அப்பாவின் செல்லக்கிணறாகவே வளர்ந்தது அந்தக் கொல்லைக் கிணறு.

செல்வம், செல்வோம் என்று சென்ற பின், பச்சை இலைகளாய் இருந்த என் அப்பா, அம்மா, அத்தை, மாமா, பழுத்த இலைகளாய் உதிர்ந்து பறந்தபின்,

நான், என் மனைவி, என் பிள்ளைகள் என்று பசுமையாய்த் துளிர்விடும் இந்த

'ஒரு சொட்டுத் தண்ணி இல்லாம மேடாகிக்கிட்டே வாரனப்பா... கொஞ்சம் தோண்டக் கூடாதா? தூர் வாரக் கூடாதா?'



நாட்களில் அப்பாவின் பணபலம் என்னிடம் இல்லை. அவர்களுக்கிருந்த ஆள் பலம் எனக்கு இல்லை. செருக்கும் சிம்மாசனமும் தொலைந்து... செங்கல் திண்ணை மட்டுமே மிஞ்சிய வீட்டில்...

வறண்டு போனது நான் மட்டுமல்ல... அந்தக் கிணறும் கூடத்தான். இருவருமே வாழ்ந்து கெட்டவர்கள் ஆனோம்.

'ஒரு சொட்டுத் தண்ணி இல்லாம மேடாகிக்கிட்டே வாரனப்பா... கொஞ்சம் தோண்டக் கூடாதா? தூர் வாரக் கூடாதா?'

'உன் கஷ்டத்தோட கஷ்டமா என்னையும் கொஞ்சம் கவனியேண்டா கவிவரதா...'


என் கனவில் அந்தக் கிணறு வந்து அழுதது. காலையில் என் மனைவியிடம் சொல்லிக் கண் கலங்கினேன்.

"வசதியிருந்தா ஒரு போர்வெல் போடலாமே தவிர, இந்தக் கிணறை எதுக்குக் கட்டி அழுணும்ங்கறீங்க இன்னமும்? எல்லாம் உங்க அய்யாவோட போகட்டும்.. இப்பக் கிணத்துல யார் இறைக்கிறாங்க? நீங்க மண் அடிச்சுப் போட்டு அந்தக் கிணற்றை மூடவேண்டும். அதுக்கு ஐம்பது லாரி மண்ணும் காணாது. மூடவே செலவு எகிறிடும்... நான் சொல்றபடி கேளுங்க. கான்கிரீட் போட்டு மூடிப் பூசிருவோம். கக்கூசுக்கோ அல்லது சாக்கடைக்கோ, ஒரு செப்டிக் டேங்குதான் அந்தக் கிணறு. இனி செப்டிக் டேங்கா மட்டும்தான் அதை நாம யூஸ் பண்ணணும்... அதுக்குதான் அது யூஸ் ஆகும்..."

திரும்பத் திரும்ப அந்தப் பெயரையே எங்கள் கிணற்றுக்குச் சூட்டி மகிழ்ந்த என் மனைவியின் கன்னத்தில் பளார் என்று கொடுத்தேன். பிறகும் பார்வையால் ஓங்கினேன். பயந்து பின் வாங்கினாள் என் மனைவி.

"என்ன சொல்லிட்டேன்? உங்களுக்கு ஏன் அறிவே இல்லாமப் போகுது? சுய புத்திதான் இல்ல... சொல் புத்தியுமா இருக்காது. தெரியாமத்தான் கேக்கேன்? இந்த வெறுங்கிணறு ஏன், எதுக்காம் உங்களுக்கு? யாராவது விழுந்து செத்தாதான் உங்களுக்கு அறிவு வரும்.

"ஏன்டா மூடாம வச்சிருக்கேன்னு ஊரோட வந்து உங்க முகரையில சாத்தினாதான் புத்தி வரும்... அடிக்கிறாரு அறிவில்லாம..."



அதற்கு மேலும் என்னைப் பற்றி ஏதோ முணுமுணுத்தபடி, கன்னம் தடவிக் கொண்டே நகர்ந்தாள் அவள்.

அடிக்கடி 'போர்வெல். போர்வெல்..' என்று அவள் புலம்பும் அந்த வார்த்தையின் மீதே எனக்கு வெறுப்பு வந்தது.

வாளியை கிணற்றில் விட்டு... தண்ணீர் மடியில் அந்த வாளி பணிவாய், பவ்யமாய் விழுந்து வணங்குகையில், சரி... சரி... முகர்ந்து கொண்டு போ... என்று கிணறே சொல்வது போன்ற மெல்லிய ஓசையுடன்...

பூவாய் அந்த நீரை அள்ளி, நீருக்கே வலிக்காமல், நீர் மட்டம் விட்டு எழுந்து... மெல்ல மேலேறும் வாளியின் நாகரிகம் போர்வெல்லுக்கு வருமா?

முரட்டுத்தனமாய், மூர்க்கத்தனமாய் ரத்தத்தை உறிஞ்சுவது போல...

வாளியை அனுப்பி, அதன் மடியில் பிள்ளையாய் விழுந்து வணங்கி வாங்கி வரும் தண்ணீரே எனக்குச் சம்மதம். இதனால்தான் போர்வெல்லை மறுத்து... இன்னமும் இறைகிணற்றையே விரும்புகிறது என் மனம். சாக்கடையை ஏற்கெனவே அந்தக் கிணற்றுக்குள் விட்டிருந்த என் மனைவியின் மகா பாதகத்தை அப்பொழுதுதான் கண்டுபிடித்தேன்.

அழுகை வந்துவிட்டது எனக்கு. அம்மாவின் இடுப்பில் இருந்தபடியே நான் எட்டிப் பார்த்த கிணறு. அவள் முகத்தோடு என் முகத்தையும் எங்கள் தலைக்கு மேலிருக்கும் வானத்தையும்

"தலைவருக்கு இப்பல்லாம் நல்ல கலெக்ஷன் கிடைக்குது போலிருக்கு..."
"எப்படிச் சொல்றே?"
"வேஷ்டிக்கு கூட பாக்கெட் வச்சு தைச்சுக்கிட்டு இருக்காரு!"
- வி. கிருஷ்ணகுமார்

மேகத்தையும் கூட பதிலுக்குக் காட்டி, என் பாலப் பருவத்தை மகிழ்வித்த கிணறு.

சிரட்டையில் சணல் கட்டி நான் இறைத்த போதும். 'களுக்' என்ற சின்னச் சிரிப்புடன், அந்தச் சிறட்டைக்கும்கூட ஐம்பது மில்லி தண்ணீர் அனுப்பி வைத்த தாய் மனசுக் கிணறு.

இன்று வெள்ளெழுத்துக் கண்ணாடியும், வெளுத்த தலை முடியுமாய் வந்து போகும் கோவில்பட்டி ரத்தினம் அக்கா.

ஒரு காலத்தில் இரட்டைச் சடைகளில் ஒன்று மார்பிலும் முதுகிலுமாய் மாறி மாறி விழ...

தெற்கு வீட்டு மதினியுடன் போட்டி போட்டுத் தண்ணீர் இறைத்த நாளில் அவர்களிடம் ததும்பி வழிந்த இளமை அழகை, இன்னும் என் நினைவில் செதுக்கி வைத்திருக்கும் கிணறு...

பெரியப்பா... பெரியம்மா, பேட்டை ஆச்சி, கரண்டைத் தாத்தா...

இந்தப் பெரிசுகளெல்லாம் இறந்த போது... அந்த இரவுகளில் எங்கள் வீட்டு இளசுகள் விடிய விடியச் சிரிப்பும் விளையாட்டுமாய், தண்ணீர் இறைத்துச் சுமந்த போது... அவர்களின் சிரிப்புக்குத் துணைச் சிரிப்பாய் தானும் 'தபுக்கு... தபுக்கு' என்று சிரித்துச் சிரித்துத் தண்ணீர் அனுப்பிய கிணறு.

எங்கள் பரம்பரை, பாரம்பர்யத்துடன் கைகோத்துக் கொண்டு கடைசி வரையில் எங்கள் வம்சத்துக்குத் தண்ணீர்த் துணையாய் இருந்த கிணறு...

இன்றைக்கு எனது இயலாமையால், தோண்டப்படாமல், தூர் வாரப்படாமல்.. வெறுங்கிணறாய்க் காத்துக் கிடந்து.. கடைசியில் தண்டக் கிணறு என்று என் மனைவியிடம் பெயர் வாங்க மனசில்லாமல், அவள் அனுப்பி வைக்கும் சாக்கடையையும் ஏற்றுக் கொண்டதே...

இந்தத் தாயுள்ளம் கொண்ட கிணற்றை எப்படி மூடுவது? யோசித்துத் தவித்தேன். மூடி விடுவதுதான் அதற்குச் செய்யும் மரியாதை.

என்னைச் சேர்த்து ஒரு ஏழு தலைமுறை படித்த இதிகாசம் அது. முடிந்து விட்டது. அந்த ஆழமான புத்தகத்தை இனி மூடிவிடுவதுதான் முறை...

சாக்கடை அதன் தலையில் விழவில்லை. என் தலைமுறையின் தலையில் விழுகிறது. விழ விடக்கூடாது. மூடிவிடுவதென்று முடிவெடுத்தேன்.

எப்படி மூடுவது? மூடுவதென்றாலும் இருபது லாரி மணல் அடிக்க வேண்டும். ஏகப்பட்ட செலவாகுமே... கையில் கன்னம் தாங்கி, கவலையுடன் யோசித்தேன்.

பின் வீட்டுக்காரன் ஒரு பெரிய வீட்டுக்காரன்தான். குருட்டு அதிர்ஷ்டத்தில் கோடீஸ்வரன் ஆனவன். பழைய வீட்டை இடித்துத் தரைமட்டமாக்கி விட்டு... புது வீடு கட்டப் போகும் தன் ஆசையைத் தெரிவித்தான். பொறாமைப்படாமல் அவன் ஆசையை ஆசிர்வதித்தேன். அதற்குப் பரிசாய் அவன் ஒரு காரியம் செய்தான்.

இடிந்து குவிந்த கூரையையும், சுவர்களையும் அள்ளி அள்ளிச் சுமந்து என் கிணற்றை மூடினான்.

ஒவ்வொரு தலைமுறையையும் வழியனுப்பி வைத்து, அடுத்த தலைமுறைக்கு ஆதரவாய், ஆறுதலாய்... வழித் துணையாய் வாழ்ந்து வந்த கிணறு... கடைசியாய் எனது தலைமுறையிடம் விடை பெற்றுக் கொண்டு...

'வரட்டுமா? வரட்டுமா?' என்று கேட்பது போல், மெல்ல மெல்ல மண் அடியில் மறைந்தபோது... என் மனசு மௌனமாய் அழுதது.

கோடானு கோடி குடங்கள் தண்ணீர் கொடுத்த அந்த வள்ளல் வாழ்ந்த இடம், சமதளமாய், கால் மிதி படும் கல்லறையாய் மாறிய பிறகு... நன்றிக் கடனாய் நாலு சொட்டுக் கண்ணீரை மட்டுமே என்னால் சிந்த முடிந்தது. ●

– சீதாராம் எச்சூரி

சீதாராம் எச்சூரி! மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர். காங்கிரஸ் கூட்டணி அரசை வெளியிலிருந்து ஆதரிக்கும் இடது சாரி முன்னணியின் முக்கியத் தளபதி. "மத்திய அரசை வழிநடத்தும் வகையில் கையில் சாட்டையுடன் வலம் வருபவர்" என்று பா.ஜ.கவால் விமர்சிக்கப்படும் எச்சூரி, 'கல்கி'க்கு அளித்த சிறப்புப் பேட்டி:

வெளியிலிருந்து ஆதரிப்பதற்கு பதிலாக அதிகாரத்திலும் இடது சாரி முன்னணி பங்கு கொள்வதில் உள்ள தடை என்ன?

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, கடந்த பாராளுமன்றத் தேர்தலை மூன்று நோக்கங்களோடு சந்தித்தது. ஒன்று, மதச்சார்பான வகுப்புவாதச் சக்திகளை முறியடித்து அந்தச் சக்திகள் மீண்டும் மத்தியில் ஆட்சி அமைக்காமல் தடுப்பது. அடுத்து மத்தியில் ஒரு மதச்சார்பற்ற (செக்குலர்) அரசை அமைக்க முயற்சி செய்வது. மூன்றாவதாக பதினான்காவது பாராளுமன்றத்தில், இடது சாரி முன்னணியின் பலத்தை உயர்த்துவது. இந்த மூன்று நோக்கங்களையும் தற்போது அடைந்து விட்டோம் என்று ஒரு திருப்தியுடன் என்னால் சொல்ல முடியும்.

ஆனால் ஒரு விசித்திரமான நிலை என்னவென்றால், இடது சாரி முன்னணி வெற்றி பெற்ற 61 இடங்களில், 54 தொகுதிகளில் காங்கிரஸை முறியடித்து வென்றிருக்கிறோம். இந்த நிலையில் காங்கிரஸ் கூட்டணியில் சேருவது என்பது, எங்களுக்கு வோட்டுப் போட்ட மக்களை அவமரியாதை செய்வது போலாகும். மேலும் காங்கிரஸுடன் அடிப்படையாகவே சில கொள்கைகளில் நாங்கள் முரண்பட்டிருக்கிறோம். அதே சமயம் மத்தியில் மதச்சார்பற்ற அரசைக் கொண்டு வருவது எங்கள் லட்சியம். தேர்தல் முடிவுகளை அளவுகோலாகக் கொண்டு பார்த்தால், காங்கிரஸ் தலைமையிலான ஒரு கூட்டணி அரசே சாத்தியம் என்பது நிதர்சன



அதிரடி!

"ஜெ. அரசு கலைப்பு இல்லை!"

மான நிலை. எனவேதான், ஒரு குறைந்த பட்ச பொதுத் திட்டத்தின் அடிப்படையில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசை, வெளியிலிருந்து ஆதரிப்பது என்று முடிவெடுத்தோம்.

எங்கள் கொள்கைகளில் சமரசம் செய்து கொள்ளாமல், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற இதுதான் சிறந்த வழி என்று தீர்மானித்தோம்.

நீங்கள் பங்கு கொண்டால் ஸ்திரத் தன்மை கூடுமே!

கடந்த கால வரலாற்றைப் பார்த்தாலே, 1977ல் மொரார்ஜி அரசு, 1989ல் வி.பி.சிங் அரசு, 1998ல் தேவேகவுடா அரசு - இந்த மூன்று அரசுகளையும் மார்க்ஸிஸ்ட் வெளியிலிருந்து ஆதரித்தாலும், கவிழ்வதற்கு நாங்கள் காரணம் அல்ல. காங்கிரஸ் கூட்டணி அரசின் ஸ்திரத்தன்மை, அது குறைந்த பட்ச பொதுத் திட்டத்தின் அடிப்படையில் செயல்படுவதில்தான் இருக்கிறது.

பொறுப்பை எடுத்துக் கொள்ளாமல் இடது சாரிகள் அதிகாரத்தை அனுபவிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைப் பற்றி...

உண்மை நிலை என்னவென்றால், மார்க்ஸிஸ்ட் இயக்கம் அதிகாரத்தின் எந்தப் பலனையும் அனுபவிக்காமல், மத்தியில் மதச்சார்பற்ற அரசை நீட்டிக்க வைப்பதால், தனது கடமையைச் செய்து கொண்டிருக்கிறது.

இடதுசாரிகள் பொருளாதார சீர்திருத்தத்துக்கு எதிர்ப்பாளர்களா?"

பொருளாதார சீர்திருத்தத்தைக் குறித்த மார்க்ஸிஸ்ட் அணுகுமுறையை தவறான நோக்கிலும், வேண்டுமென்றே திரித்துக் கூறுவதையுமே சிலர் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். மக்கள் நலனை அடிப்படையாக வைத்து எடுக்கப்படும் எந்த சீர்திருத்தத்தையும் நாங்கள் ஆதரிப்போம். அதைவிட்டுவிட்டு, விவசாயிகளின் நலன்களை பாதிக்கும் வகையிலும், தனிப்பட்ட நிறுவனங்கள் மட்டும் லாபம் ஈட்டும் வகையிலும் சீர்திருத்தம் இருந்தால் எதிர்ப்போம்.

> **விவசாயிகளின் நலன்களை பாதிக்கும் வகையிலும், தனிப்பட்ட நிறுவனங்கள் மட்டும் லாபம் ஈட்டும் வகையிலும் சீர்திருத்தம் இருந்தால் எதிர்ப்போம்.**

இன்றையச் சூழலில் உலகப் பொருளாதாரத்தின் தாக்கம் எந்த நாட்டின் மீதும் விழாத வகையில் பாதுகாப்பாகவும், தனித்தன்மை பெற்றதாகவும் இருக்க முடியாது. ஆனால் நமக்கு வரும் நேரடி அந்நிய முதலீடு (FDI) என்பது, பரஸ்பரம் நமது பொருளாதாரத்தை உயர்த்துவதாகவும் அதே சமயத்தில் முதலீடு செய்யும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கு லாபம் ஈட்டுவதாகவும் இருக்க வேண்டும். மூன்று நிபந்தனைகளுடன் கூடிய அந்நிய நேரடி முதலீட்டை, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் வரவேற்கிறது. ஒன்று, அது நமது உற்பத்தித்திறனை அதிகரிக்க வேண்டும். (உள்நாட்டு நிறுவனங்களைக் கையகப்படுத்துவது மட்டுமே இதற்கான வழி அல்ல) அடுத்து, நேரடி முதலீடு என்பது, நமது பொருளாதாரத்தை தொழில் நுட்ப அடிப்படையில் மேம்படுத்த வேண்டும். மூன்றாவதாக, வேலை வாய்ப்பை உருவாக்க அது பயன்பட வேண்டும்.

இப்படி மூன்று நிபந்தனைகளுக்கு உட்பட்ட நேரடி முதலீடு, நமக்கு நன்மை தரக் கூடியது. இதைவிட்டு விட்டு, தகவல் தொடர்பு போன்ற கேந்திரமான துறைகளில் நேரடி முதலீட்டை அனுமதிப்பது என்பது, நமது தேசப் பாதுகாப்புக்கு ஆபத்து

விளைவிக்கும். தேச நன்மையை உத்தேசித்து இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இந்த அடிப்படையில் தான், அந்நிய நேரடி முதலீட்டு விவகாரங்களை நாங்கள் ஆதரிப்போம்; அல்லது எதிர்ப் போம்.

மத்தியில் சீர்திருத்தத்தின் சில அணுகு முறைகளை எதிர்த்தாலும், மே. வங்கத்தில் கதவை தாராளமாக திறந்து வைத்திருக் கிறீர்களே!

மேற்கு வங்க அரசைப் பொறுத்த மட்டில், மேற்சொன்ன அணுகுமுறையைத் தான் நாங்கள் கடைப்பிடிக்கிறோம். எனவே நாங்கள் இரட்டை நிலையை எடுக்கிறோம் என்றோ, அல்லது இரண்டு குரல்களில் பேசுகிறோம் என்றோ சொல்வது தவறு. ஆனால் மார்க்ஸிஸ்ட் இயக்கத்தைப் பற்றி இது போன்ற அவதூறுகளைக் கிளப்பி விடுகிறார்கள்.

மன்மோகன் சிங் அரசின் செயல் பாடுகள் உங்களுக்குத் திருப்தி தானா?"

மன்மோகன் சிங் அரசைப் பற்றி எங்கள் மதிப்பீட்டைச் சொல்ல, இன்னும் சிறிது காலம் தேவை. ஏறத்தாழ குறைந்த பட்ச பொதுத்திட்ட அடிப்படையில் அரசு செயல்படுகிறது. இதற்கு மாறாகவும் பல விஷயங்கள் பேசப்படுகின்றன. இணக்க மான செயல்பாடுகளின் மூலம் பிரச்னை களைத் தீர்த்துக் கொள்ள முடியும். காங் கிரஸ் தலைமையில் ஒரு கூட்டணி அரசு அமைந்திருப்பது இதுவே முதன்முறை. அந்த அடிப்படையில் பார்த்தால் துவக்கம் நன்றாகவே இருக்கிறது.

சிதம்பரத்தின் பட்ஜெட் எப்படி?

குறைந்த பட்ச பொதுத் திட்டத்தின் அடிப்படையில், மக்கள் நன்மையை நோக்கமாகக் கொண்டு போடப்பட்ட பட்ஜெட்டை, பொதுவாக நாங்கள் வர வேற்கிறோம். ஆனால் பட்ஜெட்டில் சொல் லப்பட்ட திட்டங்களுக்குப் போதிய நிதி ஒதுக்கீடு செய்யாததைக் கண்டிக்கிறோம்.

மேற்கு வங்க காங்கிரஸ் தலைவர் பிரியரஞ்சன் தாஸ் முன்ஷி, 'மத்திய அரசை கலைத்துப் பாருங்கள்' என்று உங்களுக்கு சவால் விட்டிருக்கிறாரே!

நாங்கள் தனிப்பட்ட மனிதர்களின் பேச்சுகளையும், செயல்களையும் மதிப்பீடு செய்வதில்லை. கொள்கைகளின் அடிப் படையில்தான் ஒவ்வொரு விஷயத்தையும் அணுகுகிறோம்.

மத்திய அரசின் பலவீனம் தான் என்ன?

மத்திய அரசின் பலவீனம் என்று நாங்கள் கருதுவது, குறைந்த பட்ச பொதுத்திட்டத்தை அமல்படுத்துவதில் உள்ள தடுமாற்றம், தள்ளாட்டம் தான். இதைத் தவிர்த்தால், தாண்டினால், அரசு பலப்படும்; நிலைப் படும்.


உங்கள் கட்சியின் மூத்த தலைவர் பிரகாஷ் கரத் போன்றவர்கள், மத்திய அரசை மென்மையான முறையில் அணுகு வதும், நீங்கள் காரசாரமாக விமர்சிப்பதும் வித்தியாசமாக இருக்கிறதே?


சி.பி.எம்.ஐப் பொறுத்த மட்டில், தனிப் பட்ட தலைவர்களின் யுக்தி என எதுவும் கிடையாது. கட்சியின் எல்லாத் தலைவர் களும் பிரதிபலிக்கும் கருத்துகள் என்பது கூட்டாக எடுத்த முடிவுகளின் வெளிப் பாடுகளே!

356ஐப் பயன்படுத்தி தமிழக அரசைக் கலைக்க வேண்டும் என்று தமிழ்நாட்டில் கோஷம் எழுந்திருக்கிறதே?

தமிழ்நாட்டில் அரசியல் சட்டப் பிரிவு 356ஐ அமல்படுத்துவது என்ற செயல் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

— ப்ரியன்





ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.
எமது புதிய கிளை நிறுவனம் : எண். 7, 30வது தெரு, தில்லைகங்கா நகர்,
நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 16 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு Cheque / DD / MO' மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

சுவாமி ஸ்ரீ அம்பிகானந்தா — நல்லாசியுடன் — A.ராஜாபக்கிரிசாமி MSc., MEd.,

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமான்வரி விலக்கு உண்டு.


சென்னை, நுங்கம்பாக்கத்தில் உயர்தட்டு அடுக்குமாடிக் குடியிருப்பு அமானுஷ்ய அமைதியில் உறைந்திருந்தது. படபடத்த இதயத்துடிப்பை கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்து, அழைப்பு மணியை அழுத்திய அடுத்த வினாடி, உள்ளே ஓர் இளம்பெண்ணின் இனிய சிரிப்பொலி. ஆனால் கதவு திறக்கப்படவில்லை. பொறுமையிழந்து மீண்டும் அழைப்பு மணியை அழுத்தினால், மீண்டும் அதே சிரிப்பொலி. உள்ளே போவதா வேண்டாமா என்ற குழப்பத்தோடு, "ஹலோ" என்றபடி எட்டிப்பார்த்தால், வரவேற்பறையில் இருந்த சிவப்பு நிற சோபாவில், ஒரு மெகா கரடி பொம்மை, வெள்ளை வெளேர் என்று கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தது. அந்தக் கணத்தில் அங்கே நிலவிய அமானுஷ்யச் சூழ்நிலை, இந்த இடத்தை இப்போதே காலி செய்து விடு என்று மூளையில் எச்சரிக்கை மணி அடித்தது. "வந்த வேலை முடியாமல் இங்கிருந்து அடுத்த அடியை எடுத்து வைக்க முடியாது மிஸ்டர்" என்று முதுகுக்குப் பின்னால் அதட்டலான பெண் குரல்! இடுக்கிட்டுத் திரும்பினால் முகம் எது, தலை எது என்ற தெரியாமல் கோ-ஆப்டெக்ஸ் பருத்திப் போர்வைக்குள், நெட்டுக்குத்தாக ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. பட்டென்று நெற்றியில் அரும்பிய பய வியர்வையைத் துடைத்துக் கொண்டு, "ஷமாதானே?" என்றோம்....


"கண்டுபிடிச்சுட்டீங்களே!" என்று வியந்தபடி போர்வையை விலக்கினார். ஆச்சர்யம்! ஒப்பனை இல்லாமலேயே அழகாக இருந்தார் ஷமா. 'ஷாக்' படத்தில் ஆவியாக வந்து, தமிழர்களை அதிர வைத்த அதே ஷமா. ஷமா என்றால் அழகாம்!

"சிறு வயது முதலே த்ரில்லாக ஏதாவது செய்து கொண்டேயிருக்கத் தோணும். ஆவி, பேய்ப் படம் என்றால் விரும்பிப் பார்ப்பேன். பள்ளியில் படிக்கும்போது விட்டலாச்சார்யா படம் பார்த்து, பயத்தில் காய்ச்சலே வந்திருக்கிறது" என்று சினேகமாய்ச் சிரித்தவர், "இருங்க, அப்பா ஏற்றுமதி செய்யும் ஸ்பெஷல் தேயிலையில் தேநீர் போட்டு எடுத்து வருகிறேன்' என்றபடி கொலுசுகள் ஜல் ஜல் எழுப்ப, உள்ளே போனார். அந்த நேரம் பார்த்து, சுவரிலிருந்த டிஜிட்டல் கடிகாரத்தில் திடீர் இசை. மதியம் பன்னிரண்டு மணி ஆகிவிட்டதை அறிவிக்கும் ஓசை. நல்ல வேளையாக சில நிமிடங்களில் திரும்பி வந்தார் ஷமா.

அவர் தந்த தேநீரைப் போலவே அவரது பேச்சிலும் இனிமை. "நான் அக்மார்க் தமிழ்ப் பொண்ணு. ஆனால் படித்தது எல்லாம் கேரளாவில். 'நீ நடிக்கவும் முயற்சி செய்யலாமே'ன்னு உற்சாகப்படுத்தியது நடிகர் அர்ஜுன். முதலில் மாடலிங் செய் என்று வழி காட்டினார். எதிர்பார்க்கவே இல்லை. வரிசையாக விளம்பர வாய்ப்புகள். ஒரு கட்டத்தில் வேலையை விட வேண்டி வந்துவிட்டது என்றவர், "நிறைய நடித்துக் களைத்து விட்டு, ஆவியாக நடிப்பது தான் தமிழ் நடிகைகளின் வாடிக்கை! நான் ஆவியாக அறிமுகமாகி, இனி கதாநாயகியாக கலக்கப் போகிறேன். அவ்வளவுதான் வித்தியாசம்" என்று கண்ணைச் சிமிட்டுகிறார்.

ஆவியாக நடிக்க வைத்த தியாகராஜன், அடுத்து இயக்கும் படத்தில் இரண்டாவது கதாநாயகியாக களமிறங்கிவிட்டார். இது தவிர மலை





யாளம், தெலுங்கு இரண்டிலும் தலா இரண்டு படங்கள். மீரா நாயர் இயக்கப் போகும் இந்திப் படத்தில் ஆதிவாசிப் பெண்ணாகவும் நடிக்கப் போகிறாராம். இதற்கிடையில், எம்.ஏ. சோஷியாலஜி படிப்பு வேறு.

"எல்லோரும் வியப்பாகக் கேட்கிறார்கள். எப்படி ஆவியாக நடிக்க ஒப்புக் கொண்டாய் என்று. இப்படிக் கேட்க வைத்திருப்பதுதானே எனது வெற்றி. தவிர ஷாக் வெற்றிப் படமாகிவிட்டது. அப்புறமென்ன?" எனும் ஷமா, இலங்கை அரசின் அழைப்பை ஏற்று, அங்கு நடந்த தேசிய திரைப்பட விழாவில் அரை மணி நேர மௌன நடன நாடகம் நடத்தி திரும்பியிருக்கிறார். சினிமா, பரதம், மாடலிங் மூன்றிலும் கலக்க வேண்டும் என்பதுதான் இப்போதைக்கு இந்த அழகிய ஆவியின் இலட்சியம்.

— ஸ்ரீ சக்கரம்





''ஓடிப்போன நம்ம பையன் சீக்கிரம் திரும்பி வரணும்னு பால கிரியானந்த ஸ்வாமிகள்கிட்ட வேண்டிக்கப் போனியே என்னாச்சு...?''

''ஆகிறது என்ன, மூணு மாசம் முன்னாலே ஓடிப்போன நம்ம பையன்தான், மொட்டையடிச்சு, சாமியாரா உட்கார்ந்து ஆசி வழங்கிக்கிட்டிருக்கான்னு தெரிய வந்தது!''

- கணியூர் சீனிவாசன்

''இந்த கொலை, கொள்ளைச் சம்பவத்துக்கு நீதான் காரணம்னு ஒத்துக்கிறியா?''

''முடியாது எசமான். அதான் தி.முகதான் காரணம்னு அம்மாவே சொல்லிட்டாங்களே!''

- வே. ஆறுமுகம்

''மச்சினன் குடும்பத்தோடு ஆட்டோவுல வந்து இறங்கினதைப் பார்த்ததும் எதிர் வீட்டுக்காரர் பின்பக்கமா வந்து நம்ப வீட்டுல ஏன் ஒளிஞ்சுக்கிறார்?''

''ஆட்டோக்காரனுக்கு பணம் கொடுக்கிற மாதிரி ஆயிடுமோன்னு பயந்துதான்!''

- சீர்காழி வி. ரேவதி



இவங்க கூட



''மனைவியை அழகிய தீயேன்னு கொஞ்சினியா... ஏன்?''

''எரிஞ்சு... எரிஞ்சு விழுறவளை வேற எப்படிக் கொஞ்சறது...?''

- ராஜிராதா

''பத்திரிகையிலே ஒரு விளம்பரம் கொடுத்திருந்தேன்; பிடிச்சு உள்ளே போட்டுட்டாங்க!''

''அப்படி என்னதான் விளம்பரம் கொடுத்தே...?''

''குறைஞ்ச விலையில் ரூபா நோட்டு விற்கப்படும்'னு!''

- கோவில்பட்டி கேசவன்

''மன்னா! தங்களைச் சந்திக்க புலவர் ஒருவர் வந்திருக்கிறார்.''

''என்னைப் புகழ்ந்து பாடவா, மந்திரி?''

''இல்லை... போனமுறை பாடியதற்கு கடன் சொல்லி அனுப்பினீர்களாம்; வசூலிக்க வந்திருக்கிறார் பிரபு!''

- தூத்துக்குடி வி. சகிதா முருகன்



நீங்களும் சிரிங்க!

வலை பாயுதே

"உனக்கு ஏதாவது தேவை இருந்தால் அங்கு நான் இருப்பேன்" என்று சொல்வது உண்மையான நட்பு. "உனக்கு ஏதும் தேவையற்ற நிலையிலும் அங்கு நான் இருப்பேன்" என்று சொல்வது உண்மையான காதல்! - இது போன்ற ஏராளமான உருக்கமான, ரொமான்டிக்கான, ஃப்ரெண்ட்லியான வாசகங்கள் மற்றும் கவிதைகளைக் கொண்டுள்ள தளம் lovepoemsandquotes.com. கல்யாணப் பத்திரிகை அடிப்பது எப்படி? அதற்கான வார்த்தைகள் என, பல சமாச்சாரங்கள் கொட்டிக் கிடக்கின்றன.

(இப்படியெல்லாம் காதல் கவிதை எழுத முடியுமா? இதுக்காகவே யாரையாவது காதலிக்கணும்னு தோணுது)

இந்திய மருத்துவர்களுக்காக, அவர்கள் தங்கள் கருத்துகளை 'சிரிஞ்ச்' செய்ய, மருத்துவம் சம்பந்தப்பட்ட கணினி மென் பொருள்களுக்காக, இயங்கும் தளம் indiandoctors.com எல்லா வியாதிகளைப் பற்றிய மருத்துவக்குறிப்புகளும் ஆலோசனைகளும் கிடைக்கின்றன. இதுவரை மருத்துவ உலகில் நிகழ்ந்துள்ள முக்கிய க்ரைம்கள், கிட்னி திருட்டுகள் மற்றும் பல விஷயங்கள் பற்றிய தகவல்கள் அதிர்ச்சி + ஆச்சரியமூட்டுகின்றன.

(புள்ளிராஜாவுக்கு என்ன வைத்தியமுங்கோ?)

"23 வயசுல நான் இவ்வளவு நிறைய சாதிச்சுட்டேன்" என தன்னையே வியந்திருக்கிறார், பாலிவுட்டில் தற்போது அதிகம் சம்பளம் பெறும் நடிகையும், தற்போது 'தேவ்' - படத்தில் 'செம' நடிப்பு காட்டியவருமான கரீனா! "நான் ஹாலிவுட்டுக்குப் போக மாட்டேன். நான் இந்தியன். இங்கேதான் எப்பவும் வாழ்வேன்" என்று உருகும் கரீனாவுக்கு தாம் நடித்ததில் பிடித்தது. 'Chandi'-ல் பண்ணிய கால் கேர்ள் கேரக்டராம்! சொல்வது bollywoodblitz.com



ஜாலி SMS

நான் நிலாவைப் பார்த்தேன். நிலா அழகானது. நான் நதியைப் பார்த்தேன். நதி அழகானது. பின் நான் உன்னைப் பார்த்தேன். நா...நா...நான் மீண்டும் நிலாவைப் பார்க்க ஆரம்பித்து விட்டேன்.

— ப்ரௌஸர்



ச்சீ... ஹாலிவுட் புளிக்கும்!



கண்ணீர் மின்சாரக் கலை அறிவோம்!

அரிசிக்கடை வைத்திருக்கும் நண்பரை நீண்ட இடைவெளிக்குப் பிறகு சந்திக்க நேர்ந்தது. வியாபார நிலவரம் பற்றி நட்புடன் கேட்டதற்கு, "பணப்புழக்கம் இருக்கோ இல்லியோ, ஒசத்தி வெலையில விக்கிற அரிசியைத்தான் வாங்கிட்டுப் போறாங்க" என்றார் நண்பர். 'ஒசத்தி வெலை அரிசி'யை மக்கள் தேர்ந்தெடுப்பதற்கான காரணத்தையும் அவரே சொன்னார். "அப்பதானே சீக்கிரமா சோறு வடிச்சிட்டு, டி.வி.யில சீரியல் பார்க்க முடியும்!"

- தமிழகத்தின் சுமாரான ஒரு நகராட்சியில் கடை வைத்திருக்கும் நண்பரின் வியாபார அனுபவம் இப்படி இருக்கிறது. பணத்தை ஒரு பொருட்டாக நினைக்காத இல்லத்தரசிகளை, நமது தொலைக்காட்சிகளின் நெடுந்தொடர்கள் உருவாக்கியிருப்பது ஆச்சரியம் தரும் சாதனை!



கோவி.லெனின்

தமிழில் ஒளிபரப்பாகும் வெவ்வேறு தொலைக்காட்சிகளில், நாளொன்றுக்குச் சுமார் முப்பது நெடுந்தொடர்கள் காட்டப்படுகின்றன. அவற்றில் பதினைந்து தொடர்களையாவது திங்கள் முதல் வெள்ளிவரை தவறாமல் பார்த்து விடுபவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். இத்தனைத் தொடர்களையும் பார்ப்பதற்குச் சராசரியாக எட்டு மணி நேரம் தேவைப்படுகிறது. அதாவது, ஓர் அலுவலகப் பணி நேரத்திற்கு சற்றும் குறையாமல், நாள்தோறும் நெடுந்தொடர்கள் பார்க்கப்படுகின்றன, தமிழர் இல்லங்களில்.

நாளொன்றுக்குப் பதினைந்து தொடர்கள் வரை சலிக்காமல் பார்க்கும் நேயர் திலகங்கள் எப்படி ஒவ்வொன்றையும் நினைவறைகளில் பதிய வைத்துக் கொண்டு, அடுத்தநாள் அதன் தொடர்ச்சியைப் பார்க்கிறார்கள் என்பது ஆச்சரியம் தரும் சாதனை எண் இரண்டு. நெடுந்தொடர் பார்க்கும் தமிழ் நேயர்கள் அனைவரும், 'பதின் கவனகர்'களாக இருப்பது எப்படி என்பது பற்றி ஆராய வேண்டுமென நீண்டநாள் ஆவல்.

குழந்தையை மருத்துவரிடம் காட்டுவதற்காக ஒரு பெரும்பொழுது நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. நோயாளிகளின் உடற்பரிசோதனைகளுக்கு முன்பாக, மனத்தைப் பரிசோதிக்க வேண்டும் என மருத்துவர் முடிவு செய்திருப்பார் போல. அந்தத் தனியார் மருத்துவமனையில் காத்திருக்கும் நோயாளிகளை சோதிப்பதற்காக, ஒரு தொலைக்காட்சி வைக்கப்பட்டு நெடுந்தொடர்கள் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன.

இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமான காத்திருப்பில் நான்கு நெடுந்தொடர்களின் அன்றைய அத்தியாயங்களை முழுமையாகப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. முடிவில், தமிழ் நேயர்களின் நினைவாற்றல் மீதிருந்த ஆச்சரியம் தகர்ந்து நொறுங்கியது. எல்லாத் தொடர்களிலுமே ஒரே வகையான காட்சியமைப்புகள், ஏறத்தாழ ஒரே நடிகர்கள். எல்லாக் கதைகளிலும்

பேசப்படும் மொழி, கண்ணீர். அதனால், நேற்று என்ன பார்த்தோம் என்பது நினைவிருக்க வேண்டிய அவசியமில்லை... செலக்டிவ் அம்னீஷியா எனும் மறதி நோய்க்காரர்கள்கூட, நெடுந்தொடர் ரசிகராக இருக்க முடியும் என்பதே இவற்றின் சிறப்பு.

காத்திருந்த பெண்மணிகளில் இருவர், விளம்பர இடைவேளையின் போது பேசிக்கொண்டதைக் கேட்க முடிந்தது. (விளம்பர இடைவேளை வரை மூச்சுக்கூட விடுவார்களா என்பது சந்தேகம்தான்) "டி.வி சீரியல் வந்ததிலிருந்து அக்கம்பக்கத்து வீடுகளில் சண்டை போடுவது நின்னு போச்சு, தெரியுமா?'' என்றார் ஒரு பெண்மணி. அடுத்திருந்தவரும் அதை வழிமொழிந்து, "முன்னெல்லாம் என் வீட்டுக் கொல்லையில உன் ஆடு மேய்ஞ்சிடிச்சினு சண்டை போட்டுக்குவாங்க. மெகா தொடர் வந்ததிலிருந்து அதெல்லாம் நின்னு போச்சு" என்றார். விளம்பர இடைவேளை முடிந்துவிட்டதால், அவர்களின் பேச்சும் முறிந்துவிட்டது. இருந்தாலும் அது எழுப்பிய அலைகள் சின்னச் சின்ன வட்டங்களாக விரிந்தன.

நெடுந்தொடர்களை கண்கள் மேய ஆரம்பித்த பிறகு, சண்டைகள் ஓய்ந்துவிட்டன என்பதை ஒப்புக்கொள்வதில் தயக்கம் இல்லை. அந்த வீட்டு அம்மாவுக்கு ஆடு வளர்க்கவும் நேரமிருந்திருக்காது. இந்த வீட்டு அம்மாவுக்கு கொல்லையில் செடி வளர்க்கவும் நேரமிருந்திருக்காது. அப்புறம் எங்கே சண்டை போடுவது?

தொடர்களில் மூழ்கி விடுவதால் அக்கம்பக்கத்தாருடனான அநாவசிய மோதல்கள் குறைந்துள்ளன என பெருமைப் பட்டுக் கொண்டாலும், இதே தொடர்களால் குடும்பத்திற்குள் குழப்பங்கள் உண்டாகி, தேவையற்ற மோதல்களும் பிரிவினைகளும் ஏற்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றன தொடர்களின் சித்திரிப்புகள்.


உருவாக்கத்தில் பெரும்பங்கு ஆண் படைப்பாளிகளுக்கே இருப்பதால், அவர்களின் சிந்தனை அளவுகோலின் அடிப்படையிலேயே நெடுந்தொடர் மாமியார் - மருமகள்களும் இதர பெண் பாத்திரங்களும் சித்திரிக்கப்படுகின்றனர். பெண் படைப்பாளிகள் இந்தப் பணியை ஏற்கும் சூழலில், குடும்பப் பெண்கள் சமூகரீதியாக எதிர்கொள்ளும் பிரச்னைகள் காட்சிகளாகும் என நம்பலாம். அதுவரை என்ன செய்யலாம்?

சிந்தனையில் பூஞ்சைக் காளான்களை பரவச் செய்து, தமிழ்க் குடும்பங்களின் காலத்தைக் கொல்லும் தொலைக்காட்சிப் பெட்டிகளை மூடி வைக்கலாம். மின் கட்டணமாவது மிச்சமாகும். பார்த்துத் தொலைப்பதைத் தவிர்க்க முடியாதெனில், கண்ணீரிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் உத்தியைக் கண்டறியலாம். நெடுந் தொடர்களால் விளையும் ஒரே பயன் அதுவாகவாவது இருக்கட்டுமே!



வாங்க, கதை பண்ணலாம்!

நம் சினிமாவில் கதை அம்சம் என்பது கவர்ச்சிக் கன்னிகளின் காஸ்ட்யூமை விடக் குறைந்து விட்டது. இந்தக் குறையைச் சுட்டிக் காட்டியதுமே ஸ்டோரி டிஸ்கஷனுக்குத் தயாராகி விட்டனர் நம் அரசியல்வாதிகள். கல்கி இதழுக்காக நடந்த கற்பனைக் கலந்துரையாடலின் விவரம் இதோ!



தயாநிதி மாறன்: நாமெல்லாம் சேர்ந்து நல்ல திரைக்கதையாக ஒண்ணை டிஸ்கஸ் செய்து, அதைப் படமா எடுத்து (திடீரெனக் குரலை உயர்த்தி) இந்தியத் தொலைக்காட்சிகளில் முதல்முறையா... திரைக்கு வராமலே சில மாதங்களான படமா சன் டி.வி ரசிகர்களுக்குத் தரலாம்!


பாலு

வெங்கையா நாயுடு: ஐம்பது வருஷமா இருண்டு கிடந்த நாட்டின் மேலே இலேசா வெளிச்சம் பரவ ஆரம்பிக்கறதை 70 வயது கதாநாயகன் உணருகிறான். நாடு இலேசா ஒளிர ஆரம்பிச்சிருக்கு. அதை இன்னமும் முழுசா ஒளிர வெச்சுடலாம்னு அவன் நம்பிட்டு இருக்கற சமயத்துல....

அர்ஜுன் சிங்: ஒளிர்ந்தது நாடு இல்லை...மின் மினிப் பூச்சிகள்தான் கூட்டம் கூட்டமா ஒளியைச் சிந்திட்டு போனதுங்கற உண்மை தெரிய வருது...! அதிர்ச்சியில் கதாநாயகன் உறைஞ்சு போயி...

ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்: இதுக்கு யாரைக் காரணம் சொல்லி பலிகடா ஆக்கலாம்னு யோசிச்சு, குஜராத் குறுநில மன்னன், தீவிரமா செயல்படுத்தப்படாத தன்னோட ஐடியாலஜின்னு, எதை, எதையோப் போட்டுக் குழப்பிக்கிறாங்க...!

லல்லுபிரசாத் யாதவ்: கதை ரொம்பக் குழப்பமாவும், பழசாகவும் தெரியுது... நான் ஒரு நல்ல சப்ஜெக்ட் வெச்சிருக்கேன். கதையைக் கேட்டுக்குங்க! கதாநாயகன் தப்பு செஞ்சுட்டான்னு சொல்லி, அவனை நாற்காலியை விட்டு தூக்கிட்டு ஜெயில்ல தள்றாங்க. ஜெயிலுக்குப் போறதுக்கு முன்னாடி அவன் தன்னோட 'மயிலு'வை நாற்காலியில் குந்த வெச்சுட்டு, பெயிலில் வெளியே வரான். அப்ப எதிரே வர்ற ரயிலில்



ஏறிக்கிடறான்.

எஸ்.எஸ். சந்திரன்: இங்கே ஒரு காமெடி சீன் வெச்சுடலாம். அதாவது கிராமாந்தர எண்ணம் கொண்ட கதாநாயகன், ரயிலில் இருக்கற மின்விசிறிகளையெல்லாம் கழட்டி எறிஞ்சுட்டு, பனை ஓலை விசிறியை பயணிகளுக்குத் தர்றான். அப்புறம், ரயிலை ஓட்ட எரிபொருள் ரொம்ப செலவாகுதுன்னு சொல்லி, எருமை மாடு, காளை, மாடுகளையெல்லாம் கட்டி ரயிலை இழுக்க வைக்கிறான்...

லல்லு (முறைத்தபடி): கதாநாயகன் தன் எதிரிகளைப் பழிவாங்க எரிஞ்சு போன ஒரு ரயிலைப் பத்தி. ரெண்டாவது முறையா என்கொயரி வைக்கணும்கறான்.

அர்ஜுன் சிங்: சூப்பர்! இந்த இடத்துல ஒரு பாட்டு சீன் வெச்சுடலாம். அதில்

'ரயிலே, ரயிலே ஒரு நிமிஷம்...
சதியைக் காண நிற்பாயா...?
சதியை நானும் கண்டு
கொண்டால்
வண்டவாளத்தைத்
தண்டவாளத்தில் ஏற்றிடுவேன்...'னு

பாடறான்!

தயாநிதி மாறன் (ஹர்கிஷன் சிங் சுர்ஜித்தை நோக்கி): உங்ககிட்டே ஏதாவது 'நாட்' அல்லது 'தாட்' இருக்கா? திரைக்கதைக்கான 'ப்ரிமைஸ்' இருக்கான்னு பார்ப்போம்!

ஹர்கிஷன்சிங் சுர்ஜித்: மதவாத சக்திகளை ஒடுக்கறதுக்காகத் தன்னோட இன்னொரு எதிரியோட கூட்டு சேர்ந்துட்டு போராடறான் கதாநாயகன்... எதிரியின் எதிரி நம் நண்பன், என்கிற தத்துவத்தின்

வெற்றிக்கு வழி!



பயந்து பயந்து வாழ்வதைவிட நம்பிக்கையுடன் சிந்திப்பது வெற்றிக்கு அதிக வழிகளைக் கண்டுபிடித்துத் தருகிறது.

உங்களுக்குத் தேவையான நேர்மையும் செயல் ஊக்கமும் உங்களிடம்தான் இருக்கிறது என்பதை முழுமையாக நம்பினால்தான் இவை இரண்டும் நீர்வீழ்ச்சி போல தங்கு தடையின்றிக் கிடைக்கும்.

– நார்மன் வின்சென்ட் பீல்

தகவல்: வயலூரர் பா. சுகுணா

அடிப்படையில்!

வெங்கையா நாயுடு: ஆனால் புது நண்பனோட புதிய பொருளாதார கொள்கைகளைக் கண்டு பல்லக்கைத் தூக்கறதா, வேண்டாமான்னு ரொம்பவே குழம்பிடறான் ஹீரோ!

தயாநிதி: டாக்குமெண்டரி படத்தோட கதை மாதிரி அறுவையா இருக்குங்க! ஹோப்லெஸ் (ஜி.கே. வாசனைப் பார்த்து) உங்க சரக்கை எடுத்து விடுங்க!

ஜி.கே. வாசன்: தன்மானப் பிரச்னையால் வீட்டை விட்டு வெளியேறுகிறார் தந்தை, ராவ் காலத்துல...! ஆனால் காலச் சுழற்சியில் தாய் வீட்டிற்கே திருந்திய மைந்தனாக வருகிறான், அந்தத் தந்தையின் மகன்...

ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்: இந்தக் கதையில் ஸ்டண்ட் காட்சிகளில், கோஷ்டிச் சண்டைகளை ஏராளமா காட்ட ஸ்கோப் இருக்குமோன்னு பார்த்தால், கூட்டணி குழப்பத்துலயே கட்சித் தலைமை பரிதவிப்பதை எண்ணி விழிக்கிறான் திருந்திய மைந்தன்!

அன்புமணி: இது வேறு மாதிரியான அப்பா - பையன் கதை! தன் பையனுக்கு நல்ல ப்ளேஸ்மெண்ட் வாங்கித் தரணும்னு, ரொம்ப நாளா மனசுல எண்ணிட்டு இருக்கற அப்பா, பாண்டிச்சேரியில போண்டியாயிடறார். சரி! அவ்ளோதான் போலன்னு, பையனும் தன்னோட வண்ணக்கனவுகளை மூட்டை கட்டி பரண் மேலே வெச்சுடறான்...

எஸ்.எஸ். சந்திரன்: சில வருஷங்களுக்குப் பிறகு, சில முன்புறக் கதவுகள் திறக்குது... ஆனால், அது வழியா தன் பையனை அனுப்பாமல், கொல்லைப்புற வழியா ஒரு பெரிய வேலையில் உட்கார வைத்து மனம் பூரிக்கிறார் தந்தை!

தயாநிதி மாறன்: நீங்க சொன்னதெல்லாம் சொந்தக்கதை, சோகக் கதையா இருக்கறதோட, ரொம்ப, ரொம்ப நீளமான கதையா தெரியுது...! இப்ப நான் ஒரு கதை சொல்றேன் பாருங்க. ரொம்ப, ரொம்ப ஷார்ட்டாக! அதை ஸ்டாம்புக்குப் பின்னாலேயே எழுதிடலாம்...!

மற்றவர்கள் அனைவரும் (கோரஸாக): எந்த ஸ்டாம்ப்? புதுசா வெளியிட்டிருக்காங்களே உங்க அப்பாவோட ஸ்டாம்ப்! அதுக்குப் பின்னாலேயா, தயாநிதி...?

(தயாநிதி மாறன் நைஸாக நழுவ, மற்றவர்களும் நமுட்டுச் சிரிப்புடன் வெளியேறுகின்றனர்.)

வாசகர் குமுறல்

துட்டு கொடுத்தால் தரிசனம்!

கடந்த வியாழக்கிழமை (19.8.2004) அன்று தமிழகமெங்கும் குரு பெயர்ச்சி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

குரு பரிகாரத் தலமான ஆலங்குடியிலும் குருபெயர்ச்சி விழா சிறப்புற நடந்தது, பக்தர்களின் மனத்தைப் புண்ணாக்கியபடி.

குரு பெயர்ச்சிக்குப் பதினைந்து நாட்கள் முன்பிருந்தே குரு பெயர்ச்சி ஏற்பாடுகள் ஆரம்பித்தன. புதிய செயல் அலுவர் பழைய ஏற்பாட்டைக் கைவிடுவார் என்று மக்கள் நம்பினர். ஆனால் இவரும் பழைய வழியைக் கையாண்டு, பக்தர்களைத் தீண்டத்தகாதவர் ஆக்கினார்.

குரு பெயர்ச்சியன்று மூன்று வரிசைகள் போடப்பட்டன. அதில் பொது வழி (இலவச தரிசனம்), முக்கியஸ்தர்கள் வழி (வி.ஐ.பி சீட்டு), மற்றும் நூறு ரூபாய் கட்டண வழி என்று மூன்று வழிகள் அமைக்கப்பட்டன.

இதில் நூறு ரூபாய் கட்டண வழியில் செல்பவர்களுக்கு, 2 கிராம் வெள்ளி டாலருடன் கூடிய பிரசாதம் வழங்கப்படும். ஒரு சீட்டுக்கு ஒருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். கணவன், மனைவி இருவர் வந்தாலும் தனித்தனியே சீட்டு வாங்க வேண்டும். இது நடுத்தர வர்க்கம் நிறைந்த நம்து மக்களால் இயலுமா?

பாவம், மூன்றாம் வரிசை பொது வழியில் உள்ளவர்கள். இவர்கள் கோயிலின் வெளிப் பிராகாரத்தில் நின்று ஜன்னல் வழியே குரு பகவானைத் தரிசிக்கப் பெற்ற தீண்டத் தகாதவர்கள்.

காக அல்லது அந்தஸ்து உள்ளவர்கள் மட்டுமே அன்று கோயிலின் உள்ளே சென்று, மிக அழகாக சந்தனக்காப்பு செய்யப் பட்டிருக்கும் சுவாமியை தரிசனம் செய்தார்கள். மற்றவர்கள்



ஜன்னல் வழியே குருபகவானை தரிசனம் செய்ய வேண்டும் என்று போலீஸ் துணையுடன் நிர்பந்திக்கப் பட்டார்கள்.

இது கடந்த ஆண்டே பொது விமர்சனத்துக்கு வந்தது. ஆனால் பத்திரிகைகள் தங்களது கடமையைச் செய்யவில்லை!

'கோயில்கள் கூடாதென்பது எனது கொள்கையல்ல. கொள்ளையர்களின் கூடாரமாகக் கூடாது என்பதே' என்று 'பராசக்தி'யில் ஒரு வசனம் வரும். அதுதான் இப்பொழுது ஞாபகத்துக்கு வருகிறது.

\- ஆலங்குடியான்



மகுட வைரம்

6. முத்துக் களவு

வாழ்க்கைப் பயணத்தில் மனிதன் வெகுதூரம் வந்துவிட்ட போதும், முதுமையை அடைந்துவிட்ட போதும், பால்யப் பருவத்து நினைவுகள் தரும் இன்பமே அலாதியானது தான். அதிலும், அப்போது அன்னியோன்னியமாகப் பழகியவர்களின் அண்மை மீண்டும் கிட்டும்போது, பசுமையான நினைவுகளை சித்தத்தில் கொண்டு வந்து கனவுலகில் மிதக்கச் செய்துவிடும். அனுபவித்தவர்களுக்கே அந்த அலாதியான அன்பின் தன்மை புரியும்.

உறையூரிலிருந்து வந்த வீரன் விக்கிரமவரையனின் பெயரை உச்சரித்ததும், அப்படியொரு கனவுலகிற்குச் சென்றான் பாண்டிய வரகுணன். போர்ப் பயிற்சியைத் தன்னோடு ஒன்றாகப் பயின்றவனும், ராஷ்டிரகூடருடனும், களப்பிரருடனுமான போர்களில் தோளோடு தோள் நின்று வாள் வீசியவனுமான விக்கிரம வரையனின் வருகை தெரிந்ததும், பாண்டிய மன்னன் முகத்தில் அலாதியான சந்துஷ்டி நிலவியது.

அந்தப்புரத்தின் முன்னறையில் நுழைந்ததும் அவனது ஆனந்தம் இன்னும் அதிகரித்தது. உறையூர் வீரனுடன் பேசிக் கொண்டிருந்த இளவரசி குமுதவல்லியின் தோற்றம், எந்தச் சங்கடமான சூழ்நிலையையும் இனிமையானதாக மாற்றக் கூடியதாகத்தான் இருந்தது. மகள் பிறந்தவுடன் அந்த அழகிய முகத்தைக் கண்டு மன்னன் வைத்த பெயர்தான் அது. அகன்று விரிந்த அந்த விழிகள், குமுத மலருடன் சேர்ந்து வந்துவிட்ட இரு கயல்களாகவே தெரிந்தன. செண்பக மொக்குப் போன்ற நீண்ட நாசியும், மாதுளையின் உட்புறத்து மணிகள் போல சிவந்து பளபளத்த இதழ்களும், அவள் பெயருக்கான விளக்கத்தை அளித்துக் கொண்டிருந்தன. சோழ நாட்டு அறிவும், பாண்டியரின் அழகும் கலந்த அவள் உருவம், மன்னன் முகத்தில் பெரும் சாந்தியையும் நிலவவிட்டது.

"குமுதவல்லி, நம் படைத்தலைவர் என்ன கூறி அனுப்பியிருக்கிறார்?" என்றபடியே உள்ளே நுழைந்தான் மன்னன்.

மன்னனைக் கண்டதும் வணங்கிய வீரனை நோக்கியவன், நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

"வீரனே, நம் படைத் தலைவரின் உதவிக்கு வந்தவர்கள் யார்? ஓலையில் விவரமேதும் கூறப்படவில்லையே."

"பிரபு, ஒருவர் சோழர் படைத்தலைவர் விக்கிரமவரையர். இன்னொருவர் பராந்தகர். சோழ வண்டாழஞ்சேரியில் ஒரு விவசாயியின் மகன் என்கிறார்கள். ஆனால் அவர் தோரணை வெறும் விவசாயியாகவோ, சாதாரண வீரராகவோ தெரியவில்லை. அவரது வாள் வீச்சில் ராஷ்டிரகூட ராகுலனின் வாள் பறந்துவிட்டதாக, நம் படைத்தலைவரே சிலாகித்துச் சொன்னார்."

குமுதவல்லியின் விழிகள் இன்னும் அகன்றன. "யார், காவிரிக் கரையில் ராஷ்டிரகூடரிடம் சண்டையிட்டு சோழர் மாணிக்கத்தை மீட்டதாகக் கூறப்பட்டதே, அவரா?" என்றாள்.

"ஆம் இளவரசி."

"ஆனால்... இந்த ராகுலன்...?" என்றவள், மன்னனை நோக்கினாள் சந்தேகத்துடன்.

"ஆம் மகளே. கொற்கை முத்துக் களவை நிகழ்த்துவதாக நீ சந்தேகப்பட்ட

விஷ்வக்ஸேனன்

அதே ராகுலன் தான். ஆக, இவன் அங்கு களவில் ஈடுபடவில்லை யென்பது உறுதியாகிறது'' என்ற மன்னன், வீரனை நோக்கி, ''சரி, வீரனே, சோழர் படைத் தலைவரும் அந்தப் பராந்தகனும் எங்கிருக்கிறார்கள்?'' என்றான்.

''அவர்களை உறையூர் அரண்மனையில் தங்க வைத்திருக்கிறார் நம் படைத் தலைவர். தங்களை நேரில் காணவும், ஏதோ உதவி கோரவும் வந்ததாகச் சொன்னார். தங்களின் அனுமதி தேவையென்றும் கூறினார்.''

''அவர்களை எச்சரிக்கையுடன் அழைத்து வரச் சொன்னதாகத் தெரிவித்துவிடு'' என்ற மன்னன், வீரனுக்கு விடை கொடுத்தான்.



குமுதவல்லியின் முகத்தில் சிந்தனை தெரிந்தது. ''தந்தையே, நீங்கள் கூறியபடி அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை என்றே தோன்றுகிறது.''

''ஆம் மகளே, இதில் ராஷ்டிரகூடருடன், தெற்கில் மலை நாட்டுச் சிற்றரசும் கலந்திருக்க வேண்டும். மொத்தமாக அவர்களது நோக்கம், நாம் படை திரட்டுவதைத் தடை செய்வது. படை பலத்தை உயர்த்த பொருள் வேண்டும். நமக்குச் செல்வம் முத்துக்கள். அவற்றை அபகரிக்கவும், படைத் தலைவர்களை நீக்கவும், உணவுக் கிடங்குகளை அழிக்கவும் திட்டமிட்டிருக்கிறார்கள்.''

''ஆனால் தந்தையே, பல்லவச் சக்கரவர்த்தி நந்திவர்மரா இப்படி...?''

''இல்லை மகளே. நந்திவர்மன் சுத்த வீரன். இவற்றை நடத்துபவர்கள் ராஷ்டிரகூடர். அவர்களைத் தடுக்க நந்திவர்மனுக்குச் சக்தியில்லை. பெண்ணாகடப் போரில் அழிந்தவை சோழர் படைகள் மட்டுமல்ல, பல்லவ வீரரும் முக்காலுக்கும் மேல் மடிந்து போனார்கள். பெரும்

போர் அது. காஞ்சியின் காவலுக்கே இப்போது ராஷ்டிரகூடரை நம்பியிருப்பதாகக் கேள்வி.''

சற்று மௌனமாக நின்ற குமுதவல்லி கூறினாள், ''தந்தையே, கொற்கையின் முத்துக்களவைக் கண்டறிய நாளையே நான் புறப்படுகிறேன்.''

மன்னன் பலமாக மறுத்தான். ''வேண்டாம் மகளே. ராஷ்டிரகூடரின் வலிமையான கரமொன்று இதை இயக்குவதாகத் தெரிகிறது. அபாயமும், சூழ்ச்சியும் நிரம்பிய சதி இது. என்னதான் அறிவும், திறமையும் இருந்தாலும், நீ பெண். இதில் சென்று சிக்க வேண்டாம்.''

குமுதவல்லி நேரிடையாக பதிலளிக்கவில்லை. ''தந்தையே, பல்லவ மன்னனைவிட இதில் நேரிடையாக சம்பந்தப்பட்டிருப்பது ராஷ்டிரகூடர்தானே?''

''ஆம். உண்மை அதுதான்.''

''பல்லவ மகாராணி ரேவாதேவியின் அனுமதியின்றி, ராஷ்டிரகூடர் எந்த அசைவும் மேற்கொள்வதில்லை என்பது உலகறிந்தது. எனவே சதியை மறைவிலிருந்து இயக்குபவள் அவளாகத் தான் இருக்க வேண்டும்.''

''அப்படித்தானிருக்க வேண்டும்.''

''சக்கரவர்த்தினியானாலும் அவளும் பெண்தானே? பாண்டிய நாட்டைக் கவிழ்க்க ஒரு பெண் சதியிலிறங்கக் கூடுமானால், அதை முறியடிக்க ஒரு பெண்ணால் இயலாதா? ராஷ்டிரகூடருக்கு பாண்டியர்கள் எந்தவிதத்தில் தாழ்ந்தவர்கள்? அதிலும் என் அன்னை சோழ இளவரசி. செங்கட்சோழரின் மகள். சோழ ரத்தமும் என் உடலில் ஓடுகிறது. சோழரும், பாண்டியரும் எந்த விதத்தில் ராஷ்டிரகூடருக்குக் குறைந்தவர்கள். அறிவிலா, திறமையிலா, வீரத்திலா? கூறுங்கள் தந்தையே'' குமுதவல்லியின் குரலில் உஷ்ணம் ஏறிக் கிடந்தது.

பாண்டிய வரகுணன் பலமாக நகைத்தான். ''சரி குமுதவல்லி, இனி நான் மறுப்பேதும் கூறவில்லை. ஆனால் உதவிக்கு நம் முகுந்தன் வந்ததும், உடன் அழைத்துச் செல்'' என்றான்.

இளவரசியின் புருவ விற்கள் கூடின. ''முகுந்தனா, அவன் அதிகப்பிரசங்கி ஆயிற்றே தந்தையே.''

வாசலிலிருந்து புதுக் குரலொன்று ஒலித்தது. ''ஆம் பிரபு. முகுந்தன் கொஞ்சம் அதிகப்பிரசங்கிதான்'' என்று.

திரும்பிய இருவருக்கும் தலை வணங்கி நின்றிருந்தான், பாண்டியர் ஒற்றர் படைத்தலைவன் முகுந்தன். பார்வைக்கு அதீதமான பணிவைக் காட்டினாலும், விஷமம் சொட்டும் விழிகளும், சதா இதழ்களில் தொக்கி நிற்கும் முறுவலும், அவன் பணிவு வெறும் வேஷமென்பதை அறிவித்தன. அடுத்து அந்த அதிகப் பிரசங்கி தன் சுய ரூபத்தையும் காட்டினான்.

''மன்னவா, நான் நாளை கொற்கைக்குச் செல்கிறேன். இளவரசியாரும் அங்கு செல்ல விரும்புவதாகத் தெரிகிறது. போனால் போகட்டும். ஆசைப்பட்டுக் கேட்கிறார். வேண்டுமானால் என்னுடன் வரட்டும். அனுமதி கொடுத்து விடுங்கள்'' என்றான் அவன்.

இளவரசியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதைக் கவனியாத முகுந்தன், மன்னனை நெருங்கி ஓலைக் குழலொன்றை எடுத்து நீட்டினான்.


ஓலை மீதிருந்த முத்திரையை வியப்புடன் கவனித்த மன்னன், அதைப் பிரித்துப் படித்ததும், முகத்தில் பிரமிப்பைக் காட்டினான். அவன் விழிகள் முகுந்தனைச் சந்தேகத்துடன் ஏறிட்டன.

முகுந்தனின் பதில் திடமாக வந்தது. ''ஆம் மன்னவா. இந்த ஓலை அவருடையதுதான். நான் நேரிடையாக இதைப்

''என்னாச்சய்யா... போலீஸ் ஸ்டேஷன்ல யாருமே இல்லே... இப்ப நான் யார்கிட்டே புகார் மனு கொடுக்கிறது?''

''வழிப்பறி வழக்குல ஏட்டை யாவும் கான்ஸ்டபிளும் கைதாகிப் போயாச்சு. கொலை வழக்கில் இன்ஸ்பெக்டர் கைதாகிப் போயாச்சு. ஊழல் வழக்கில் பெரிய போலீஸ் அதிகாரியும் கைதாகியாச்சு. நீங்க பேசாம உங்க புகாரை 'சி.பி.ஐ'கிட்டே கொண்டு போய் கொடுத்துடுங்க சார்...''

– கே.ஜி.எஸ். கோவிந்தன்



பெற்றேன். ராஷ்டிரகூட அரசையும், தமிழகத்தின் தலைவிதியையும்கூட இதைக் கொண்டு மாற்றியமைக்கலாம். ராஷ்டிரகூடரின் அரியணைக்காக எழுந்துள்ள இந்தப் போட்டியை நமக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம்.''

அந்த ஓலை எவரிடமிருந்து வந்தது என்பதையோ, அதிலுள்ள செய்தி என்னவென்பதையோ அறிந்து கொள்ள ஆர்வம் காட்டாத இளவரசி, 'நீங்கள் அதைப் பிறகு முடிவு செய்து கொள்ளுங்கள். நான் நாளை கொற்கைக்குப் புறப்படுகிறேன்'' என்றபடி திரும்பி அந்தப்புரத்தினுள் நடந்தாள்.

பாண்டிய நாட்டின் இரண்டாவது தலைநகரான கொற்கையின் துறைமுகத்தை அடுத்து, அதன் புகழ் பெற்ற முத்துக்களை நாடி வந்த பல நாட்டுக் கலங்கள், கடலில் ஆடி நின்றன. கலங்களிலிருந்து இறங்கிய யவன, அராபிய, சீன, கடார வணிகர் பேசிய கதம்ப ஒலிகளாலும், அவர்களைச் சுங்கச் சாவடிக்கு வழி நடத்திய காவலர்களின் கூச்சலாலும், அந்தப் பகுதி நிறைந்து கிடந்தது. சுங்கச் சாவடிக்கு வெளியே கடற்கரையை ஒட்டி நீண்ட விடுதிகளுக்கு, வணிகர்களை அழைத்துச் செல்ல தமிழகத்து பரதவர் பேசிய பல மொழிகளும் காற்றில் கலந்து ஒலித்தன. சுங்கச் சாவடிக்குத் தெற்கே கடற்கரையை ஒட்டிச் செல்லச் செல்ல, மனித நடமாட்டமும், ஒலிகளும் தேய்ந்து கொண்டே வந்தன. விடுதிகளும், அடுத்து பரதவர் குடிசைகளையும் தாண்டி வெறும் அலைகளும், கடற்காற்றும் மட்டும் ஒலியெழுப்பிய பகுதியில் நின்று கொண்டிருந்தார் அந்த மனிதர்.

பட்டாடைகளுடனும், படோடோபமான அலங்காரத்துடனும் தமிழனல்லாத சாயலுடன் ராஜதோரணையாகத் தெரிந்த அந்த மனிதரின் விழிகளில் மட்டும் கபடமும், திருட்டுத் தனமும் தாண்டவமாடின. அந்தக் கபட விழிகள் தூரத்தில் ஒற்றைப் பந்தத்துடன் வந்து கொண்டிருந்த ரதத்தைக் கண்டதும் பளிச்சிட்டு மகிழ்ச்சியையும் காட்டின. ரதம் நெருங்கி நிற்குமுன்பே அதை நோக்கி நடந்தவர், ரதம் நின்று அதிலிருந்து இறங்கிய கறுத்த மனிதனை ''வா, வில்லவா, ஏன் இத்தனை தாமதம்?'' என்று வரவேற்கவும் செய்தார். கறுப்பு என்ற வண்ணத்திற்கே அவனைத் தொட்டு வண்ணம் தீட்டலாமென்ற அளவுக்கு, கறுத்துக் கிடந்த அந்த வில்லவனின் விழிகளும், பற்களும் மட்டுமே பளீரிட்டு, இருளில் அவனை அடையாளம் காட்டின.

படோடோப மனிதரை நெருங்கிய வில்லவன் ''ராஜ மாதுலரே, இம்முறை பத்துப் பேழைகளே கொண்டு வர முடிந்தது. நாம் இந்தப் பணியைச் சற்று நிறுத்தி வைப்பது நல்லது'' என்றான்.

ராஜமாதுலர் என்று அழைக்கப்பட்டவர் ''ஏன் நிறுத்த வேண்டும்?'' என்றார் சற்று உஷ்ணமாக.

''தலைநகருக்கு வரும் முத்துக்கள் குறைவதை, பாண்டியன் உணர்ந்து விட்டதாகத் தெரிகிறது. இன்று காலை கோட்டைத் தலைவருக்கு ஓலையொன்று வந்தது. அது முதல் முத்துக் குளிக்கும் பகுதியிலிருந்து பொக்கிஷ மாளிகை வரை காவல் இரட்டிப்பாகி விட்டது. அது மட்டுமல்ல...''

''வேறென்ன?''

''மன்னர் விஜயத்தின்போது தங்கும் மாளிகையும் தயாராகிறது. ஆனால்...''

''ஆனால் என்ன?''

''வரப் போவது மன்னரல்ல.''

''பின் யார்?''

''அதைவிட அபாயமானவர். பாண்டிய இளவரசி.''

''இளவரசிதானா?''



ஜில் வெளிச்சம்!

ஜப்பான் காமியாமா நிறுவனம் ஆரஞ்சு பழச்சாறு கேன் ஒன்றை வடிவமைத்திருக்கிறது. கேனைத் திறந்தால் உள்ளிருப்பது சுத்தமான ஜில் ஜூஸ் அல்ல! ஐஸ்கட்டி!

"ஆஹா... ஐஸ்கட்டியா?" என்று பானத்தில் கலந்து அடித்து விடாதீர்கள். அது ஐஸ்கட்டியும் அல்ல! குளிர்ச்சியான மெழுகுவத்தி!

ஐஸ்கேன்டில் எனப்படும் இந்த லிக்விட் பாரஃபின் மெழுகுவத்திகள், மூன்று மணி நேரம் நின்று எரியக் கூடியன.

இன்னொரு விஷயம்! இந்த ஐஸ் கட்டிகள் நீரில் அழகாக மிதக்கும்! மிதந்து கொண்டே எரியும்!

- ஆர்.எல்

"குறைவாக எண்ணாதீர்கள் இளவரசியை. அவரது விசாரணை முறைகளும், அப்போதே தண்டனையை நிறைவேற்றும் முறையும் வெகு பிரசித்தம். அவர் விழிகளிலிருந்து தப்புவது மிகக் கடினம்."

சற்று சிந்தித்த ராஜமாதுலர், "சரி, வில்லவா, நீ திடீரென்று மறைந்து விட்டால் சந்தேகம் எழும். எப்போதும் போல பொக்கிஷ மாளிகையில் உன் பணியைக் கவனி. எனது கலமொன்று வரவிருக்கிறது. நான் பேழைகளுடன் சென்று, பிறகு வந்து மீண்டும் உன்னைச் சந்திக்கிறேன். தற்போது நீ இரண்டு பேழைகளை எடுத்துக் கொள்" என்றார்.

ஆவலும், பேராசையும் பளபளத்த விழிகளுடன், இரண்டு பேழைகளை விடுத்து மற்றவற்றை ரதத்திலிருந்து இறக்கிய வில்லவன், விடை பெற்றுக் கொண்டு இருளில் ரதத்தைச் செலுத்திக் கொண்டு மறைந்தான்.

ரதம் மறைந்ததும் கரங்களைத் தட்டினார் ராஜ மாதுலர். கரையையொட்டி வளர்ந்து கிடந்த தென்னை மரங்களின் மறைவிலிருந்து வெளிவந்த வீரர் பதின்மரை பேழைகளை எடுத்துவர உத்தரவிட்ட ராஜமாதுலர், சற்றுத் தள்ளி, அலை மோதுமிடத்தில் நின்றிருந்த பெரும் படகு ஒன்றை நோக்கி நடந்தார். கடலை உற்றுக் கவனித்தவர், அதிக விளக்குகளின்றி கலமொன்று அந்தப் பகுதியை நோக்கி வந்து கொண்டிருப்பதையும் கவனித்து, முகத்தில் முறுவலொன்றைப் படர விட்டுக் கொண்டார்.

படகை அவர் நெருங்கியதும், மறுபுறத்திலிருந்து எழுந்த ஒலிகள் அவரைச் சற்றுத் திடுக்கிட வைத்தன. படகின் மறுபுறத்திலிருந்து திடீரென பந்தமொன்று எரிந்தது. பூரண ஆயுதபாணிகளாய் பாண்டிய வீரர் இருபதின்மர் படகின் மறைவிலிருந்து எழுந்து நின்றனர்.

ராஜமாதுலர் முகத்தில் திகைப்பு பரவியது. அவர் பின்னால் பேழைகளைத் தூக்கியபடி வந்த பதின்மரும், பேழைகளைக் கீழே இறக்கிவிட்டு, வாட்களை உருவ யத்தனித்தனர்.

"யாரும் அசைய வேண்டாம்" உறுதியுடன் ஒலித்த குரலொன்று கடற்கரையை ஊடுருவியது.

எடுத்துக் கட்டிய சுருண்ட குழல்கள் காற்றில் அலை பாய, கரத்தில் பிடித்த நீண்ட வாளுடன், ஏதோ வானத்திலிருந்து தப்பிக் குதித்துவிட்ட போர்த் தேவதை போல், முன்னால் வந்து நின்றாள் பாண்டிய இளவரசி குமுதவல்லி.

(தொடரும்)

ஒத்த செல்வ

சத்திரத்து எஜமானனுக்கும் சத்திரத்தில் சாப்பிடப் போகிறவனுக்கும் எங்கேயாவது சிநேகம் ஏற்பட முடியுமா? பிச்சைக்காரனுக்கும், பிச்சை போடுபவனுக்கும் நட்பு உண்டாக முடியுமா?

சிநேகமாகட்டும், காதல் ஆகட்டும், நீடித்து நிற்பதற்கும் பொருளாதார சமத்துவம் அவசியம். ஒருவரையொருவர் அண்டிப் பிழைப்பவர்களாக இருக்கக் கூடாது. இரப்பவனுக்கு அன்ன தாதாவிடம் நன்றியிருக்கலாம்; வேலைக்காரனுக்குப் பட்சமுள்ள எஜமானனிடம் பக்தி விசுவாசம் இருக்கலாம். ஆனால், இத்தகையவர்களுக்குள் சிநேகம் ஏற்படாது.

உலகத்தில் இப்போது அறிஞர்களின் கவனத்தை முக்கியமாகக் கவர்ந்திருக்கும் இரண்டு பிரச்னைகள் பொருளாதாரமும், கலியாணமும் என்று ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். பொருளாதார சீர்திருத்தம் ஏற்பட்டால், விவாக சீர்திருத்தத்துக்கும் அது அனுகூலமாயிருக்கும் என்று கூறினேன். அது எப்படி என்று பார்க்கலாம்.

உலகத்தில் பொது உடைமை தர்மம் நிலைபெறுகிறதென்று வைத்துக் கொள்ளலாம். அப்போது சமூகத்திலுள்ள ஸ்திரீ, புருஷர்கள் எல்லாருக்கும் தேசத்தில் உற்பத்தியாகும் செல்வத்தில் சமமான பங்கு கிடைக்கும். அப்போது கலியாணத்திலோ, ஸ்திரீ புருஷ சம்பந்தத்திலோ பணம் குறுக்கிடாது. அப்போது கலியாணங்களில் மன்மதன் உண்மையாக ஆட்சி செலுத்துவான்.

இப்போது கலியாணங்களில் மன்மதனுக்குப் பதிலாகப் பணப் பிசாசுதான் ஆட்சி செலுத்துகிறதென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. மாப்பிள்ளை பார்க்கிறவர்கள், "அவனுக்குப் பணம் எவ்வளவு இருக்கிறது?" என்று தான் முதலில் கேட்கிறார்கள். பெண் பார்க்கிறவர்கள், "வரதக்ஷணை எவ்வளவு கொடுப்பார்கள்?" என்று முதல் கேள்வி போடுகிறார்கள். இதில் சில ஜாதிகள் விலை கொடுத்துப் பெண் வாங்குவதும் உண்டு. பொதுவாக, நம் நாட்டில் இப்போது பெரிய கலியாணத் தரகர் மிஸ்டர் ரூபாயப்பர் தான். வரதக்ஷணை வாங்கும் கலியாணங்களில், பெண் வீட்டிலிருந்து எவ்வளவு பறிக்கலாமோ அவ்வளவும் பறிக்க வேண்டுமென்பதே பிள்ளை வீட்டாரின் நோக்கமாயிருக்கிறது. இதனால் இல்வாழ்க்கை பெரும்பாலோர் விஷயத்தில் மனக்கசப்புடனே தொடங்குகிறது.

பொது உடைமை ஏற்பாட்டின் கீழ் இதெல்லாம் போய்விடுமல்லவா? அப்போது நாட்டிலுள்ள ஸ்திரீ புருஷர்கள் எல்லாருக்கும், நாட்டில் உற்பத்தியாகும் செல்வத்தில் சமமான பங்கு உண்டு. மனிதனும் மனிதனும் சமானம்; அதேபோலும் ஆணும் பெண்ணும் நிகர். ஆகவே, பணத்துக்காகக் கலியாணம் இல்லை, வரதக்ஷணைக் கொடுமை இல்லை. அப்போது "பிள்ளை பிடித்திருக்கிறதா? பெண் பிடித்திருக்கிறதா?" என்பது முக்கியக் கேள்விகளாயிருக்கும்.

எல்லாவற்றிலும் முக்கியமான ஒரு சீர்திருத்தம் ஏற்படும். அதாவது, விபசாரம் என்பது ஒழிந்து விடும். "விபசாரம்" என்று சொல்லும்போது, பணத்திற்காக உடலை விற்கும் கொடுமையைத்தான் நான் குறிப்பிடுகிறேன். விபசாரத்தைத் தொழிலாய்க் கொண்ட ஸ்திரீகள் பலர் ஒவ்வொரு நாட்டிலும் இப்போது இருக்கிறார்கள். அவர்களில் எவரும் அத்தொழிலை விரும்பவில்லை. வயிறு வளர்ப்பதற்காகவோ, பணத்தாசையினாலோ தான் அந்தப்படு குழியில் விழுகிறார்கள்.



பொது உடைமை வந்துவிட்டால் இந்தப் பயங்கரம் உடனே நீங்கும். ஒவ்வொருவருக்கும் அன்ன வஸ்திரம் கிடைக்



நிலை

கும்; மற்ற எல்லாரையும் போல் சமமாகவும் கிடைக்கும். ஆகவே, விபசாரத் தொழில் என்பது ஒழியும். அதன் பயனாக மற்றவர்களின் இல்வாழ்க்கையும் தூய்மையடையும்.

ஆகவே, விபசாரம் ஒழிய வேண்டுமென்றும், கலியாணத்தில் காதல் பிரதானமாயிருக்க வேண்டுமேயன்றி பணம் பிரதானமாயிருக்கக் கூடாதென்றும் விரும்புகிறவர்கள் எல்லாம் பொது உடைமைக்காகப் பாடுபட வேண்டும்.

ஆனால் நாம் எவ்வளவு பாடுபட்டால்தான் என்ன? நாளைக்குப் பொது உடைமை ஆட்சி ஏற்படப் போவதில்லை. இன்னும் எத்தனை காலமோ தெரியாது. அதுவரையில் கலியாணத்தில் மிஸ்டர் ரூபாயப்பர் குறுக்கிடாமலிருப்பதற்கு வழி உண்டா? உண்டு. அது ஸ்திரீகளுக்குச் சொத்துரிமை அளிப்பதுதான். தகப்பனாருடைய சொத்தில் பிள்ளைகளைப் போல், பெண்களும் சம பங்கு அடைய வேண்டும். அதனால் ஏற்படக் கூடிய நன்மைகள் அனந்தம்.

முதலாவது, வரதக்ஷிணைக் கொடுமை ஒழியும். கலியாணங்களில் சொத்து விரயமாகி, குடும்பங்கள் அழிவது நிற்கும். இல்வாழ்க்கையில் ஸ்திரீகளும் புருஷர்களும் சம பதவி வகிப்பார்கள். காதலில் ஆரம்பித்த கலியாணமானாலும் இல்வாழ்க்கை நீடித்து சந்தோஷமாய் நடப்பதற்கு, இந்தப் பொருளாதார சமத்துவம் அவசியம்.

- கல்கி களஞ்சியம் தொகுப்பிலிருந்து

(வானதி பதிப்பகம்)

ஹலோ, இறைவா 6

அர்ஜுனரு வில்லு!

மாணவர்கள் மத்தியில் பேசுகிறவர்கள்தான் என்று இல்லை, பெரிய தொழில் முனைவோர் கூட்டங்களில் பேசுகிறவர்கள்கூட சொல்லுகிற ஆலோசனை, ' தன்னம்பிக்கை வாழ்க்கைக்கு மிக மிக அவசியமான ஒன்று; தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்' என்பதுதான்.

'எல்லாம் சொல்வது சுலபம். செய்வதுதான் கஷ்டம்' என்று நீங்கள் முணுமுணுப்பது என் காதுகளில் விழுகிறது. தன்னம்பிக்கை வளர வேண்டுமானால், செய்யும் காரியம் எதுவானாலும், அதில் முழு கவனம் செலுத்த வேண்டும். மனத்தை ஒருமுகப்படுத்தி, ஒன்றின் மீது கவனம் செலுத்துவது எப்படி என்பதைத்தான் உங்களுக்கு விளக்கப் போகிறேன்.

நீங்கள் படிக்கிற அறையில், சுவரில் நன்றாகப் பளிச்சென்று தெரியும்படி கறுப்பு நிறத்தில் ஒரு புள்ளியை வரைந்து கொள்ளுங்கள். வெள்ளை அல்லது லைட் கலர் சுவர் எனில், பென்சிலால் அந்தப் புள்ளியை ஏற்படுத்திக் கொள்ளலாம். அல்லது சுவரில் தரையிலிருந்து இரண்டு அடிக்கு இரண்டு அடி அளவில், ஒரு வெள்ளைத் தாளை சுவரில் ஒட்டிவிட்டு, அதில் கறுப்புப் புள்ளியை எழுதிக் கொள்ளுங்கள். சாதாரண கறுப்புப் புள்ளியாக இதனை நினைத்துக் கொண்டு விடாதீர்கள். இதுதான் உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கப் போகிற, உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனை ஏற்படுத்தப் போகிற, கான்ஸன்ட்ரேஷன் பாயிண்ட். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் புரியப் போகும் அரிய சாதனைகளுக்கு அஸ்திவாரப் புள்ளி.

என்ன, சுவரில் கறுப்புப் புள்ளி ரெடியா? அந்தச் சுவரிலிருந்து இரண்டு அடி தூரம் தள்ளி, தரையில் சௌகரியமாக அமர்ந்து கொள்ளுங்கள். ம்... எதற்கு இப்படி வீணாக டென்ஷனாகிறீர்கள்? இது ஓர் எளிமையான பயிற்சிதான். சுவாமி விவேகானந்தர், மாணவர் நரேந்திரனாக இருந்தபோதே இந்தப் பயிற்சியைச் செய்து பார்த்து, நல்ல பயன் அடைந்ததாகச் சொல்லுகிறார். அத்தகைய ஓர் உயர்ந்த, நல்ல விஷயத்துக்கு உங்களை நீங்கள் மனத்தளவில் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஓ.கே. சுவருக்கு முன்னால் இரண்டு அடி தூரத்தில் உட்கார்ந்து கொண்டு விட்டீர்களா? அறையில் நல்ல வெளிச்சமும், காற்றோட்டமும் இருக்கட்டும். ரேடியோ, டீ.வி போன்ற கவனத்தைத் திசை திருப்பும் சமாசாரங்களை, சற்று நேரம் நிறுத்தி வைத்து விடுங்கள். அறையின் கதவை மூடிக் கொள்ளுங்கள். உட்கார்ந்தபடியே முன்னால் பாருங்கள். சுவரில் கறுப்பு நிறப் புள்ளி தெரிகிறதா? அதை இரண்டு கண்களாலும் உற்றுக் கவனியுங்கள். உங்கள் கண்கள் அந்த புள்ளியின் மீது பதிந்திருப்பதைப் போலவே, உங்கள் மனமும் அதன் மேல் முழு கவனத்தையும் செலுத்தட்டும். இப்போது அந்தப் புள்ளியின் மீதுதான் உங்களுடைய நூறு சதவிகித கவனமும் இருக்க வேண்டும்.

நீங்கள் டீ.வி முன்னால் அமர்ந்து உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டு இருக்கும்போது, உங்கள் அம்மா சமையலறையிலிருந்து கூப்பிட்டாலோ,

சுவாமி போதமயானந்தா

உங்கள் வீட்டு காலிங் பெல் அடித்தாலோ, அது உங்கள் கவனத்துக்கு வராமலே போகிறது அல்லவா? காரணம் என்ன? உங்களின் முழு கவனமும் அந்தச் சிறிய டி.வி பெட்டி மீது இருப்பதுதானே? அதேபோலத்தான், சுவரில் உள்ள புள்ளியின் மீது உங்கள் முழு கவனமும் இருக்கிறபோது, அந்தப் புள்ளியைத் தவிர, வேறு எதுவும் உங்களுடைய கண்ணுக்குத் தெரியாது.

எவ்வளவு நேரம் அந்தப் புள்ளியின் மீது கவனம் செலுத்த வேண்டும்? ஆரம்பத்தில் மூன்று நிமிடங்கள் வரை இப்படிச் செய்யலாம். சில நாட்களில் இதை நாலு நிமிடங்களாக்கலாம். அப்புறம் ஐந்து நிமிடங்கள் வரை புள்ளியின் மீது கவனம் செலுத்தலாம்.

காலம் முயன்றாலே, ஐந்து நிமிடங்கள் வரை, நல்ல மனக் குவிப்புப் பயிற்சி வந்துவிடும். ஒரு கட்டத்தில், நீங்கள் புள்ளியைப் பார்த்துக் கொண்டே இருக்கிறபோது, புள்ளி உங்களை நோக்கி வருவது போல உங்களுக்குத் தோன்றும். இதைப் பற்றிச் சொல்லுகிறபோது, "இந்தப் புள்ளியைப் போன்றதுதான் அறிவு என்பதும். அதன் மீது நாம் முழு கவனத்தையும் செலுத்துகிறபோது, அது தானாகவே நம்மை வந்து அடைந்துவிடும்" என்று கூறுகிறார்.



சிலருக்கு ஓரிரு நிமிடங்கள் புள்ளியைப் பார்த்தவுடன், இலேசாகத் தலை வலிப்பதுபோல இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் ஒரு நிமிடம், ஒன்றரை நிமிடத்தோடு கூட நிறுத்திக் கொண்டு விடலாம். அப்புறம் படிப்படியாக இதனை அதிகரித்துக் கொண்டே போனால், விரைவில் அவர்களாலும்கூட ஐந்து நிமிடங்கள் வரை கறுப்புப்புள்ளி மீது நன்றாக முழுக் கவனத்தையும் செலுத்த முடியும்.



சாதாரணமாக, இந்தப் பயிற்சியை ஒருவார

இன்னொரு கவனக் கூர்மை பயிற்சி முறையைச் சொல்லிக் கொடுப்பதற்கு முன்னால், மகாபாரதத்திலிருந்து ஒரு சின்ன கதை சொல்லப் போகிறேன்.

ஒருநாள் இரவு, குரு துரோணாச்சாரியார் நடந்து போய்க் கொண்டிருந்தார். அப்போது யாரோ ஒருவர் சற்றுத் தொலைவில் அம்பு எய்கிற சத்தம் அவரது கவனத்தை ஈர்த்தது. உடனே அந்தப் பக்கமாகப் போனார். அங்கே அவர் கண்ட காட்சி அவரைப் பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அப்படி என்ன அவர் அங்கே பார்த்தார்? அர்ஜுனன், அந்த இருட்டில், அம்பு

எய்து பழகிக் கொண்டிருந்தான். இரவில், அம்பு எய்வது என்பது அத்தனை சுலப மான விஷயமில்லை. அது மட்டுமில்லை, இன்னமும் குரு துரோணாச்சாரியார், அர்ஜுனன் உள்ளிட்ட தம் சீடர்கள் எவருக்குமே இரவு நேரத்தில் இலக்கைக் குறி பார்த்து அம்பு எய்வது எப்படி, என்கிற வில் வித்தை பாடத்தைச் சொல்லித் தரவே இல்லை. அவரது சீடர்கள் அனைவரிலும் வில் வித்தையில் நம்பர் ஒன் மாணவன் அர்ஜுனன் என் பது அவருக்குத் தெரியும். ஆனாலும், அர்ஜுனனால், எப்படி இன்னமும் தாம் கற்றுத் தராத ஒன்றைப் பயிற்சி செய்ய முடிகிறது என்று அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அர்ஜுனனிடமே அதைப் பற்றிக் கேட்டு விட்டார். அர்ஜுனன் சொன்ன பதில் என்ன? "நான் என் சகோதரன் பீமனிடமிருந்துதான் இதனைக் கற்றுக் கொண்டேன்." இந்த பதில் துரோணாச் சாரியாரையே சற்றுக் குழப்பிவிட் டது.

"என்ன சொல்லுகிறாய் அர்ஜுனா? பீமனிடமிருந்து கற்றுக் கொண்டாயா?" என்று துரோணாச்சாரியார் கேட்க, அர் ஜுனன் அளித்த விளக்கம் இதுதான்.

"சில நாட்களுக்கு முன் இரவு நேரத் தில், பீமனுக்குப் பசி. இரவு என்பதால் வெளிச்சம் இல்லை. ஆனாலும், வெளிச் சம் இல்லாதது, பீமனுக்கு ஒரு பொருட் டாகவே இல்லை. சாப்பாட்டை எடுத்து வைத்துக் கொண்டு, தன் பாட்டுக்குச் சாப் பிட ஆரம்பித்தான். சாப்பிட வேண்டு மென்றால் சாப்பாடும், வாயும், கையும் தானே அவசியம்? சாப்பாட்டு ராமனான பீமன், இரவில் வெளிச்சமில்லை என்றாலும், சாப்பிடுகிறபோது, வில் வித்தை வீரனான நான், வெளிச்சம் இல்லை என்பதற்காக ஏன் கவலைப்பட வேண்டும்? நம்மால் மட்டும் இரவில் பயிற்சி செய்ய முடியாதா என்று தோன்றியது. அன்று இரவிலிருந்தே வில் வித்தைப் பயிற்சியை ஆரம்பித்து விட் டேன்!" என்றான்.

துரோணாச்சாரியாருக்குப் புல்லரித் தது.

(இப்போதைக்கு விடை பெறுகிறேன்)

படம்: **யோகா**

மாறுதல்



கைமாறிவிட்ட வீட்டைக்
கடக்கும் போதெல்லாம்
கண்களை
உறுத்தத்தான் செய்கிறது
'அன்பு இல்லம்'
அருகிலேயே
'நாய்கள் ஜாக்கிரதை.'

• வடுவூர் சிவ. முரளி



தெரியாது!

• கா. ஜமீர்ஜான்

நதிக்குத் தெரியாது
கரைதான்
காவலாய் இருக்கிறதென்று,
அரித்தாலும்....

பிறப்பிற்குத் தெரியாது
கர்ப்பத்தின் அவஸ்தை,
உள்ளே உதைக்கும் போதும்...

இலைகளுக்குத் தெரியாது
கிளைகள்
எப்படி பிரசவித்ததென்று...

விதைக்குத் தெரியாது
விருட்சத்தை உள்ளடக்கிய
தானுமொரு விதையென்று...

புறத்திற்குத் தெரியுமா
அகத்தின் அழுகை!

ஒளி

• இராசை நாணற்காடன்



மௌனத்தின் கனத்தைத்
தவிர்க்க
யதார்த்தமான
சொற்சடங்கைக் கையாண்டு
நானே தொடங்கினேன் அவனிடம்
உரையாடலை

என் நல விசாரிப்பில்
பூத்துக் குலுங்கிய
அவனின் இதயத் தோட்டத்தில்
நானும் நுழைந்தேன்
குரல் பதிவாய்...

அவனின் சொந்த உலகு குறித்து
ஆயிரமாயிரம்
கேள்விகள் எழுந்தன
என்னிடமிருந்து.

அவனது
ஒவ்வொரு பதிலும்
முழுமையாய்ப் பறைசாற்றின
நிழல் உலகின் வலிகளை.

தாக்கிய துயர் இறுக்க,
நாலாம் எண் பஸ் நெருக்கத்தில்
''நாளைக்குப் பார்க்கலாம்'' -
விடை பெறுதலுக்கான
கடைசி சொற்சடங்கைப்
பிரயோகித்தேன்.

எனக்குச் சடங்கு. அவனுக்கு சம்மட்டி அடி!

பதிலுரைக்காமல்
கைத்தடியில் இமைதிறந்து
நிமிர்ந்து நிற்கிறான்
அந்தப் பிறவிக் குருடன்!

ஆகஸ்ட் பதினான்காம் தேதி மாலை, ஜனநாதனை அதிர்ச்சியும், மகிழ்ச்சியும் ஒரு சேரத் தாக்கின. அன்றுதான் தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டன. ஜனநாதன் இயக்கிய 'இயற்கை' படத்துக்கு, சிறந்த தமிழ்ப் படத்துக்கான தேசிய விருது. இதற்காக ஜனநாதன் மகிழ்ச்சியடைந்ததில் நியாயம் இருக்கிறது. அதிர்ச்சியடைய வேண்டிய அவசியம்? அவரே சொல்கிறார் கேளுங்கள்.

"'இயற்கை' நூறு விழுக்காடு விருதுக்குத் தகுதியான படம் என்பது தெரியும். ஆனால் விருதுக்கு நானோ, தயாரிப்பாளரோ படத்தின் பிரதியை அனுப்பவில்லை. இதற்குக் குறைந்தபட்சம் ஒரு லட்ச ரூபாய் செலவாகும். சப்-டைட்டில் போட்டு அனுப்புவதென்றால், மேலும் அறுபதாயிரம் செலவு பிடிக்கும். ஐம்பதுக்கும் நூறுக்கும் அல்லாடுகிற வாழ்க்கையில், இவ்வளவு பணத்துக்கு எங்கே போவது என்று விட்டுவிட்டேன். தயாரிப்பாளரையும் வற்புறுத்தவில்லை. பிறகெப்படி என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, "நான்தான் அனுப்பினேன்" என்று படத்தின் ஒளிப்பதிவாளர் ஏகாம்பரம் வந்து சொன்னார். சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதும் கொடுக்கப்பட்டிருக்க வேண்டிய படம். ஒரே ஒரு கேமிராவை மட்டும் வைத்துக்கொண்டு, கடல்புறத்தின் நீள, அகலங்களைப் பிரம்மாண்டமாகக் காட்டியிருந்தார். படத்தில் உரையாடல் என்பது குறைவு. சினிமாவுக்கே உரித்தான காட்சி மொழியைக் கொண்டே கதை சொல்ல விரும்பினேன். திறமையான

வெளிச்சம் இல்லாத



ஒளிப்பதிவாளர் கிடைத்ததால் அது சாத்தியமாயிற்று'' என்று சொல்லும் ஜனநாதனின் ஜாகை, மணிரத்னம், கமல் போன்ற சினிமா ஜாம்பவான்கள் வசிக்கும் அதே ஆழ்வார் பேட்டையில். ஆனால் அவரது வாழ்க்கையைப் போலவே, நெருக்கடிகள் மிகுந்த ஒரு குறுந்தெருவில் ஒண்டுக்குடித்தனம்.

'இயற்கை' வெற்றிப்படம்தான் என்றாலும், போதிய விளம்பரம் செய்ய தயாரிப்பாளரால் இயலவில்லை. உடனடியாக சாட்டிலைட் உரிமையை விற்காததால், தொலைக்காட்சிகள் கைவிட்டு விட்டன. இதனால் பெரிய வெற்றியைச் சந்தித்திருக்க வேண்டிய இந்தப்படம், கமர்ஷியல் குப்பைகளின் தீவிர விளம்பர பிரசாரங்களுக்கு நடுவில், மூச்சுத் திணறியபடி கரையேறியது. தயாரிப்பாளருக்கும் கொஞ்சம் லாபம். ஆனால் இயக்குனர் ஜனநாதன் ஏதோ தேசத்துரோகம் செய்துவிட்டது போல, அவருக்கு அடுத்த வாய்ப்புகளைத் தர கோடம்பாக்கம் தவறி விட்டது. விளைவு! தமது சகாக்களோடு மீண்டும் ஓர் உதவி இயக்குனர் போல, நிச்சயமற்ற வாழ்க்கையைச் சந்திக்க வேண்டிய நிலை,

தேசிய விருது பெற்றிருக்கும் இயக்குனருக்கு இப்போது நிலைமை மாறியிருக்கிறதா?

"இப்போது கடன் கேட்டால் கொடுக்கிறார்கள். தகுதியைப் பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். வாருங்கள் நாம் படம் பண்ணலாம் என்று கூப்பிடுகிறார்கள். படைப்பை வைத்து ஒரு கலைஞனின் தகுதியை, திறமையை, காலத்தே எடை போட்டிருந்தால், ஊருக்குத் திரும்பிப் போய்விட்ட எத்தனையோ பாலாக்களை, எத்தனையோ மணிரத்னங்களை நாம் பெற்றிருக்க முடியும்" எனும் ஜனநாதன் ஒரு மார்க்ஸீயவாதி. பல தேசிய விருதுகளை பெற்ற படங்களை இயக்கிய எடிட்டர், லெனினிடம் உதவியாளராக இருந்தவர். "தமிழ் ரசிகனை முதலில் தியேட்டரில் உட்கார வைத்து விட வேண்டும். அதன் பிறகு கலாபூர்வத் தன்மையை மெல்ல மெல்லக் கொடுத்தால் அற்புதமாக ரசிப்பான்" என்று தமிழ் ரசனையில் நம்பிக்கை வைத்திருக்கும் இவரது படம், 'விருமாண்டி', 'பிதாமகன்' போன்ற கடும் போட்டிக் கிடையில் எப்படி சாதித்தது?

விருது



* 'இயற்கை' படத்தில்

"கதாபாத்திர அமைப்பு முதல் காரணம். ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் திட்டமிட்டு ஆரோக்கியமாக அமைத்தேன். காரணம், யதார்த்தத்தில் நாம் ஒவ்வொருவரும் ஒரு வகையில் விளிம்பு நிலை மனிதர்களே!



* ஜனநாதன்

அடுத்து கதைக் களத்தையும், அதற்கான கலை இயக்கத்தையும் சொல்ல வேண்டும். எனது தயாரிப்பாளர் ஒரு முதுகலைப் பட்டதாரி. சினிமா பாரம்பரியம் கொண்டவர் என்பதால், இத்தனை பெரிய கதைக் களத்தை ஒப்புக் கொண்டார். அந்தமான் கடலில் கலங்கரை விளக்கம் செட் அமைக்க வேண்டும் என்ற போது, கேள்வி கேட்காமல், நூறு பேரை கப்பலில் ஏற்றி அனுப்பினார்" என்கிறார் ஜனநாதன். சப்-டைட்டில் போடப் படாமலேயே அனுப்பட்ட 'இயற்கை' படத்தை மொழியின் அவசியமின்றியே புரிந்து கொண்டு, லாபியிங் இல்லாமலேயே அங்கீகரித்திருக்கிறது விருதுக்குழு. ஆனால், "எனக்குத் தெரியாமலேயே 'இயற்கை' படம் ஹிந்தியில் ரீமேக் செய்யப்படுகிறது. அதில் எந்த உரிமையும் ஒரு படைப்பாளியாக நான் கோர முடியாது. இதுதான் இந்தியா" என்று குமுறுகிறார் இந்த பிரம்மச்சாரி.

- விஷுவல்தாசன்

வலம்புரி முத்து

18

அழகப்பன்தான் அவனை ஜாமீனில் எடுக்க வந்திருந்தார். துணைக்கு வக்கீல் கருப்பையாவும் வந்திருந்தார். குத்தகைக்காரனிடம் எடுப்பாகப் பேசும் அழகப்பனின் முகம் நினைவில் எழுந்தது. கணக்குப் பிள்ளையிடம் இரையும் முகம் நினைவில் எழுந்தது. அன்னமுண்டி லட்சுமி அதிகமாக ஒரு கரண்டி குழம்பு ஊற்றினால் "...ஞ்ச" எனச் சொல்லி மறுக்கும் முகத்தின் முறுவல் நினைவில் வந்தது. வேலைக்காரக் குட்டிகளுக்குச் சோறு போட்டுக் கொண்டிருக்கும்பொழுது குறுக்கே வந்தால், கூடுதலாக இரண்டு துண்டு இறைச்சி போடச் சொல்லும் கருணை முகம் ஞாபகம் வந்தது. இப்பொழுது இது எதுவுமே இல்லாமல், இன்ஸ்பெக்டர் முன்னிலையில் தலை கவிழ்ந்து கிடக்கிறது. முகமே இல்லாத முகம்.



"தம்பியை வாரம் ஒரு வாட்டி ஸ்டேஷனில் கையெழுத்துப் போட்டிரச் சொல்லுங்க. எங்க அனுமதியில்லாம காரைக்குடியை விட்டு வெளியே போயிரக் கூடாது. கேசு பிரேம் பண்ணி சார்ஜ் ஷீட் கொடுத்துட்டோமுன்னா கேசு வலுவாயிடும். பேச்சு வார்த்தைக்கு வந்தியன்னா, எலி தட்டி விட்டுருச்சு, பூனை தட்டி விட்டிருச்சு, விளக்கு கீ்ழே விழுந்து தீப்பிடிச்சுக்கிடுச்சின்னு கேஸை பைசல் பண்ணிப்புடுவோம்."

"வக்கீலு நீயும் சொல்லுய்யா. சுளுவா முடிச்சுப்புடலாம்" என இன்ஸ்பெக்டர் நரித்தனமாக இளித்தான்.

"இன்னொரு அதிர்ச்சியா? எனக்கா? வராது ஆச்சி! சொல்லுங்க."

கருப்பையா, இன்ஸ்பெக்டருக்கு சமாதானம் சொல்லிவிட்டு, அவர்களை வெளியில் அழைத்து வந்தார்.

வெளியில் வந்ததும் கதிரேசன், மூச்சை பலமாக உள்ளுக்குள் இழுத்து விட்டான். நான்கு நாட்கள்தான் லாக்-அப் வாசம். நான்கு சுவர்களுக்குள் அடைத்து வைக்கப்பட்ட புழுக்கமும், வேதனையும் ஆயுள் முழுவதற்கும் போதுமானதாக இருந்தது. மண் புழுதி, இலை, செடி, காக்கை, குருவி, மனிதர்கள், மேகம், வானம் எல்லாமே புதிதாகத் தெரிந்தன.

"தாகத்துக்கு ஏதாச்சும் குடிக்கிறியா?" என்றார் அழகப்பன்.


"வேணாண்ணே."

"நான் அந்த ஏட்டு கிட்டே துட்டு கொடுத்து விட்டேன். நல்ல சோறு வாங்கிக் கொடுத்தாரா?"

"லாக் அப்புக்குள்ள சோறே இறங்காதுண்ணே."

வளைவு வீட்டுக்கு முன் கார் நின்றது. தோட்டக்காரன் கதவைத் திறந்து விட்டான். வாதா மரத்தின் பழுத்த மஞ்சள் நிற இலைகள், வாரப்படாமல் சிமெண்டுத் தரையில் சிதறிக் கிடந்தன. அணில் கடித்துப் போட்ட செஞ்சிவப்பு வாதாம் பழங்கள் ஒன்றிரண்டு தரையில் இருந்தன.

முன் கட்டில் கணக்கப்பிள்ளை முத்தையா,



சத்தியப்ரியன்

சிட்டை எழுதிக் கொண்டிருந்தார். வரிசையாக அடுக்கப்பட்ட பில்கள் கிளிப்பில் செருகப்பட்டிருந்தன. மைபுட்டி, கட்டைப் பேனா, பஞ்சிங் மெஷின், மல்லாந்து கிடக்கும் ஃபைல் என, அவரே ஒரு சின்ன அலுவலகம் போலிருந்தார். செட்டிமார்களின் தனி அடையாளம். கதிரவனைப் பார்த்ததும் மூக்குக் கண்ணாடியைத் தூக்கி விட்டுக் கொண்டு "வந்துட்டீங்களா தம்பி?" எனக் கேட்டு விட்டு, பதிலுக்குக் காத்திராமல் மீண்டும் பேரேட்டினுள் மூழ்கத் தொடங்கினார்.

பட்டகசாலையில் பெண்கள் தென் பட்டனர். அழகப்பனின் பங்காளி வீட்டுப் பெண்களும், லட்சுமி அன்னை முண்டியும், சரசுவதி அண்ணமுண்டியும் பங்காளி வீட்டுப் பெண்ணில் ஒருத்தி கையிலிருந்த மோர் ஜாடியிலிருந்து விரல் நனைத்து கதிரேசன் மேல் தெளித்து, "கொளுந்தனாரே, கவர்மென்ட் சாப்பாடெல்லாம் எப்படி? பலமா?" எனச் சிரித்தாள். ஜாடி மோர் மூக்கில் பட்டு புளித்தது. கதிரேசன் பதில் சொல்லாமல் தலையைக் கவிழ்த்துக் கொண்டான். செட்டிப் பெண்களுக்கு விஷயம் தெரிந்தால் போதாதா? பெரி.அழ.சிதம்பரம் செட்டியார் வீட்டில், குலத்தில் இல்லாத வழக்கமாகக் கூட்டி வந்து சொந்தம் கொண்டாடிய வைப்பாட்டி மகன், உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்த கதையாக, கணக்கை மறைக்க, கடைக்குத் தீயை வைத்து விட்டான் என்ற செய்தியை ஒன்பது கோவில்களில் பாக்கு வைத்து, எழுபத்தைந்து ஊர்களில் முரசறைந்திருக்க மாட்டார்களா?

"ஆச்சி, சும்மா இருங்க" என சரசுவதி பெண்களைச் சத்தம் போடுவது காதில் விழுந்தது.

"நடந்தது நடந்திருச்சு! இனிமே மொகத்தைத் தொங்கப் போட்டு என்ன ஆவுறதாம்" என்றாள் லட்சுமி அண்ணமுண்டி. கணக்குப் பார்க்கத் தொடங்கினால் துடைப்பத்திலிருந்து, வைர அட்டிகை வரை கணக்குப் பார்க்கும் குலம். பங்காளி வீணாகப் போனாலே, பாகம் பிரித்து ஒதுக்கி வைக்கும் குலம். யாரிடம் முறையிடுவது? இது தன் மீது வீசப்பட்ட சேறு என்று?

"நீ கால் கழுவிட்டு வா கதிரு. சோறு போடுறேன். வழக்கு, பஞ்சாயத்து, தீர்ப்பு எல்லாம் பிறகு" என்றாள் சரசுவதி.

"ஆச்சி எங்கே, அண்ணமுண்டி?"

சரசுவதி அவனை ஒரு முறை தீர்க்கமாகப் பார்த்தாள்.

"நாலஞ்சு நாளா மேனிக்கு சுகமில்லாம கெடக்காக."

"என்ன செய்யுது ஆச்சிக்கு?" பதறிப் போனான் கதிரேசன்.

"ரத்தக் கொதிப்பு அதிகமாயிடுச்சு. ஒரு வா சோறு சாப்பிட்டுட்டுப் போய்ப் பாரு கதிரு" என சரசுவதி கூப்பிட்டதை மறுத்து, கதிரேசன் தெய்வானை ஆச்சியைத் தேடிக் கொண்டு இரண்டாம் கட்டுக்குள் நுழைந்தான்.

"வசூல்ராஜா நாளை மறுநாள் இங்கே வர்றானாம்... கடிதம் வந்திருக்கு!"

"மாப்பிள்ளை நம்மிடம் அடிக்கடி பணம் பிடுங்குவது உண்மைதான்... அதுக்காக அவரை இப்படியெல்லாம் மரியாதையில்லாமல் பேசாதீங்க!"

- உ. ராஜாஜி

தெய்வானை ஆச்சி நீள் வரிசையில் கட்டி விடப்பட்டிருந்த அறைகளில் நாகப்பனின் அறையில், தேக்குமரக் கட்டிலில் படுத்து கண் மூடி இருந்தாள். மின் விசிறி சுழலாததால் மேனி எல்லாம் வியர்த்திருந்தது. வெள்ளைக் கலை. வெண்ணிறத் திருநீற்று நெற்றி. பச்சை நரம்பு ஓடும் பூஞ்சையான தேகம். அன்பும், சாந்தமும் உருவான முகம். எழுந்து கிடந்தால் பம்பரமாகச் சுழலும் மேனி, அடிபட்ட பம்பரம் போல் கட்டிலில் கிடக்கிறது.

கதிரேசன் மின் விசிறியைச் சுழல விட்டு ஆச்சியின் காலடியில் சென்று அமர்ந்தான். காற்றுப் பட்டதும் விழித்துக் கொண்ட தெய்வானை ஆச்சி "யாரு கதிரா?" என்றபடி கண்மலர்ந்தார்.

கதிரேசன் அசையாமல் இருந்தான்.

"எப்ப வந்த?"

"இப்பதான்."

"ஏய்ய?" என ஒரே ஒரு கேள்வி தான்

ஆச்சி கேட்டாள். உடைந்து அழத் தொடங்கினான் கதிரேசன். ரெட் ஆக்ஸைட் இழைக்கப்பட்ட சிமெண்ட் தரையில் அமர்ந்தான். படுத்திருந்த ஆச்சியின் கால்களைக் கட்டிலுடன் சேர்த்து கட்டிப் பிடித்து, நெடுநேரம் அழுது கொண்டிருந்தான். ஆச்சியின் கண்களிலும் நீர் வழிந்து கொண்டிருந்தது.

கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டான்.

''இங்கணயா இருக்க?'' என்றபடி அண்ணாமலை உள்ளே நுழைந்தான்.

''அண்ணே!'' என்று கதிரேசன் விருட்டென்று எழுந்தான்.

''கதிரு! என் ரூமுக்கு வா! ஆத்தா ரெஸ்டு எடுக்கட்டும்'' என அழைத்துக்



கொண்டு போனான்.

''என்ன நடந்தது கதிரு?''

''விபத்தா, சதியா, தீ எப்படிப் பத்திச்சினுக்கூட எனக்குத் தெரியாதுண்ணே. கணக்கு வழக்கு முடிக்கறப்பவே பத்தரை மணியாயிருச்சு. வழியில ராமச்சந்திரனை கையில ஒரு சிமெண்ணெய் கேனோட பார்த்தேன். ராப்பொழுது ஏன் சிமெண்ணெய் கேனோட திரியறன்னு கேட்டதுக்கு, என்னவோ சாக்கு சொன்னான். அவன் திடுப்புன்னு கேனை நீட்டினப்ப, நான் யோசிக்காம அதைத் தொட்டு வாங்கிட்டேன். அவன் ரொம்ப வெவரமா அந்த கேன்ல அவன் கை படாம பாத்துக்கிட்டான். அதுக்கப்புறம் என்ன நடந்துச்சுன்னு எனக்குத் தெரியாதுண்ணே.''

''நெசந்தானே நீ சொல்லுறது?''

''குன்னக்குடியான் சாட்சியா நான் பொய் சொல்லலைண்ணே. தன்ராஜ் கூசாம பொய் சொல்றாண்ணே. அவன் வயித்தில தீக் காயம்னு காட்டினது தீக் காயமில்லண்ணே. நாலு வாரம் முன்னால ஹெரண்யான்னு பெரிய ஆசுபத்திரியில் பண்ணிக்கிட்ட அறுவைச் சிகிச்சைத் தழும்புண்ணே. ஏன் அவன் அப்படிச் சொல்றான்னு தெரியலை. போலீஸ் மிரட்டுதோ, வேறு யாரேனும் மிரட்டுறாங்களோ!''

''உனக்கு யாரு பேருலயாவது சந்தேகம் வருதா?''

''இல்லண்ணே.''

''சொல்லுய்யா. யாரோ பண்ணின குத்தத்தை நீ சுமக்க வேணாம்.''

கதிரேசன் பதில் சொல்லவில்லை.

''என்ன செய்யப் போற?''

கதிரேசனின் முன்பு கேள்வி வீசப்பட்டது.

யாரிடம் நிரூபணம் ஆக வேண்டும்? நிரூபிப்பதால் அதிகப்படியாக என்ன லாபம் வந்து விடப் போகிறது? நிரூபணங்களுக்கு அப்பால் தன் தூய்மையை, தன் ஆத்மாவை நேசிக்கும் ஜீவன், அவனைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? தாமரை? தெரியவில்லை.

''சுக்கா வறுவல் வைக்கட்டா?''

''மோரு ஊத்துங்க அண்ணமுண்டி. பசியில்ல.''

''வக்கீலு கருப்பையா கெட்டிக்கார வக்கீலுய்யா. நீ மனச உளப்பாம சாப்பிடு. உன் பேரில் குத்தமில்லையில்ல?'' என்றாள் சரசுவதி.

கதிரேசன் பதில் சொல்லவில்லை.

முற்றத்தில் கை கழுவியபடியே சரஸ்வதியிடம் ''நாகப்பண்ண இல்லியா?'' என்றான்.

''மெட்ராஸ் போயிருக்காக.''

மாலை சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியில் கிளம்புவதற்கு முன்னால், பட்டகசாலையில் துணி மடித்துக் கொண்டிருந்த சரஸ்வதியிடம் மெதுவாகக் கேட்டான்.

''தாமரை வீட்டிலருந்து யாராச்சும் வந்தாகளா ஆச்சி?''

சரஸ்வதி அவனிடமிருந்து இப்படி ஒரு கேள்வி எப்பொழுது வரும் என்ற நடுக்கத்தில் இருந்தாள்.

''தாமரை அப்பச்சி வந்திருந்தாகளா?''



கேப்டன் மேடம்

"நான் வெளியூரில் படப்பிடிப்பில் இருப்பதால், என் பிறந்த நாள் அன்று வாழ்த்துச் சொல்ல ரசிகர்கள் யாரும் சென்னைக்கு வர வேண்டாம்" என்று ரஜினிகாந்த் தான், வருஷா வருஷம் அறிக்கை விடுவார். இந்த முறை விஜயகாந்தும்!

கூடவே இன்னொரு செய்தி!

தம்முடைய மனைவி பிரேமலதாவை விரைவில் அரசியலில் களமிறக்கவிருக்கிறாராம்! அதற்கான முன்னோட்டமாக, தம்முடைய பிறந்த நாள் விழாவில், விஜயகாந்த் சார்பில் அனைத்து நல உதவிகளையும் பிரேமலதாவே வழங்கினார்.

- ஸ்ரீ

என்றான் மீண்டும்.

"அவ அண்ணன் அருணாசலமும், நேமத்தான்பட்டி சிதையும் வந்திருந்தாக."

"எதுக்கு வந்திருந்தாக?"

"நான் சொல்றதக் கேட்டு அதிர்ச்சி அடையக் கூடாது."

"இன்னொரு அதிர்ச்சியா? எனக்கா? வராது ஆச்சி! சொல்லுங்க."

"கலியாணம் சொல்ல வந்தாக."

கதிரேசன் அதிர்ச்சி அடையமாட்டேன் எனக் கூறி இருந்தாலும், அவன் உடல் ஒருமுறை அதிர்ந்தது. மனத்தில் விழும் அடிகள் மனத்தைப் பக்குவப் படுத்தினாலும், இனி ஆயுள் முழுவதும் நினைத்துப் பார்த்து தடம் தடவிக் கொள்ளும் விதமாகவே அடிகள் விழுந்தன.

"யாரு மாப்பிள்ளை?" என மீட்டும் கேட்டான். குரல் நடுங்கியது.

"கொளுந்தனாரோட சென்னை சிநேகிதர். பழனி பாத யாத்திரைக்கு வந்தானே, அவந்தான்."

"திருஞானமா?"

"ம்."

"தாமரை சம்மதிச்சிருப்பாளா?"

"இது என்ன கேள்வி தம்பி? செட்டி நாட்டுப் பெண்களுக்கு ஏதுப்பா வாய்? பினாங்கு, சிங்கப்பூர், மலேசியான்னு, செட்டியார் ஊர் ஊரா சுத்தப் போற எடத்திலெல்லாம் வைப்பாட்டி வச்சுக்கிட்டாலும் ஆச்சிமார் எல்லாம் கண்ணகியா இருக்கணும்பீக. அரசல், புரசலா ஒன்னு ரெண்டு தப்பு நடந்து போச்சுன்னா, அந்த ஆச்சியை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவீங்க. சீதனம், நகை, சீலை, சிறுவாட்டுப் பணம், பண்டம், பாத்திரம், வட்டி, சீட்டுப்பணம் இதைத் தவிர, செட்டிப் பெண்களுக்கு வாழ்க்கையைப் பத்தின சிந்தனை ஏதய்யா? ரசனை ஏதய்யா? பேச்சு, சுதந்திரம் எதுவுமே இல்லாத அவளுக்கு, தன் காதலை வெளிப்படுத்த மட்டும் உரிமை இருக்குமா என்ன? பண்பாடு, தெய்வீகம், நெறி, கற்புன்னு ஆயிரம் கூடை மண் அவள் தலையில் கொட்ட காத்துட்டிருக்கே. பேசுறான் பேச்சு, தாமரை சம்மதிச்சிருப்பாளான்னு. போய்யா பேசாம! நீ என்ன செய்யப் போற?"

என்ன செய்யப் போகிறான்? அந்தக் கேள்வி அவனைத் துரத்தியது. மண்ணைத் தோண்டித் தோண்டி, பிள்ளைப் பூச்சியாய்க் குடைந்து கொண்டே போனது.

"அதனக் கண்மாப் பக்கம் தென்னந்தோப்பில் குத்தகைக்காரனைப் பார்த்துப் பேசிட்டு வந்திடறேன்" என சைக்கிளில் கிளம்பினான்.

(தொடரும்)

நடக்கின்றார்; நடத்தும்!

செப்டம்பர் 1 முதல் 7 வரை

அக்னிசர்மா பக்கம்




'பார்த்திபன் கனவு' படத்தின் இயக்குனர் கரு.பழனியப்பன் (விருச்சிகம்) திருமணத்தில்...

மேஷம்: உங்க தெய்வபலமும், தெய்வீக ஈடுபாடும் எடுத்த எல்லாக் காரியத்திலும் வெற்றி தேடித்தரப் போகுது. தெளிவான மனநிலையும், பயணங்களால அனுகூலமும் ஏற்படும். உத்தியோகத்தில் உற்சாகமான புதிய திருப்பம் ஒண்ணு காத்திருக்கு. வெளியூர்/வெளிநாடு பயணம் போக வேண்டி வரலாம். இண்டஸ்ட்ரீஸ், கமிஷன், டிராவல்ஸ், ரியல் எஸ்டேட் தொழில்கள் உயர்வடையும். குடும்பத்தில குரு பார்வையால மகிழ்ச்சியும், திருமண யோகமும் கூடிவரும். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கையால மகிழ்ச்சி உண்டாகும்.

ரிஷபம்: எந்தப் பக்கம் போனாலும் தொல்லை, எதிர்ப்புன்னு இருந்த நிலைமை இனிமே மாறி, திட்டமிட்டபடி எல்லாம் நிறைவேறும். புதிய அறிமுகம், பெண்களால நன்மை, தாரான பண நடமாட்டம்னு உற்சாகமான வாரம். உத்தியோகத்தில் தாமதமாகி வந்த உங்க கோரிக்கைகள் நிறைவேறும். பதவி உயர்வு கிடைக்கும். பொன், வெள்ளி, ஆபரணத் தொழில், ஓட்டல், வாகனம், சட்டம், காவல், ராணுவம் துறைகள் மேன்மையடையும். குடும்பத்தில் இதுவரை இருந்த கருத்து வேறுபாடு மறைந்து மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு உற்சாக, உல்லாச வாரம்.

மிதுனம்: கல்வி, விஞ்ஞானம், ஆராய்ச்சி என்று இருப்பவர்கள் சாதனையை நோக்கி முன்னேறும் வாரம். எதிர்பாராத பயணம், முக்கியஸ்தர் ஆதரவு, பண வசதி ஏற்படும். உத்தியோகத்தில் இதுவரை இருந்த பிரச்னைகள், குழப்பங்கள் தீர்ந்து சுமுகநிலை ஏற்படும். எலக்ட்ரிகல்ஸ், கம்ப்யூட்டர், கெமிக்கல்ஸ், கமிஷன் துறைகள் முன்னேற்றம் பெறும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். சுப காரிய முயற்சிகள் ஈடேறும். உடன் பிறந்தவர்கள் உதவுவார்கள். பெண்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

கடகம்: உங்க முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும்



கிட்டும் நேரம். பொருளாதாரத்தை மட்டும் கொஞ்சம் கவனமா பார்த்துக்கோங்க. செலவுகள் கியூவில வந்து கிட்டிருக்கு. தெய்வபலத்தை அபிவிருத்தி பண்ணிக்கறது நல்லது. உத்தியோகத்தில் அனுகூலமான திருப்பம் ஏற்படும்.

சிம்மம்: தெளிவும், நிதானமும்தான் உங்க பலம். தெய்வபலமும் கூடி அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும். வி.ஐ.பிக்கள் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் உங்க கோரிக்கைகள் நிறைவேறும். பதவி உயர்வுக்காகக் காத்திருப்பவர் ஸ்வீட் ஆர்டர் பண்ணிடலாம். ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ், போக்குவரத்து உபகரணம் தொழில்கள் மேன்மை பெறும்.

கன்னி: எதிர்பாரா பயணம், சரளமான பண வசதி, சுபச் செலவுன்னு மகிழ்ச்சியான வாரம். புதியவர் சந்திப்பு, அனுகூலம் தரும். உத்தியோகத்தில் நிம்மதியான சூழல் உண்டாகும். எந்தக் காரியமும் ஜஸ்ட் லைக் தட், நீங்க கேட்டவுடன் நடந்து சந்தோஷப்படுத்தும். உலோகப் பொருள், தோல் பொருள், கெமிக்கல், கலைத்துறை, ஆபரணம் தொழில்களுக்கு ஏற்றமான காலம்.

துலாம் : தெய்வபலம், தெய்வீக ஈடுபாடு அதிகமாகி உங்க பக்க பலமா நிற்கும். எடுத்த காரியமெல்லாம் அனுகூலமா முடியும். புதிய அறிமுகங்கள், தாராள பண வசதின்னு சந்தோஷமான வாரம். உத்தியோகத்தில புதிய திருப்பம் காத்திருக்கு. குழப்பங்கள் மறைந்து நிம்மதி கிடைக்கும். சட்டம், ராணுவம், காவல் துறையினர் முன்னணிக்கு வருவாங்க. கலைஞர்களும், அரசியல்வாதிகளும் ஏற்றம் பெறுவாங்க.

விருச்சிகம்: துணிவு, தன்னம்பிக்கை ரெண்டுமே உங்க பலம். புதிய முயற்சிகள்ல தயங்காம ஈடுபட்டு வெற்றி பெறுவீங்க. பண நெருக்கடி மறையும். பயணங்கள் அனுகூலம் தரும். புனித காரியங்களில் ஈடுபாடு ஏற்படும். உத்தியோகத்தில் அமைதியான சூழ்நிலை நிலவும். பதவி உயர்வு சிலருக்கு கிடைக்கும்.


தனுசு: இதுவரை இருந்த உங்க பாங்க் பாலன்ஸ் கொஞ்சம் குறையும். தெளிவான மனநிலையுடன், நிதானமா இருக்கறது நல்லது. அரசாங்க ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் சில பிரச்னைகள் ஏற்பட்டு நிவர்த்தியாகும். புதிய முயற்சிகள் அனுகூலமாகும். எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர், கலைத்துறை, உலோகவகை தொழில்கள் அனுகூலம் பெறும். குடும்பத்தில் உற்சாகமான சூழ்நிலை நிலவும்.

மகரம்: பொருளாதாரச் சிக்கல்கள் விலகி பண நடமாட்டம் கூடும். பயணங்களில் எச்சரிக்கை தேவை. புதியவர் அறிமுகம், தனவான்கள் ஆதரவு ஆகியவை கிடைக்கும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள், பலன் தரும். சக ஊழியர் ஆதரவு கிட்டும். யந்திரம், உலோகம், தோல், எலக்ட்ரானிக்ஸ், கெமிக்கல்ஸ் துறையினர் லாபம் பெறுவார்கள். குடும்பத்தில் குருபலம் நிறைந் திருப்பதால் சுப மங்கள காரியங்கள் நிறைவேறும்.

கும்பம்: துணிவு தன்னம்பிக்கை கூடினாலும், செலவுகளும் கூடிக்கிட்டே வர்றதால நிதானமா யோசிச்சி சமாளிங்க. முக்கியஸ்தர் ஆதரவு கை கொடுக்கும். தெய்வ பலத்தை அபிவிருத்தி பண்ணிக்கறது எல்லாவற்றிலும் காப்பாற்றும். உத்தியோகத்தில் ஒரு அதிர்ஷ்டம் காத்திருக்கு. எல்லாக் காரியங்களும் அனுகூலமாவே நடக்கும். யந்திரம், எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர், எண்ணெய், ஜவுளி, வகை வியாபாரங்கள் லாபம் தரும்.

மீனம்: இதுவரை இருந்த சங்கடம், தடை எல்லாம் விலகி கிரீன் சிக்னல் கிடைத்து மளமளன்னு முன்னேறுவீங்க. பொருளாதாரம் உயர்ந்து ஆறுதல் தரும். உத்தியோகத்தில் நிம்மதியான சூழ்நிலை நிலவும். தாமதமாகி வந்த கோரிக்கைகள் நிறைவேறும். புதிய முயற்சிகள் வெற்றி தரும். கலைத்துறை, ஆபரணத் தொழில், ரியல் எஸ்டேட், ராணுவம், சட்டம், காவல், துறையினர் முன்னேற்றம் காணுவார்கள்.





வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
89, (பழைய 42) காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம் - 612 001.
E-mail : vedagdps@sancharnet.in - Website : www.geocities.com/gdpskmu

☎ : (0435)
Off : 2425948
Fax : 2423777
Patasala : 2422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 462 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 150 மாணவர்களுக்கு 14 வேத, சாஸ்திர அத்யாபகர்கள் புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். புதிய பாடசாலை கட்டிட திறப்பு விழா 21-6-2004 திங்கள்கிழமை பூஜ்யஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களால் திறக்கப்பட உள்ளது

தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு நன்கொடை திட்ட விபரங்கள்	நன்கொடை தொகை	நிரந்தர வைப்பு நிதி "Corpus Fund"
ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs. 500	Rs. 8,000
அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) க்ருஷ்ண (or) சுக்ல பக்ஷ த்வாதசி ஒரு ஸமாராதனைக்கு [Please choose one specific day of a particular month in a year for Samaradhana]	Rs. 1,500	Rs. 25,000
வேதம் பயிலும் ஒரு மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs. 2 Lakhs

நன்கொடைக்கான தொகையை Cross செய்யப்பட்ட D.D/ Cheque-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

100% நிதியுதவி*

அரிய வாய்ப்பு, சிறந்த முதலீடு.

50 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள அற்புதமான வீட்டுமனைகள்

ராதை நகர்	ஸ்ரீ கிருஷ்ணா நகர்	ருக்மணி நகர்
DTCP Appl. No. 128/2004	DTCP Appl. No. 127/2004	DTCP Appl. No. 156/2004

காட்டாங்கொளத்தூர் ரயில் நிலையம் எதிரில்

அன்னை அபிராமி நகர்

(DTCP அங்கீகாரம் பெற்ற மனைகள்)

கூடுவாஞ்சேரி அருகில்

பணம் முதலீடு செய்யாமலேயே லாபம் சம்பாதிக்கும் வழி. நீங்கள் மாதச் சம்பளம் பெறுபவராக இருந்தால் உடனே இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவும். (* அன்னை அபிராமி நகருக்கு மட்டும்)

HOME FINANCE (DBI HOME FINANCE) | மனை வாங்க நிதியுதவி | Sundaram Home Finance Limited

BLB Estates (P) Ltd.
Behind Apollo Cancer Hospital, Teynampet, Ch - 18.
E-mail : blbestmail@vsnl.net www.blbestates.com
நன் மதிப்பில் முதலீடு

இலவசமாக மனையைப் பார்வையிட தொடர்பு கொள்க :
2435 7721
2435 7731



இளமை எங்கெல்லாம் நிரம்பி வழிகிறதோ, அங்கே நம் காமிராவும், கண்களும் மின்னிக் கொண்டிருக்கும் என உங்களுக்குத் தெரியாதா! அதுவும் ஆட்டம், பாட்டம், ஃபேஷன் ஷோ கொண்டாட்டம் என்றால் கேட்க வேண்டுமா? நிகழ்ச்சியை நடத்தி புண்ணியம் தேடிக் கொண்டவர்கள் Hindustanbazaar.com. தங்களின் ஐந்தாவது ஆண்டு விழாவை Harmony'04-ஆகக் கொண்டாடி, சென்ற வாரம் சென்னை காமராஜர் அரங்கத்தையே இளமையால் திக்குமுக்காடச் செய்துவிட்டனர்.

டபிள்யூ சிசி கல்லூரிப் பெண்கள் நிகழ்த்திய ஃபேஷன் ஷோவில் அரங்கிலிருந்த ஏ.ஸி.யையும் மீறி, எல்லாருக்கும் வியர்த்தது. 'நாங்கள் மட்டும் சளைத்தவர்களா' என லயோலா காலேஜ் மாணவர்களும், கலர்ஃபுல் காஸ்ட்யூமில் கலக்கி, கல்லூரிப் பெண்களின் கைதட்டலை அள்ளினார்கள். 'கோலிவுட்'காரர்களுக்கு நாங்கள் கொஞ்சம்கூட சளைத்தவர்களல்ல என, 'ஜிங்குச்சா' காஸ்ட்யூமில் அவர்கள் போட்ட ஆட்டத்தில் ஆடியன்ஸ் பலர் மன்மத ராசாவாக மாறிப் போயினர். இவ் விழாவில் நம் டிடெக்டிவ் மூளை கண்டு பிடித்த உண்மைகள்:



ஹனி...ஹனி... ஹார்மோனி!



1) விழாவின் காஸ்ட்யூம் டிசைனர் ராமராஜனாக இருந்திருக்கலாம்.

2) கடல் கன்னியாக வேடமிட்ட பெண்ணொருத்தியின் காலில் கட்டப்பட்டிருந்தது கலர்ஃபுல் சாக்கு.

3) மாணவர்கள் அணிந்திருந்த கோட் எல்லாம் விஜயகாந்த் ரெயின் கோட்.

- மருதன்

க்ளிக்ஸ்: ஷிவ்



* பட்டமளிப்பு விழா

குற்றங்களுக்கு அப்பால்...

பௌர்ணமிச் சந்திரனைப் பார்த்து ஆண்டுகள் பலவாகி விட்டது. நாற்பது வயதுச் சந்திரனுக்கு. எல்லையற்ற பால்வெளியில் சுதந்திரமாய்ச் சுற்றிக் கொண்டிருக்கிறது வானத்துச் சந்திரன். நமது சந்திரனோ பத்துக்குப் பத்து நீள அகலம் கொண்ட அறையின் எல்லையைத் தாண்ட முடியாத ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசி. வெளியுலகைப் பார்க்க முடியவில்லை என்ற புழுக்கத்தைக் காட்டிலும், தாம் வெட்டிக் கொன்ற மலைச்சாமியின் மனைவி புஷ்பா, வறுமையால் தனது நான்கு பிள்ளைகளோடு தற்கொலை செய்து கொள்ள முயன்று, காப்பாற்றப்பட்டாள் என்ற செய்தி கொடுத்த மன அழுத்தம் காரணமாக தமது விழிகளை கண்ணீரால் கழுவியபடியிருந்தார். அப்போது தான் சிறைக்கு வருகிறார் பேராசிரியர் நோவா.



* மருத்துவ முகாம்



* நோவா

இவர் சந்திரனுக்கு முதன்முதலில் உபதேசித்த வார்த்தை மன்னிப்பு. எத்தனை பெரிய குற்றத்துக்கும் மன்னிப்பு எப்படி அற்புத மருந்தாகிறது என்பதை உணர்ந்து கொண்டார் சந்திரன். தமக்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்தை புஷ்பாவுக்கு எழுதிக் கொடுக்க ஏற்பாடு செய்யும்படி நோவாவிடம் சொன்னவர், புஷ்பா விரும்பினால் அவரைத் திருமணம் செய்து கொள்ளவும் தயார் என்று சொல்லியிருக்கிறார்! மனைவியை இழந்த சந்திரன். (சந்திரனின் மனைவியை, மலைச்சாமியின் ஆட்கள் பழிக்குப் பழியாகக் கொன்று விட்டனராம்!)

மனம் மாறிவிட்ட சந்திரனின் விருப்பம் பற்றி புஷ்பாவிடம் எடுத்துச் சொல்லி, அவரைச் சம்மதிக்க வைத்த நோவா, பத்தாண்டுகளுக்கு முன்பு சந்திரனை பரோலில் அழைத்து வந்திருக்கிறார். அன்றைய மதுரை மாவட்ட ஆட்சியர் தேவராஜ் முன்னிலையில், அமெரிக்கன் கல்லூரி வளாகத்தில் திருமணம். இது அன்று. ஆனால் இன்று?!

தண்டனை முடிந்து வெளியே வந்த



சந்திரன், புது மனிதனாக பாத்திர வியாபாரம் செய்து, தமது புதிய குடும்பத்தைக் காப்பாற்றுவதோடு, புஷ்பாவின் பிள்ளைகளுக்குத் திருமணமும் செய்து வைத்து விட்டார்.

ஓர் உயிரை வாங்கிவிட்டு, இன்று ஊரில் பல உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் டாக்டர் சுந்தரத்தின் வாழ்க்கை, சிறிதும் எதிர்பாராத் திருப்பங்கள் நிறைந்தது. பல லட்சம் செலவு செய்து எம்.பி.பி.எஸ். படிக்க வைத்திருக்கிறார், சுந்தரத்தின் பாசமான அண்ணன். இரண்டாமாண்டு படித்துக் கொண்டிருந்தபோது, சிறிய வாய்த் தகராறு கைகலப்பில் முடிய, கையில் கிடைத்ததை எடுத்து அண்ணனை அடித்ததால், மூர்ச்சையாகிக் கீழே விழுந்த அண்ணன், அதன் பிறகு எழுந்திருக்கவேயில்லை! இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத சுந்தரத்துக்கு ஆயுள் தண்டனை.

முன் கோபத்தால் டாக்டர் கனவு சுக்கல் நூறாகி, மனம் நொறுங்கிக் கிடந்த சுந்தரத்தைச் சந்திக்கிறார் நோவா. உடன் தமிழக ஆளுநருக்குக் கடிதம் எழுதுகிறார். பகலில் கல்லூரிக்குச் சென்று படிப்பைத் தொடரவும், கல்லூரி முடிந்ததும் சிறைக்குத் திரும்பவும் சுந்தரத்துக்கு சிறப்பு அனுமதியும் பெற்றுத் தருகிறார். மீண்டும் உயிர்தெழுந்த சுந்தரம், படிப்பை முடித்து, முதல் வகுப்பில் தேறி, நன்னடத்தைக்காக பத்தாண்டுச் சிறை வாசத்தை முடித்து, விடுதலை பெற்று வெளியே வருகிறார். இன்று, மனிதாபிமானம் மிக்க மருத்துவராகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்.

இப்படி வாழ்க்கையே இருண்டு, மண் மூடிவிட்டதாக வாழ்ந்து வந்த, பல்லாயிரம் சிறைவாசிகளை, சிறந்த மனிதர்களாகச் செதுக்கியிருக்கும் நோவா யார்...?

மதுரை, அமெரிக்கன் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர். கல்லூரியில் பணிபுரிந்தபோது, கல்லூரி ஆசிரியர்களின் பணிப்பாதுகாப்பை முன்நிறுத்திப் போராட, சக பேராசிரியர்களுடன் இணைந்து இவர் தொடங்கிய அமைப்பு, 'அணைக்கும் கரங்கள்'. 1979ல் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி, மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மறியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். பொதுவாக காலையில் கைது செய்து, மாலையில் விட்டு விடும் காவல் துறை, நீதிமன்றக் காவலில் மதுரை மத்திய சிறையில் அடைத்திருக்கிறது. அதன் பிறகு என்ன நடந்தது என்பதை இனி நோவா சொல்லக் கேட்போம்:

"சிறையில் எங்களைப் போன்ற விசாரணைக் கைதிகள் முதல், ஓராண்டு, இரண்டாண்டு தண்டனை பெற்றவர்கள், ஆயுள் கைதிகள் வரை (மரண தண்டனைக் கைதிகள் நீங்கலாக) எல்லோரும் ஒன்றாக இருப்பதைக் கண்டேன். சிறையில் இவர்களுக்கு வேலை எதுவும் இல்லாததால், கூடிக் கூடிப் பேசுகிறார்கள். சிறையின் பிரபலமான கைதிகளுடன் புதுக் கைதிகளுக்குப் பழக்கம் ஏற்படுகிறது. இதனால் குற்றம் பற்றிய இலேசான சலனம் கூட அற்றுப் போய், பல குற்ற நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டு வெளியே வருகிறார்கள். முன்பை விட பெரிய குற்றவாளிகளாக மாறிவிடுகிறார்கள். குறிப்பாகக் குழந்தைகளை எப்படிக் கடத்துவது, ஜேப்படித் திருட்டு, கள்ள நோட்டு அடிப்பது,

போதைப் பொருள் கடத்தல் என்று எல்லாவற்றையும் கற்றுக் கொண்டு விடுகிறார்கள். இதைக் கண்கூடாக உணர்ந்து பொறுக்க முடியாமல், அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆருக்குக் கடிதம் எழுதினேன். இதற்கு ஒரே தீர்வு, அவர்களுக்குக் கல்வி வழங்குவதுதான். கல்வி கற்றால் அவர்கள் ஓரளவு திசை திரும்ப வாய்ப்பு உள்ளது என்ற தீர்வை யும் எழுதினேன். கடிதத்தைப் பரிசீலித்த எம்.ஜி.ஆர்., வாரத்தில் மூன்று தினங்கள் சிறைக்கு உள்ளே சென்று இலவசக் கல்வி வழங்கிட, பிரத்தியேக அரசாணை மூலம் அனுமதி வழங்கினார். அன்று மதுரை மத்திய சிறையில் தொடங்கிய பணி, இன்று அந்தமான் சிறைவரை விரிவாகி இருக்கிறது'' என்கிறார்.

எவரும் குற்றவாளிகளாகப் பிறப் பதில்லை. தண்டனை முடிந்து மனம் திருந்தி வெளியே வருபவர்களை, மீண்டும் குற்றவாளியாகப் பார்க்கும் கொடூரம் மாறவேண்டும். சிறைவாசி களின் குழந்தைகளையும் குற்றவாளிகள் போல் நடத்தக் கூடாது. தண்டனை பெற்று வெளியே வந்தவர்களும், அவர் களது பிள்ளைகளும் நல்ல குடிமக்களாக வாழ முடியும்'' என்கிறார் நோவா.

பேராசிரியர்களின் துணையோடு சிறைக் கைதிகள் ஆறாயிரம் பேரைப் பட்டதாரிகளாக உருவாக்கியிருக்கிறது இவரின் 'அணைக்கும் கரங்கள்' அறக் கட்டளை. கல்வியோடு மட்டும் நின்று விடாமல், சிறைவாசிகளின் குழந்தை களைப் படிக்க வைப்பது, அவர்களைச் சிறைக்கு அழைத்து வந்து அப்பா, அம்மாவைக் காட்டுவது, திருமண வயதை எட்டிவிட்டால் மணம் முடித்து வைப்பது, என்று சேவையின் எல்லையை விரிவுபடுத்திக் கொண்டே செல்கிறார் நோவா.

- ஜேஜோ

படங்கள்: ராஜன்


உறவுகள் தொடரட்டும்!

சமீபத்தில் எனது மகளின் பூப்பு நன்னீராட்டு விழா ஒரு திருமண மண்ட பத்தில் நடந்தது. விழாவில் கலந்து கொண் டவர்களையும், விழாவை சிறப்பாக்க உதவிய சமையல்காரர், நாதஸ்வர வித்வான், ஃபோட்டோ கிராஃபர், வீடியோ எடுத்தவர் என அனைவரையும் போட்டோ எடுத்தோம்.

விழா முடிந்து சில நாட்களுக்குப் பிறகு நானும் மகளும் பூப்பு நன்னீராட்டு விழா போட்டோ ஆல்பத் தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது என் மகள், ''அப்பா விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த வர்கள் உள்ள ஃபோட்டோக்களில் ஒரு பிரிண்ட் எடுத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பினால், அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்களே, அவ்வாறு செய்யலாமா?'' என்று கேட்டாள்.

மகளின் எண்ணம் எனக்கும் பிடித்துப் போக சுமார் நூறு ஃபோட்டோக்களுக்கு பிரிண்ட் போட்டு, ஃபோட்டோவின் பின்னால், ''உறவுகள் தொடரட்டும், நட்பு வளரட்டும்'' என்று எழுதி, கையெழுத்திட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு ஃபோட்டோவை அனுப்பிவைத்தேன். ஃபோட்டோவைப் பெற்றுக் கொண்ட பலர் மகிழ்ச்சியுடன் நன்றிக் கடிதம் அனுப்பியிருந்தார்கள்.

- சுந்தர் சுந்தரி





மயிலையார் பாரீரா

சுமார் ஒன்றரைக் கோடி ரூபாயில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது மயிலை கபாலீசுவரர் திருக்கோயில்.

யாகசாலை மண்டபம், கபாலீசுவரர் - கற்பகாம்பாள் சந்நிதிகள், திருமடப்பள்ளி, வாகன அறைகள், பிரசாத அறை, நவராத்திரி மண்டபம், திருக்கல்யாண மண்டபம், தங்க ரத அறை, அன்னதானக் கூடம், ராஜ கோபுரம், பதினாறுகால் மண்டபம், திருக்குளம், நீராழி மண்டபம் - எதையும் விட்டுவைக்கவில்லை. அத்தனையும் பழுது பார்க்கப்பட்டு, புதுப் பிக்கப்பட்டுவிட்டன.

திருக்கோயிலின் கிழக்குப் பகுதியில் ராஜகோபுரம். இருபது மீட்டர் நீளமும், பதினைந்து மீட்டர் அகலமும் உடைய பரப்பில், ஏழு தளங்களும், ஒன்பது கலசங்களும் கொண்டுள்ளது. உயரம் நாற்பது மீட்டர்!

திருக்கோயில் மேற்கு நோக்கி இருக்கிறது. வாயிலின் முன்புறம் நடு

மண்டபத்தோடு கூடிய திருக்குளம்தான் கபாலி தீர்த்தம்.

சிவலிங்கமாக மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார் கபாலீசுவரர். பெருமானுக்கு வலப்புறம், தெற்கு நோக்கி, தனிச் சந்நிதியில் கற்பகாம்பாள். பெருமானுக்கு இடப்புறம், மேற்கு நோக்கி சிங்காரவேலன் சந்நிதி. கற்பகாம்பாளுக்கு நேர் தெற்கே, வாயிலார் நாயனார் சந்நிதி.

கோயிலின் வடக்கு வெளிச்சுற்றில், தல விருட்சமான புன்னை மரம். அரச கோபுரம் என அழைக்கப்படும் கீழே, வாயிலில் கூத்தாடும் பிள்ளையார்! குறை நீக்கி அருளுகிறார் இந்த நர்த்தன விநாயகர்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கே வந்த கிரேக்க சரித்திர ஆசிரியர் தாலமி, இவ்வூரை 'மல்லியார்பா' என்று குறிப்பிட்டிருக்கிறாராம். மயில்கள் மிகுதியாக இருந்து, ஆர்த்தெழுந்த காரணத்தால் மயிலார்ப்பு எனப் பெயர் பெற்று, பிறகு வழக்கில் மயிலாப்பு என்றாகிவிட்டது. 'மங்குல் மதி தவழ மயிலாப்பில் உள்ளார்' என திருநாவுக்கரசர் பாடியிருக்கிறார்.

திருமயிலையைப் பற்றியும், கபாலீசுவரரைப் பற்றியும் எழுந்த முதல் இலக்கியம், திருஞானசம்பந்தர் பாடிய 'மட்டிட்ட புன்னையங்கானல்' எனத் தொடங்கும் பதிகம்.

ஆகஸ்ட் 30 ஆம் தேதி திங்கட்கிழமை, காலை 6 மணி முதல் 7 மணிக்குள் கும்பாபிஷேகம் நடைபெற்று, செப்டம்பர் 5ஆம் தேதி வரை இசைவிழாவும், ஒரு மாத காலத்துக்கு மண்டலாபிஷேகமும் தொடர்ந்து நடைபெற இருக்கின்றன.

குடமுழுக்கு நடக்குமா, நடக்காதா என்று இருந்த நிலையை மாற்றி, அறநிலையத்துறை அதிகாரிகள் பம்பரமாகச் சுழன்று வேலைகளை முடித்து வைக்க, அறங்காவலர்கள் அத்தனை பேரும் கைகொடுத்திருக்கிறார்கள். திருப்பணிக் குழுத் தலைவர் வேணு சீனிவாசன், தமது டி.வி.எஸ். நிறுவனத்தை எப்படி பளபளவென்று வைத்திருக்கிறாரோ, அதே மாதிரி, கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் கோயிலையும் பளிச்சென்று மாற்றி, பக்தர்களை மகிழ்வித்ததற்கு ஒரு கங்கிராட்ஸ்.

- சாருகேசி

இன்னாப்பா?



அருள்மிகு
கபாலீசுவரர்
கோயில்
குடமுழுக்கு

படங்கள் உதவி: சுரேஷ்

காக்கிச் சட்டை கொடுமை!

‘மாமூல்’ ஜோக்ஸ், தொப்பைக் கிண்டல்கள், திருட்டு தோஸ்துகள், ‘பழைய தமிழ் சினிமாவின் கடைசிக் காட்சி விசிட்டர்’ போய, டிபார்ட்மெண்டுக்குள்ளே இருந்தே தாதாக்களுடனான சகவாசம் - இப்படி ‘உங்கள் நண்பன்’ போலீஸின் இமேஜ், தேய்ந்து கட்டெறும்பாகி, “நான்தான் புது எஸ்.பி.” என்றால், “என்னா அதுக்கு இப்போ?” என்று வில்லன் பல்குத்திக் கொண்டே கேட்கிற லெவலுக்கு வந்துவிட்டது. பயம் கூட வேண்டாம், ஒரு மரியாதையாவது வேண்டாமா?

இப்போது அந்த இமேஜை இன்னும் கேவலமாக்கி, காவல் துறையின் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை கேள்விக்குறியாக்கி இருக்கிறது ஜெயலக்ஷ்மி விவகார வலை. இந்த வலையில் சிக்கியவர்கள் இதுவரை அதிகாரபூர்வமாக முப்பது பேர் என்கிறார்கள். சாதாரண கான்ஸ்டபிளிலிருந்து ஆரம்பித்து, உயர் அதிகாரிகள் வரை இந்த மாய வலையில் சிக்கியிருப்பதாகத் தெரிகிறது. ஓர் அதிகாரி தற்கொலைக்கு முயன்றதாகவும், இன்னொருவர் குற்றச்சாட்டுகள் பொய் என்று சவால் விட்டதாகவும், அமைச்சர்களின் உதவியாளர் மூவர் பணி நீக்கம் என்றும், தினமும் அவலத் தகவல்களின் அணிவகுப்பு.



• ஜெயலக்ஷ்மி


முன்னெப்போதும் இல்லாத அளவு, இப்படி கொத்துக் கொத்தாக காவல் துறையினர் பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருப்பது எதைக் காட்டுகிறது? தமிழக காவல்துறையின் மனசாட்சியை உலுக்கும் இந்தக் கேள்விக்கான பதிலை, முன்னாள் சி.பி.ஐ. இயக்குனர் டி.ஆர். கார்த்திகேயனிடம் கேட்டோம்.

“குற்றம் சாட்டும் ஜெயலட்சுமியின் பழைய வாழ்க்கை தவறானதாக இருக்கலாம். ஆனால் அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், குற்றம் சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு அவரோடு தொடர்பு

இருந்தது என பூர்வாங்க விசாரணையில் தெரியவந்தால், உடனே அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல ஜெயலக்ஷ்மியின் குற்றச் சாட்டுகளுக்கு, போதிய ஆதாரம் இருக்கிறதா என்பதையும், காவல்துறை உறுதி செய்து கொள்ள வேண்டும். இதற்கு விசாரணை என்பது பாரபட்சம் இல்லாத ஒன்றாக இருந்தால்தான், காவல் துறை மீது பொது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த முடியும். பொது மக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான், காவல் துறையே செயலாற்ற முடியும்.

"குற்றச்சாட்டுகள் ஓரளவு உண்மையாக இருக்கும் பட்சத்தில், நமது காவல் துறைக்கு என்ன நடந்தது என கவலைப் பட வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம்; இவர்களின் கையில் இருக்கும் சட்டம் - ஒழுங்கையும், குற்ற விசாரணையையும் நம்ப முடியுமா என்று, கட்டாயம் கவலைப்பட்டே தீரவேண்டும். சுதந்திரம் அடைந்து ஐம்பத்தேழு ஆண்டுகள் ஆகிவிட்டன. பல துறைகளில் அபரிமிதமாக முன்னேறியிருக்கிறோம்; பல துறைகளில் பாதாளத்தில் விழுந்து கிடக்கிறோம். இன்னும் வறுமையை ஒழிக்க முடியவில்லை. வெறுமனே பழம் பெருமைகளைப் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. மரபுகள், நெறிமுறைகள், விழுமியங்களை குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கிறோம். அரசியல் அமைப்புச் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட பொது நிறுவனங்கள், மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையைச் செய்யத் தவறினால், மக்களே சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்வார்கள். நீதிமன்ற அறையிலேயே, ஒரு ரவுடியை நான்கு பெண்கள் அடித்துக் கொன்றிருக்கிறார்கள். நாட்டின் எந்தப் பகுதியிலும் இந்தச் சம்பவம் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தவில்லை. என்ன காரணம், அந்த நான்கு பெண்களும் செய்தது நியாயமான கொலை என்று மக்கள் நினைக்கிறார்கள்.

"இந்தப் போக்கு, ஆரோக்கியமானதல்ல. காவல் துறைமட்டுல்ல, எல்லா நிர்வாகத் துறையில் இருப்பவர்களும், தங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்பட்டால்தான், மக்களிடம் நம்பிக்கையைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். அதே போல அரசுத் துறைகளில் ஹைய ரார்க்கி என்பதற்கு மரியாதையே இல்லாமல் போய்விட்டது. அதிகாரத்தில் இருப்பவர்கள் எதுவேண்டுமானாலும் செய்துவிட்டு தப்பித்துவிடலாம் என்ற நிலை உருவாகி வருவதை அடியோடு ஒழிக்க வேண்டும். தவறு செய்பவர்கள் உடனடியாக தண்டிக்கப்படுவதில்லை என்பது, நமது சமூகத்தின் சாபக்கேடு. இதற்கும் சாவுமணி அடிக்க வேண்டும். லாபியிங் செய்தால் பதவி, பணம் கொடுத்தால் பதவி என்ற நிலையும் அரசுத் துறைகளில் அடியோடு களையப்பட வேண்டும். இவையெல்லாவற்றையும் விட, மக்களிடம் போதிய விழிப்புணர்வு வரவில்லை. அதிகாரமோ பணமோ வந்துவிட்டால், மக்கள் அதை வணங்குகிறார்கள். அதிகாரத்துக்கு வந்திருப்பவர்கள் நல்லவழியில் வந்திருக்கிறார்களா? பணம் சம்பாதித்திருப்பவர்கள் அதை நேர்வழியில் சம்பாதித்திருக்கிறார்களா என்று பார்த்து, அவர்களை அங்கீகரிக்க வேண்டிய கடமையும், விழிப்புணர்வும் மக்களுக்குத் தேவை. கண்ணை மூடிக் கொண்டு நமக்கென்ன, என்று போவது நாட்டை நல்ல பாதைக்கு ஒரு போதும் அழைத்துச் செல்ல முடியாது.



• கார்த்திகேயன்

"ஜெயலட்சுமி விவகாரத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றுகிறவர்களே இப்படிச் செய்திருந்தால், அவர்களைக் காப்பாற்றக் கூடாது."

- ஜெய்

அரவிந்த அமுதம் - 22

உலகம் வியந்த இலக்கியவாதி...

ஆண்டு 1914. ஸ்ரீ அரவிந்தரின் பிறந்த தினமான ஆகஸ்ட் 15ம் நாள். அன்று மலர்ந்த காகித மலர்தான் 'ஆர்யா' என்ற பத்திரிகை. மிர்ரா - ரிச்சர்ட் தம்பதியரின் வேண்டுகோளின் பேரில், அந்தப் பத்திரிகைக்கு ஆசிரியப் பொறுப் பேற்றார் ஸ்ரீஅரவிந்தர். ஆன்மிக உலகிலும் பத்திரிகைத் துறையிலும் அது ஈடிணையற்ற தன் தனித்துவத்தைப் பளிச்சென நிரூபித்தது. பரபரப்பான அரசியல் செய்திகள் எதுவும் இடையாது. ஆன்ம விசாரணைகள்தான் அதில் தொடர்ந்து எழுதப் பட்டன.

அரவிந்தருக்குத் தட்டச்சு தெரியும். தம் படைப்புகளைத் தாமே தட்டச்சு செய்து அச்சுக்கு அனுப்புவார். பிழை திருத்தும் பணியையும் தாமே மேற்கொண்டார். எந்த



'என் சொந்தப் பெருமைக்காக நான் அதிமனத்தைப் புவிக்குக் கொண்டுவர விரும்பவில்லை. மனிதர்கள் அச்செயலுக்குக் கொடுக்கும் பெருமை பற்றியோ, சிறுமை பற்றியோ எனக்கு அக்கறை இல்லை. அக உண்மை, ஒளி, இசைவு, சாந்தி ஆகியவை கொண்ட ஓர் உன்னத தவத்தைப் புவி உணர்வினுக்குள் கொண்டுவர அயராது முயன்று வருகிறேன். அதிமனம் மேலே இருப்பதைப் பார்க்கிறேன். அந்த மனம் எப்படிப்பட்டது என்பது எனக்குத் தெரியும். மேலிருந்து எல்லா நேரத்திலும் அது என் உணர்வின் மீது ஒளிவீசிக் கொண்டிருப்பதை உணர்கிறேன். இந்தப் பேருண்மை பூமியில் இறங்க வேண்டும். இங்கு தெய்வ உணர்வு மலர்வதே பரிணாமத்தின் கடைசி நோக்கம். மனித குலம் முழுவதும் என்னை ஏளனம் செய்தாலும் செய்யட்டும். என்னுடைய இந்தத் தகாத துணிச்சலுக்காக, எல்லாவித நரகமும் என் தலையில் விழுந்தாலும் விழட்டும். அதிமனத்தைக் கீழே புவியில் இறக்கும் செயலில் வெற்றி கொள்ளும் வரை, அல்லது நான் அழிந்துவிடும் வரை இந்தச் செயலில் நான் மேற்செல்வேன்.'


- ஸ்ரீ அரவிந்தர்

வேலையைச் செய்யவும் அவர் என்றும் தயங்கியதில்லை. மகாத்மாவின் ஹரிஜன், பாரதியாரின் இந்தியா, ஏ.கே. செட்டியாரின் குமரிமலர் என, இவை போன்ற இன்னும் சில இதழ்கள் ஆன்மிகத்திற்

திருப்பூர் கிருஷ்ணன்

கும், தேசியத்திற்கும் ஒரு சேரத் தொண்டு செய்து வரலாற்றில் நிலைத்தன. அந்த வரிசையில், ஆன்மிகத்திற்கு மாபெருந்தொண்டு செய்த உன்னதப் பத்திரிகை என்ற உலகளாவிய பெருமையை ஆர்யா பெறுகிறது. ஆர்யாவில் ஸ்ரீ அரவிந்தர் எழுதிய அற்புதமான தொடர் கட்டுரைகளெல்லாம் பின் தொகுக்கப்பட்டுப் புத்தகமாக மாறின. ஆங்கில மாத இதழான ஆர்யா 1921, ஜனவரி வரை வெளிவந்தது.

உலகில் எத்



தனையோ மகான்கள் தோன்றியிருக்கிறார்கள். தம் மறைவுக்குப் பிறகும் கூட தமது சிந்தனைகளால் அவர்கள் அருளாட்சி நடத்துகிறார்கள். ராமகிருஷ்ண பரமஹம்சர் எதையும் எழுதவில்லை. ஆனால் இலக்கியத் தன்மை வாய்ந்த குட்டிக் கதைகளை அடியவர்களுக்குச் சொல்லியிருக்கிறார். அவை அவரது சீடரான மகேந்திரர் போன்றோரால் எழுத்தில் பக்தியுடன் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பரமஹம்சரின் குட்டிக் கதைகள், ஆன்மிகக் கடலில் தாமே உதித்த முத்துகள்.

ஸ்ரீ ரமணர் அட்சர மணிமாலை போன்ற சில முக்கியமான சிறு நூல்களைப் படைத்தார். என்றாலும், அடியவர்களிடம் கருத்தைத் தெரிவிக்கத் தம் ஆற்றல் மிகுந்த பார்வையையே பயன்படுத்தினார். தொடர்ந்து எழுதுவதில் நாட்டம் காட்டவில்லை. சேஷாத்ரி பரப்பிரும்மம் போன்ற மெய்ஞ்ஞானிகள் எழுத்துப் பணியில் ஈடுபடவில்லை. பரமாச்சாரியார் எழுத்துப் பணியில் ஈடுபட்டவர் அல்லவென்றாலும் அவரது அருளுரைகளைத் தொகுக்க ஒரு ரா. கணபதி கிடைத்த காரணத்தால், அன்பர்கள் அந்த தெய்வத்தின் குரலைப் புத்தகத்தில் கேட்கும் பாக்கியம் பெற முடிந்தது.

மகான்களில் எழுத்தாளர்களாகவும் அமைந்தவர்கள் சிலரே. ஆதிசங்கரர், சதாசிவப் பிரம்மேந்திரர், வள்ளலார் போன்ற இலக்கியத் தேர்ச்சி நிறைந்த உன்னத எழுத்தாளர்கள் வரிசையில், அண்மைக் காலத்தில் தோன்றிய பெருமை ஸ்ரீ அரவிந்தருடையது. விவேகானந்தர் கட்டுரையாளர். ஸ்ரீ அரவிந்தர் படைப்பிலக்கியவாதியும் கூட. அரவிந்தர் உலகப் பொதுமொழியான ஆங்கிலத்தில் எழுதியதால், எல்லா நாடுகளிலும் அவரது எழுத்துகளின் உன்னதம் வியப்போடு பயிலப்படுகிறது. மொழியில் அடங்க மறுக்கும் நுண்ணுணர்வுகளைக் கூட, மொழிக்கட்டுக்குள் கொண்டு வரும் சொல்லாற்றல் அவரது தனித் தேர்ச்சி.

உளவியல் விஞ்ஞானத்தைப் பின்னணியாகக் கொண்டு, யோக சாதனைகளின் அடிப்படையில் ஆன்மிகத்தை

அருள்வாக்கு

காருண்யம் - கருணை காட்டுவது - என்றால் இப்படிக் கருணை காட்டுகிறவர் ஒரு படி உயர நிற்கிற மாதிரியும், கருணைக்குப் பாத்திரமாகிறவர் ஒரு படி கீழே நிற்கிற மாதிரியும் தொக்கி நிற்கிறது. "நாம உசந்த ஸ்தானத்தில் இருக்கிறோம். நம் உதவியைப் பெறுகிறவர் நம்மை விடத் தாழ்த்தியாக இருக்கிறார், நாம் 'கருணை' காட்டுகிறோம்" என்று நினைக்கிறபோதே நாம் செய்கிற உபகாரம் அசுத்தமாகி விடுகிறது. உபகாரம் செய்வதன் பயனாக

அணுகுபவர்களுக்கு அரவிந்தரின் எழுத்துகள், வழிகாட்டும் கையேடுகள். அவரது நூல் ஒவ்வொன்றும் மனித மனத்தின் ஆழங்காண இயலாத இருண்ட பகுதிகளைத் துப்புரவாக்கி ஒளியேற்றும் ஞான தீபங்கள். பாரதி, தாகூர் போன்றோரெல்லாம் கொண்டாடிய அவரது எழுத்தாற்றலின் மேதைமை காரணமாக, அவர் படைப்புகள் வெளிவந்த காலத்திலேயே உலகெங்கும் தாக்கத்தை ஏற்படுத்தின. 1930 முதல் ஆசிரமத்து அடியவர்களின் வினாக்களுக்கு பதில் எழுதலானார் ஸ்ரீ அரவிந்தர். 1700 பக்கங்களுக்கு மேல் அவர் சந்தேகங்களுக்கு விடை அளித்துள்ளார். சமயம், அறிவியல், கலை, உளமனச் சக்தி, தத்துவம் என, அவரது அறிவாற்றலால் ஒளியூட்டப்பட்ட துறைகள் பலப்பல.

உலகின் பெரும் காப்பியங்கள் வரிசையில் அவரது சாவித்திரியும் இணைகிறது. மகாபாரதத்தில் எழுநூறு வரிகளில் இடம் பெறும் கிளைக் கதையான சாவித்திரி சரிதத்தையே, ஆழ்ந்த அறிவுத் திறனால் புதிய பரிமாணத்தில், இருபத்து நாலாயிரம் வரிகளில் பிரகாசப்படுத்திக் காட்டுகிறார் அரவிந்தர். அவர் பரோடாவில் இருந்தபோது இளமைக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சாவித்திரி எழுத்துப் பணி, புதுவையில் அவர் மகா சமாதி அடைவதற்குக் கொஞ்ச காலம் முன்தான் முடிக்கப்பட்டது. ஐம்பதாண்டு நிகழ்த்திய நெடும் எழுத்துத் தவத்தின்



நமக்கு எளிமை, அடக்கம், அஹங்கார நீக்கம் ஆகியன உண்டாக வேண்டும். மாறாக, நாம் உபகாரம் பண்ணும்போது போனால் போகிறது என்று யாருக்கோ கருணை காட்டுகிற மாதிரி நினைத்தோமானால், இது ஆணவ அஹங்காரங்களுக்கு இடமாகி விடுகிறது. உபகாரத்தால் நம் ஆத்மாவை உயர்த்திக் கொள்வதற்கு நேர்மாறாக, ஆத்ம ஹானியே உண்டாகிவிடும்.

கருணை, காருண்யம் என்கிற வார்த்தையைச் சொல்வதைவிட, அன்பு என்று சொல்லிவிட்டால் இந்த ஏற்றத் தாழ்வு தொனிக்காமல் இருக்கும். அன்பு என்பது நம்மவர்களிடமே நாம் ஸ்வபாவமாகச் செய்கிற காரியம். இதிலே போனால் போகிறதென்று யாரோ அந்நியருக்கு இரக்கம் காட்டுகிற மாதிரியான அஹங்கார எண்ணம் இல்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்


பயன் அது.

மகாபாரதத்தில் சாவித்திரியின் சொல்லாற்றலுக்கு வசப்பட்டு, அவளுக்குச் சில வரங்கள் வழங்கிய எமன், சத்தியவான் உயிரையும் திரும்ப அளிக்கிறான். அரவிந்தர் காப்பியத்தில், சாவித்திரி மானிட குலம் முழுமைக்கும் பிரதிநிதியாக வருகிறாள். உலக சமுதாயம் அமரத்துவம் அடைவதற்காக எமனுடன் போராடுகிறாள். சத்தியவான் என்னும் மானிட ஆன்மாவை மரணத்திலிருந்து மீட்கிறாள். அரவிந்தர் காப்பியத்தில் வரும் எமன், தர்மராஜனல்ல. எமன் என்ற பெயரையே அவர் பயன்படுத்தவில்லை. அறியாமை, ஆணவம் போன்ற தீமைகளின் உருவகமாக அவன் உணர்த்தப்படுகிறான். சாவித்திரியின் போராட்டம் தீய சக்திகளுடன் தான். தன் அறிவாலும், தவத்தாலும் தீய சக்தியை அழிக்கிறாள் அவள். காலன் இருளில் கலந்து மறைகிறான். அரவிந்தர் சாவித்திரி கதைக்குக் கொடுக்கும் தத்துவக் கண்ணோட்டத்தால், கதை பிரம்மாண்டமான உள்ளுலகப் பரிமாணம் பெறுகிறது. அர்த்தத்தால் மட்டுமல்லாமல், மந்திர சக்தி நிறைந்த ஒலியாலும் அக்காப்பியம் பயில்பவர்களுக்குப் பல பரவச அனுபவங்களை ஏற்படுத்துகிறது. புரிந்து கொள்ளக் கடினமான தத்துவ நூலான சாவித்திரியின் பெரிய பெருமை, அது ஒவ்வொரு முறை படிக்கும்போதும், இன்னும் இன்னும் ஆழமாகப் புதிய புதிய பொருளைத் தருவதுதான். சாவித்திரியைத் தவிர, காளிதாசனின் விக்கிரமோர்வசியம் போன்ற நூல்களையும் அரவிந்தர் ஆங்கிலத்தில் எழுதினார். 'இந்தியப் பண்பாட்டின் அடிப்படைகள், வேதத்தைப் பற்றி' போன்ற அவரது நூல்களும் பரவலாகப் பேசப்பட்டன. யோக சாதனையில் ஏற்பட்ட பேரனுபவங்களைக் கொண்டு அவர் எழுதிய தெய்விக வாழ்க்கை என்ற நூல் பிரமிப்புடன் பயிலப்பட்டது.

பாரதி, திலகர், காந்தி, வினோபா போல், ஸ்ரீ அரவிந்தரும் கீதைக்கு உரை எழுதியிருக்கிறார். அர்ச்சுனன் மட்டுமா நேரில் கீதை கேட்டான்.! ஆனால் அரவிந்தரும் நேரடியாகவே கிருஷ்ணரிடம் கீதோபதேசம் பெற்றவர்தானே! அர்ச்சுனனுக்குக் கீதை சொன்ன தலம் போர்க்களம். அரவிந்தருக்குக் கதை சொன்ன தலம் சிறைக்களம். அர்ச்சுனன் பங்கு பெற்றது பாரதப் போர். அரவிந்தர் பங்கு பெற்றது சுதந்திரப் போர். தேரில் நிஜக் குதிரையை நிறுத்திய பின் சொன்னது அர்ச்சுன கீதை. சிறையில் மனக் குதிரையை நிறுத்தச் சொல்லிச் சொன்னது அரவிந்த கீதை. கீதோபதேசத்திற்குப் பின் அர்ச்சுனனுக்குக் கிடைத்தது கிருஷ்ணரின் விஸ்வரூபக் காட்சி. அரவிந்தருக்குக் கிடைத்ததோ, விஸ்வமெல்லாம் கிருஷ்ணரே என்ற காட்சி. புதிய வெளிச்சங்களை கீதைமேல் பாய்ச்சி, பயில்பவர் மனத்தை அமைதியில் ஆழ்த்துகிறது ஸ்ரீ அரவிந்த கீதை.

(அமுதம் பெருகும்)

அறிக்கை ஹீரோ!



"அப்பா பிரகாஷ்ராஜ். அம்மா நதியா. இருவருமே நடிப்பில் கோட்டை கட்டியவர்கள். இருவருக்கும் இடையில் மகனாக நடிப்பதென்றால் சும்மாவா?" என்று கேட்கிறார் எம். குமரன் சன் ஆஃப் மஹாலட்சுமி படத்தின் நாயகன் ஜெயம் ரவி. தனுஷ், சிம்பு உள்ளிட்ட இளம் ஹீரோக்களின் ஓட்டப்பந்தயத்திலிருந்து ரவி மட்டும் விலகியிருக்கும் மர்மம்தான் என்ன?

"ஹாலிவுட்டில் அல்பாச்சினோவுக்கோ, தமிழ் நாட்டில் நடிகர் திலகம் சிவாஜிக்கோ யாராவது போட்டியாக இருந்திருக்கிறார்களா? நான் கூட அப்படித்தான்" என்று அதிரடி அறிக்கை தந்து திக்குமுக்காட வைக்கிறார் இந்த சினிமாக் குடும்பத்து ஹீரோ. அல்பாச்சினோ, சிவாஜி ரசிகர்கள் ரவியை மன்னிக்கட்டும்! ஆமென்!

- ஸ்ரீ

கல்கி வழங்கும்
சென்னை ஸ்கேன்
கல்கி துள்ளலில் ஒரு மின்னல்!
[சென்னை பதிப்புக்கு மட்டும்]

8 பக்கங்கள்
5, செப்டெம்பர் 2004 இதழுடன் இலவச இணைப்பு

ஷோ கேஸ்



38 முத்தக்காட்சிகள் கொண்ட படம்!

'அட, இப்படியெல்லாம் நடக்குமா?' என வியக்க வைக்கும் பல சுவையான அந்தக் கால சினிமா சம்பவங்களை ராண்டார் கை 'சென்னையும் சினிமாவும்' என்ற தலைப்பில் 'மெட்ராஸ் டே' நிகழ்ச்சியில் நினைவூட்டினார். உங்களுக்காக சில துளிகள்.

● முதன் முதலில் சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து மாலையெல்லாம் போட்டு, தடபுடலாக அலங்கரிக்கப்பட்டிருந்த படப்பெட்டியை ஊர்வலமாக எடுத்து வந்தது ஒரு படக்குழு. சுற்றிலும் ஒரே கூட்டம். ஒரே இரைச்சல். இவற்றைக் கவனித்த சென்னைவாசிகள், இதை 'சவ ஊர்வலம்' என்று நினைத்து ஒதுங்கிக் கொண்டார்களாம்.

● தான் ஷூட் செய்த படத்தை சென்னை வெயிலில் பிரிண்ட் போட முடியாது என்று கருதிய ஒரு தயாரிப்பாளர், பிலிம் சுருளைப் பத்திரமாக பெங்களூருக்குக் கொண்டு போய் பிரிண்ட் செய்து சென்னைக்குத் திரும்பி வந்து ரிலீஸ் செய்தாராம்.

● முன்பெல்லாம் படத்தில் நடிப்பதற்கு ஆட்கள் கிடைக்க மாட்டார்கள். குறிப்பாக, ஹீரோயின் கிடைப்பது குதிரைக் கொம்பு. 'ஆளை விடுங்க சாமி' என்று எல்லோரும் ஓட்டம் எடுத்து விடுவார்களாம். சிறிது படித்தவர்கள் சினிமா பக்கமே எட்டிப் பார்க்க மாட்டார்களாம்.

● ஒரு படத்தில் திரௌபதி வேடத்தில் நடிக்க யாரும் முன் வராததால், 'டொ... ட்' எனும் ஆங்கிலேயப் பெண்ணை நடிக்க வைத்திருக்கிறார்கள். காமிரா ஓடிக் கொண்டிருக்கிறது. துச்சாதனன் சீரியசாக துகில் உரித்து கொண்டிருக்கிறார். இதனை கவனிக்காத அம்மையார், பெட்ரோல் பெறுவது கஷ்டமானதைப் பற்றி அருகில் இருப்பவரிடம் காஷுவலாக சாட் செய்து கொண்டிருந்தாராம். தன்னைக் காப்பீர்வோர் காப்பீர்வோர் என்று எண்ணி, கிருஷ்ண பரமாத்மா பாவமாக காத்துக் கொண்டிருந்தது தனி ட்ராக்.

● நாரதர் வானத்தில் பறப்பதுபோல் ஒரு ட்ரிக் ஷாட். எப்படி? யோசித்து பார்த்த சினிமாக் குழு, நாரதரை மேகங்கள் வரையப்பட்ட மாடிப்படிகள் வழியே மேலே ஏறச் சொல்லியிருக்கிறார்கள். சிறிது நேரத்தில் நாரதரைக் காணவில்லை. ஒருவேளை வைகுந்தம்தான் போய் விட்டாரோ என்று நினைத்துக் கொண்டிருக்கையில், மறுபுறம் கீழே விழுந்து கிடந்த நாரதரின் புலம்பலைக் கேட்டு எல்லோரும் ஓடி வந்து காப்பாற்றியிருக்கிறார்கள்.

● பேசும் படங்கள் வந்த புதிதில், படம் பார்ப்பதற்கு பலர் பயந்திருக்கிறார்கள். பின்னாலிருந்து கொண்டு யாரோ பேசுகிறார்கள் என்பது அவர்களின் திடமான எண்ணம்.


● புரசைவாக்கம், தண்டையார்பேட்டை, கூவம் ஆறு இவையெல்லாம் முன்பு ஸ்டுடியோக்கள் இருந்த இடமாம்! புராணப்படங்கள் எடுத்தால், சாமி கண்ணை குத்திவிடும் என்று பலர் எச்சரித்ததை அலட்சியம் செய்த ஒரு டைரக்டர், துணிச்சலாக ஒரு புராணப் படத்தை எடுத்துவிட்டார். பிரிண்டை டெவலப் செய்து பார்த்தபொழுது அதிர்ச்சி. எந்தக் கதாபாத்திரத்திற்கும் தலையில்லை. 'நான்தான் அப்பவே சொன்னேனே' என்று எல்லோரும் புலம்ப ஆரம்பிக்க, மனம் தளராத அந்த டைரக்டர், காமிராவை அக்கு அக்காக ஆராய்ந்து விட்டு, தவறு அதன் மீதுதான் என்று கண்டுபிடித்து, மறுபடியும் ரீஷூட் செய்தாராம். படம் சூப்பர் டூப்பர் ஹிட்.

● 38 முத்தக்காட்சிகள் கொண்ட படம் என்றெல்லாம் குறும்பாக மார்க்கெட்டிங் செய்திருக்கிறார்கள். கவனமாக எண்ணிப் பார்த்த பலர், 'இல்லையே 37தானே இருக்கு' என்று மறுபடியும் மறுபடியும் ஜொள் விட்டுக் கொண்டு பார்த்தார்களாம்.

● பிரிட்டிஷார் ஆண்டு வந்த சமயத்தில் சென்ஸார் போர்டின் முக்கியக் கண்டிஷன் என்ன தெரியுமா? திரைப்படத்தில் இந்திய விடுதலையை ஊக்குவித்து எந்தக் காட்சிகளும் இருக்கக்கூடாது என்பதுதான். மற்றபடி, யார் எப்படி நடிக்கிறார்கள், என்ன பேசுகிறார்கள், என்ன காஸ்ட்யூம் அணிகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் அநாவசியமாக அவர்கள் கவலைப்பட மாட்டார்களாம். (அப்ப எஸ்.ஜே. சூர்யா இல்லாமப் போயிட்டாரே!

மருதன்

பொலிட்டீரா



சென்ற வாரம் சென்னையில நடந்த 'கஜேந்திரா'வோட பார்ட்டி ஃபங்ஷன் முடிஞ்சதும், அவரோட ரசிகர்கள்.. (இப்போ 'அன்புத் தம்பிகள்') ரொம்ப உற்சாகமா ஊருக்குப் புறப்பட்டாங்களாம். காரணம் என்னன்னா, தமிழகத்தோட முக்கிய திராவிடக் கட்சியோட நெருங்கிச் செயல்பட 'தம்பிகளுக்கு' பச்சை சிக்னல் தரப்பட்டிருப்பதுதான் என்கிறது சாலிகிராம வட்டாரம்.

'**இ**டையிலே தட்டிவிட்டு காரியம் சாதிக்கும் பேர்வழிகளிடம் ஸ்டாலின் எச்சரிக்கையாக இருப்பார் - இருக்கிறார்' என்ற கலைஞரின் சமீபத்திய கருத்துக்கு என்ன அர்த்தம்? - அந்தப் பேர்வழிகள் யார்? என்பதுதான் தற்போதைய டாக் ஆஃப் தி அறிவாலயமாக இருக்கிறதாம்.

ஜே.எம்.கே. என்ற புதுக்கட்சியைத் துவக்கியுள்ள ஜெகத்ரட்சகன், திடீரென ஆர்.எம்.வீ. படத்தைப் பெரியதாகப் போட்டு, போஸ்டர் அடித்து சென்னை முழுவதும் ஒட்டியுள்ளாராம். பா.ம.கவின் அதிரடி மாற்றங்கள்தான் ஜெகத்ரட்சகனை ஆர்.எம்.வீ மூலம் காய் நகர்த்த இவ்வாறு தூண்டியிருப்பதாக பேச்சு அடிபடுகிறதாம்.

('பா.ம.க-விடுதலைச் சிறுத்தைகள்' போல 'ஜே.எம்.கே- புதிய தமிழகம்' வரப்போவுதோ?!)



வடசென்னையில் நடைபெற்ற விழாவொன்றில் "கலைஞர் வாழ்க! கலைஞர் வாழ்க! புரட்சிக் கலைஞர் வாழ்க!" என்ற வாழ்த்துக் கோஷங்களும், தமிழ் செம்மொழிக்கு புதிதாகக் கரம் கோர்த்த இரு கட்சிகள் சொந்தம் கொண்டாடுவதும், 'நடைப்பயண நாயகன்' அதிக அளவில் பத்திரிகைகளில் இடம் பிடிப்பதும் 'ஒரு' தரப்பினரை தீவிர யோசனைக்குள் தள்ளியுள்ளதாம்.

✍ கலை

எழுத்தாணி

கோணல் பக்கங்கள் - ஒரு நேர்ப் பார்வை



கோணல் பக்கங்கள் மூலம் இணைய தளத்திற்கு இலக்கியத்தை கைப்பிடித்து அழைத்து வந்தவர் சாரு நிவேதிதா.

அருவெறுக்கத்தக்க விஷயங்களை இவர் எழுதுகிறார் என்று இவரை ஒதுக்கியிருக்கிறது இலக்கிய உலகம். பதிலுக்கு, இலக்கிய வட்டத்தை ஒதுக்கி வைத்திருக்கிறார் சாரு நிவேதிதா.

'மற்றவர்கள் விலக்குவதை நான் எழுதுகிறேன்' என்று அறிவிக்கிறார் சாரு நிவேதிதா. மிக்க மகிழ்ச்சி. ஆனால் மற்றவர்கள் விலக்கிய சங்கதிகள் எவ்வளவோ இருக்கின்றனவே. தலித் முரசு, புதிய ஜனநாயகம் போன்ற பத்திரிகைகளைப் பார்த்தால் மற்றவர்களால் கண்டுகொள்ளாமல் விலக்கப்பட்ட பல அவலங்கள் காணக் கிடைக்கின்றன. புரட்டும் பொழுது கைகளில் தீப்பற்றிக் கொண்டது போன்றதொரு உணர்வு ஏற்படுகிறது.

அ.மார்க்ஸ், இராஜேந்திர சோழன், மருதையன் போன்ற பலரது எழுத்துகள் பூட்டுகள் போட்டு மூடிக் கிடக்கும் கண்களைக் கூட திறந்து விடத் துடிக்கின்றன. இத்தகைய உணர்வு, சாரு நிவேதிதாவின் எழுத்துகளில் காணக்கிடைப்பதில்லை. நமது சமூகத்தைப் பாதித்து வரும் முக்கியப் பிரச்னைகளுக்கு முன்னுரிமை அளிக்காமல், பாலியல் தொடர்பான சங்கதிகளையே தேவைக்கு அதிகமாக பெரிதுபடுத்தி எழுதி வருகிறார் சாரு நிவேதிதா. அவரது கோணல் பக்கங்களின் முக்கியக் குறை இது. இவர் சொல்லும் புதுப் புது சங்கதிகள் ஒருவரை ஆச்சரியப் பட வைக்கலாம். அதிர்ச்சியடைய வைக்கலாம். அசரவும் வைக்கலாம். ஆனால் எழுச்சியூட்டத் தவறிவிடுகிறது.

லத்தின் அமெரிக்க இலக்கியங்களால் அதிகம் கவரப்பட்டவர் சாரு நிவேதிதா. இந்நாடுகளில் இலக்கியமும் தினசரி வாழ்க்கை முறையும் கைகோர்த்து தான் நடந்து செல்லும். சமூகத்தின் அடிப்படைப் பிரச்னைகளை முன் வைத்து எழுதப்படும் படைப்புகளே அங்கு அதிகம். இன்னும் சொல்லப் போனால், எழுத்தாளர்கள் பலர் போராளிகளாகவும் அங்கே இருந்திருக்கிறார்கள். அவர்களது எழுத்துக்களும் தணிக்கை செய்யப்படுகின்றன சாரு நிவேதிதாவினுடையதைப் போலவே. ஆனால் காரணங்கள்தான் வெவ்வேறு.

இணையதளம் என்பது மிக உயரத்தில் அமைக்கப்பட்ட ஒரு பிரம்மாண்ட மேடையைப் போன்றது. அங்கிருந்து பேசுபவர்களால் மொத்த உலகத்தின் பார்வையையும் கவர்ந்திழுக்க முடியும்.

அத்தகையதொரு மேடையில்தான் சாரு நிவேதிதாவும் அமர்ந்திருக்கிறார். மக்களின் கவனத்தையும் கவர்ந்து வருகிறார். ஆனால் அவர் ஏற்படுத்தி வரும், அல்லது ஏற்படுத்த முயலும் மாற்றங்கள் எவையெவை? சாரு நிவேதிதா தான் இதற்கு பதிலளிக்க வேண்டும்.

✍ மருதன்

மூன்றாவது கண் எங்கே?



12 - 14 வயதுதான் இருக்கும். கழுத்தெல்லாம் மணிமாலை. நெற்றி நிறைய விபூதி, குங்குமம், சந்தனம், காவித்துண்டு. சட்டை கூட வந்த ஆசாமி தெரு முனையிலேயே ஒதுங்க, அந்தப் பையன் தெருவுக்குள் வருகிறான்.

"பீரோ புல்லிங்" ராஜாங்க ஏரியாக்களான மடிப்பாக்கம், நங்கநல்லூர். வீட்டுப் பெண்களைத் தவிர வேறு யாருமில்லாத காலை 10 மணி.

அந்தப் பையன் நுழைந்த ஃப்ளாட்டின் முதல் வீடு. "அம்மா, கைரேகை பாத்து சொல்றேம்மா. அஞ்சு ரூவாதாம்மா. எனக்கு ஒரு வேளை சாப்பாடும்மா" கெஞ்சலாகக் கேட்கிறான்.

பிச்சை எடுக்காமல் ஏதோ ரேகை பார்க்கிறதா சொல்லி கேட்கிறானே என்று உள்ளே விட, பையன் அங்கே அன்றைக்கு ஆபீசுக்கு லேட்டாகக் கிளம்பிக் கொண்டிருக்கும் பெண்ணையும், அவள் கழுத்தையும் பார்த்துவிட்டு, "அம்மா, இந்த வீட்டுல கல்யாணம் தள்ளிப் போயிட்டிருக்கு. உங்க ரேகை, இந்த வீட்டு வாஸ்துக்கு ரெண்டு கண்டம் வந்து, அம்மன் காப்பாத்தினதைச் சொல்லுது. இந்த வீட்டு தெய்வங்கள் உள்ளே நுழைய விடாம இங்க முன்னாடி இருந்தவங்க புதைச்ச தகடு ரெண்டு தடுக்குது. பாருங்க, உங்க கண்ணெதிரில் ஒண்ணை எடுக்கிறேன்."

ஒரு தம்ளர் தண்ணீரும் குங்குமமும் கொண்டு வரச் சொல்லி, தண்ணீரில் குங்குமம் கரைத்து, "நீங்களே உள்ளார பாருங்க" என்கிறான். உள்ளே ஒரு தகடு கிடக்கிறது. "பாருங்க ஒண்ணை எடுத்திட்டேன். இதுக்கு 300 ரூபா ஆச்சி. இன்னொண்ணை எடுக்க 1200தான் ஆகும். எடுக்கலைன்னா செய்வினை உங்களுக்கு ரொம்ப கெடுதல் பண்ணிடும்" என அவன் வாதாட, கடைசியில் நூறு ரூபாயுடன் வீட்டை நோட்டம் பார்த்துக் கொண்டு கிளம்பி, தெருக்கோடி ஆசாமியுடன் சேர்ந்து கொள்கிறான்.

நோட்டம் பார்க்க வந்தவனா? பீரோ புல்லிங் பார்ட்டி ஆளா? வெளியில் காத்திருந்தவன் யார்? இல்லை சாதாரண ஏமாற்றுப் பையனா? - தெரியவில்லை.

வீட்டில் தனியாக இருக்கும் பெண்மணிகளே, இப்படி யாரும் வந்தால் உள்ளே விடாமல் போலீசுக்குத் தெரிவியுங்கள்.

காவல் துறையே, உங்களுடைய மூன்றாவது சந்தேகக் கண்ணில் பட்டப் பகலில் நடமாடும் இந்த மாதிரி ஆட்கள் படவே மாட்டார்களா?

✍ ரவி

சைபர் கஃபே சங்கதிகள்

- ஒரு ப்ரௌஸிங் பார்வை

சென்னையில் அதிகமாக இருப்பவை இரண்டு. ஒன்று கொசு. மற்றொன்று இன்டர்நெட் பிரௌசிங் சென்டர்கள். அதில் பெரும்பாலான சென்டர்கள் சட்ட விரோதக் காரியங்களுக்குத் துணை போகின்றன என்ற சர்ச்சை நிலவுகிறது. இது தொடர்பாக காவல் துறையும் கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொள்ளாத குறையாக கண்காணித்து வந்தாலும், ஓரிரு சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. நம் விசாரணையை ஆரம்பித்தோம்.



முதலில் நம்மிடம் சிக்கியவர் 'பிரபல பிரௌசிங் ஷாப்'ஐ நடத்தி வரும் சத்யா - சற்றே தயக்கத்துடன் பேசத்துவங்கினார்.

"நீங்க கேள்விப்பட்டது உண்மைதான். ஒரு சில சென்டர்ஸ் இந்த மாதிரி குற்றங்களை ஈடுபடறாங்க. குறிப்பா porn sites-ஐ Default-ஆ செட் பண்ணிடறது. அதே மாதிரி நீலப் படங்களை கம்ப்யூட்டரில் லோட் செய்து, அதை டெஸ்க்டாப்பில் போடறது. பிரௌசிங்கை பேரல் சத்தமா மூடப்பட்ட கேபின்களை வைத்து, அதுக்குள்ள Lovers-ஐ அனுமதிக்கிறதுன்னு நிறைய இருக்கு. எல்லாரும் எல்லாத்தையும் செய்யறதில்லை. ஒரு சிலர் பண்ணிடறாங்க. அதுக்குக் காரணம் பிஸினஸ் ரொம்ப டல்லடிக்கறது தான். போலீஸ் என்னதான் கட்டுப்பாடுகளை விதித்தாலும் நம்ம ஆளுங்க மேட்டரை கச்சிதமா முடிச்சிடறாங்க" என தன் கருத்துக்களை அள்ளி விட்டார்.

அடுத்து அண்ணாநகரின் ஒரு பிஸியான பிரௌசிங் சென்டருக்குச் சென்றோம். சத்யா சொல்வது உண்மை எனப் புலப்பட்டது. அங்கு இருந்தவர்களிடம் விசாரித்தபோது,

"கொஞ்ச நாளைக்கு முன்னால பிரைவசி கேபின்ஸுக்கு தடை போட்டிருந்தாங்க போலீஸ். ஆனா இப்போ பழைய குருடி கதவைத் திறடி கதைதா, எல்லாம் மாறிப் போயிடுச்சு. இதனால கேம்ஸ் விளையாட வர்ற சின்னப் பசங்க பாதிக்கப்படறாங்க. குறிப்பாக காலேஜ் கேர்ள்ஸ். அதே மாதிரி 'Porn sites Restricted'னு எல்லா கம்ப்யூட்டர்க்கும் முன்னாடியும் ஸ்டிக்கர் ஒட்டியிருப்பாங்க. அதுல சின்ன மிரட்டலும் இருக்கும். ஆனா இப்போ அது மாதிரி எந்த ஸ்டிக்கரோ, லேபிளோ கிடையாது. அல்டிமேட்டா இந்த மாதிரி குற்றச் செயல்களுக்கு இந்த பிரௌசிங் சென்டர்களைத் தூண்டறது Low Collection தான்." என சமூகப் பார்வையுடன் பேசினார் அந்த மிஸ்டர் பொதுஜனம்.

இவற்றை அடியோடு மறுக்கிறார் Sify I Way-யை நடத்திவரும் ஒருவர். "இந்த மாதிரி Royal Brand சென்டர்ஸில் நீங்கள் குறிப்பிடுவது போல் எதுவும் நடப்பதில்லை. காரணம் எங்களுக்கு வர்ற கஸ்டமர்ஸ் பெரும்பாலும் அலுவலகம் செல்பவர்களும், பிஸியான பிஸினஸ் மேன்களும்தான். ஆனா மத்த இடங்கள்ல எப்படின்னு என்னால தீர்க்கமா சொல்ல முடியாது" என பக்கா safety-யாகப் பேசினார்.

இத்தொழிலில் ஈடுபட்டு தற்போது விலகியிருக்கும் ராம் குமார் என்ன சொல்கிறார்:

"அதாவது இந்த கம்ப்யூட்டர் டெக்னாலஜி நம்ம இளைஞர்களுக்கு கொடுத்த சாபம்தான் இது. அதுவும் விண்டோஸ் மீடியா பிளேயர், ரியல் பிளேயர்னு வச்சுகிட்டு இவங்க பண்ற அட்டூழியம் தாங்க முடியாமத்தான் இந்த பிஸினஸிலிருந்து ஒதுங்கிட்டேன். இதுக்கெல்லாம் தீர்வு என்னன்னா, ரேட்டைக் கணிசமா குறைச்சி, கஸ்டமர்ஸுக்கு Quality-சர்வீஸ் பண்ணினா, நிச்சயம் Quantity-ஐ (விரலைச் சுண்டிக் காட்டுகிறார்) அள்ளிடலாம். அது மட்டுமில்லாம Net phone, Voice chat, web cam போன்ற வசதிகளை அதிகப் படுத்தி, நல்லா பிஸினஸை ரன் பண்ணலாம். அத விட்டுட்டு இந்த மாதிரி கேடு கெட்ட செயல்களில் ஈடுபடுவது சுத்த மடத்தனம்" என்று ஆவேசமாகப் பேசி முடித்தார். (அனுபவஸ்தர் சொல்றதக் கேளுங்க!)

(ஹலோ பேரண்ட்ஸ்! இந்த மேட்டரு பிரௌசிங் சென்டர்ல மட்டும் நடக்கல, வீட்டுல இருக்கற கம்ப்யூட்டர் மூலமாகவும் நடந்திட்டிருக்கு. அதனால, உங்க பசங்க மேலயும் ஒரு கண் வச்சிக்கறது நல்லது!)

கலை

நான் இராமனாக, ரீமாசென் சீதையாக!



மணிரத்னம் கூடாரத்திலிருந்து சித்தார்த் ஹீரோவாக வெளிவந்ததன் தொடர்ச்சியாக, அர்ஜுனிடம் 'ஏழுமலை, வேதம்' படங்களில் உதவி இயக்குனராகப் பணியாற்றிய விஷால், இன்று 'செல்லமே' படத்தின் வழியாக ஹீரோவாகியிருக்கிறார். முதல் படத்திலேயே பொறாமைப்படும் அளவிற்கு ரீமாசென்னுடன் உச்சகட்ட வெப்பத்தினிடையே படு நெருக்கமாக நடித்திருந்தவரை செல்போனில் பிடித்தோம்.

'செல்லமே' என்ன மாதிரியான கதை?

ராமாயணத்தை 70எம்எம் ஸ்கிரீன்ல, ஹாரிஸ் ஜெயராஜ் இசைல, டிடிஎஸ் ஒலியில நான் ராமனாகவும், ரீமாசென் சீதையாகவும்(!) காண்பிச்சா எப்படியோ அதான் 'செல்லமே!' ஆனா என்ன, ராவணனா நடிக்கறது 19 வயது இளைஞனாக நடிக்கிற பரத். மற்றபடி இன்றைய ட்ரெண்டுல ராமாயணத்தை புதுசா பார்க்குற ஃபீலிங்தான் உங்களுக்கு வரும்.

முதல் படத்திலேயே கனவுக் கன்னி ரீமாசென்னோட இத்தனை நெருக்கமா...

ஐய்யோ... எல்லாரும் இதையே சொல்றீங்களே... கதைக்கும் காட்சிகளுக்கும் தேவைப்பட்டது. அதனால அப்படி நடிச்சேன். யாருக்கு கிடைக்காத பாக்கியம் எனக்கு கிடைச்சிருக்கு... மற்றபடி வல் சில்ல எங்க ரெண்டு பேருக்கும் கூச்சமில்லை. அப்படி நடிச்சாதானே காட்சிகளும் தத்ரூபமா வரும்! (ஆமாமா!)

இயக்குனர் கனவு என்னாச்சு?

ஆத்துல ஒரு காலும் சேத்துல ஒரு காலும் வைக்க விரும்பலை. இப்போதைக்கு நடிப்புதான் என் குறிக்கோள். முதல் படத்துலேயே இயக்குனர் காந்திகிருஷ்ணா, ஹாரிஸ் ஜெயராஜ், கே.வி.ஆனந்த், சுஜாதா, வைரமுத்து போன்ற டீம் யாருக்குக் கிடைக்கும்! இதனாலேயே ஷூட்டிங் தொடங்கும் முன்பு 'கூத்துப்பட்டறை'யில நடிப்புப் பயிற்சி எடுத்து என்னைத் தயார் படுத்திக்கிட்டேன். ஆனாலும் கண்டிப்பாக ஒருநாள் மிகப் பெரிய இயக்குனராவது தான் என் ஆதர்சக் கனவே.

படம் பார்த்து யாரிடமிருந்து மிகப்பெரிய பாராட்டு கிடைத்தது?

ப்ரிவியூவுல வைரமுத்து சார் பார்த்துட்டு "புதுமுகம் நடிச்ச மாதிரியே இல்லையே, சபாஷ்!" அப்படின்னு பிரமிச்சு பாராட்டினது நான் இன்னும் என் கண்ணுல அப்படியே நிக்குது.

ரீமாசென் பற்றி ஏதாவது புதுசா சொல்லலாமே!

கண்டிப்பா. எதையும் நேருக்கு நேர் தைரியமாக சொல்லும் பெண் அவர். இதுவரைக்கும் நீங்க கிளாமரான மாடர்ன் உடைகளில் தான் ரீமாசென்னை பார்த்திருக்கீங்க. ஆனா 'செல்லமே'யில ஒரு தமிழ்ப் பெண்ணா சேலை கட்டி நடிச்சு உங்களுக்கெல்லாம் பெரிய சர்ப்ரைஸ் கொடுக்க ரெடியா விட்டாங்க.

✍ ச.ந. கண்ணன்

க்ளாமர் அதிகமானதால்...




போஸ்டர்களிலெல்லாம் 'வசூல் ராஜா' 'U' டாக்டராக சிரித்துக் கொண்டிருக்கிறார் என்றால் அதற்கு ஜிவ்வான 'சீனா தானா' பாடலை சென்சார் பாதியாய் வெட்டெறிந்த புண்ணியம்தான். ஆனால் சூரியன் உதிக்கும்போது மறுபக்கம் நிலாவின் பால் முகம் வாடித்தானே போகும்! அப்படியொரு நிலவரத்தில் தானிருக்கிறார் 'சீனாதானா' பாடிய க்ரேஸ். (மேடம், நடிகர் கருணாஸின் காதல் மனைவியாக்கும்!) "முதன் முதலா 'தேவதை கண்டேன்'னில் டூட் பாடினதுதான் எனது முதல் பாடல் என்றாலும் முதன்முதலாக ரிலீஸ் ஆனதும் பெரிய எதிர்பார்ப்பை உண்டு பண்ணினதும் வசூல் ராஜாவில் பாடினதுதான். நான், கருணா முதற்கொண்டு எல்லோருமே இதை 'டூ போடு' ரேஞ்சிற்கு நினைத்தோம். ஆனால் விஷுவல்ஸ் ரொம்ப கிளாமரா இருந்ததால, பாதிப் பாட்டுதான் திரையில் வந்தது. இதனால பாட்டு வந்ததும் தெரியல, போனதும் தெரியல. என்னமோ போங்க" என்று ஸ்ருதி குறைந்தவர். "ஆனாலும் நிறைய பாராட்டுகள் கிடைச்சது. கருணாகிட்ட கமல் சார் தன் பாராட்டுக்களைத் தெரிவிச்சிருக்கிறாரு. அப்புறம் நேர்லு அஜித் சார் கூப்பிட்டுப் பாராட்டினது எதிர்பாராத இன்ப அதிர்ச்சி" எனும்பொழுதுதான் க்ரேஸ் முகத்தில் மெல்ல மெல்ல புன்னகை படர ஆரம்பித்தது.

கடந்த 25ம் தேதி பிறந்தநாள் கொண்டாடிய கேப்டன், முக்கிய திரையுலக நண்பர்கள் வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் பிரியாணி பார்சல்களை மதிய உணவிற்கு அளித்துள்ளார். 'பட்டை, இலவங்கம், வாசனையோடு கொஞ்சம் அரசியல் வாசனையும் அடிக்குதில்லே' என்கிற கமெண்ட்ஸ் நாலாபக்கமும் அடித்தது.

✍ எழில்


'அது' மாதிரி இல்லையே?

ஆயிரம் கோடி சம்பாதித்தாலும் அதை அடுத்தவருடன் பகிர்ந்து கொள்ள முடியுமா? ஆனால் பாராட்டுக்களும் விருதுகளும் கிடைத்தால்... அனைவரிடமும் பரிமாறிக் கொண்டு புளகாங்கிதம் அடையலாமே! சமீபகாலமாக ரீமேக் படங்களாக எடுத்துத் தள்ளிய தமிழ் சினிமா, பாவம், பாராட்டுகளை இழந்து முகம் வெளிறிக் கிடக்கிறது. 'கில்லி' ஹிட்டு தான். ஆனாலும் மகேஷ் பாபு அதுல என்னமா பின்னி உதறியிருப்பான் தெரியுமா? குஞ்சக்கோ போபன் காட்டிய யதார்த்தம் 'பேரழகன்'ல இல்லையே? 'பூத்' பார்த்து நெஞ்சமெல்லாம் உறைந்து போனேன். 'ஷாக்'கா அது? - முன்னா பாய்'ல காமெடி கலக்கலா இருந்தது தெரியுமா. 'வசூல்ராஜா' வேஸ்ட்" என்றெல்லாம் ஒரிஜினலோடு ஒப்பிட்டு ஏராளமாய் வந்த சூடான விமர்சனங்கள் கண்டு, சம்பந்தப்பட்ட ஹீரோ, இயக்குனர்களெல்லாம் சோர்ந்து போயிருக்கின்றனர். "தமிழுக்கென்று தானே சில மாற்றங்கள் செய்து எடுத்தோம். இவர்களே இப்படிச் சொன்னா எப்படி?" என்பதுதான் இவர்களின் ஒட்டுமொத்த ஆதங்க பதில். (ஆங்கிலப் படங்களிலிருந்து உருவினால் ஆஹா எழுத்து, இதுக்கெல்லாம் வெறும் கிண்டல் மட்டும்தான்!)



✍ கண

காதலிஸம்



முதல் சந்திப்பு பேருந்திலுள். அவரது பெயரையும் ஊரையும் மனதிலுள் பதித்துக் கொள்ள 6 நாட்கள் ஆனது. ("ஏய் ஸ்ருதி இங்கே வா!", "தோ வரேன்!") பேசுவதற்கு 14 நாட்கள். (40A போயிடுச்சுங்களா?) ஒன்றாக சேர்ந்து போக 47 நாட்கள். ("ஷேர் பண்ணி ஆட்டோல போயிடலாங்களா?) பரஸ்பரம் பகிர்ந்து கொள்ள 83 நாட்கள் ("உனக்கு ஜலதோஷமா? சரி, எனக்கும் ஜலதோஷம் வேணாம்!") இப்பொழுதெல்லாம் ஒரு குடை இருவருக்கும் போதுமானதாக இருக்கிறது.

- ராஜேஷ், விக்கிரவாக்கம்

டேஸ்ட்.காம்

"இதையே தினமும் மூணுவேளை சாப்பிட்டா தொப்பையே வராதில்லே" என்று ஒரு பெட்டிக் கடை முன்னால் இரு பி.சிக்கள் பேசிக் கொண்டே, சாண்ட்விச் ப்ரெட்டை கலைத்துக் கொண்டிருந்தனர். நுங்கம்பாக்கம் ஹைரோடு - விஜய் டிவி அலுவலகம் அமைந்துள்ள ஜெகன்னாதன் தெரு தொடக்கத்தில் உள்ள சாண்ட்விச் கடையைத்தான் எப்பொழுதும் 'பளீர்' உடையணிந்த அலுவலர்களும் இளைஞர்களும் முற்றுகையிடுகின்றனர். ப்ரெட் ஆம்லெட், வெஜ்-எக் சாண்ட் விச், டோஸ்ட் - ப்ரெட் என புகை, கலா சார உணவினை காலை 9 முதல் இரவு 12 மணி வரை 'கட்டு' வருகிறது, பெயரில்லாத இவ்வுணவகம். "டெய்லி தும்பது ப்ரெட் பாக்கெட், 300 முட்டை காலியாகிடும்" என்றார் கடையிலிருந்து செல்வம். "த்ரீ எக் சாண்ட்விச் ப்ளீஸ்" என ஒரு குயில் ஆர்டர் இட, வழக்கம்போல் முட்டையை உடைத்து அதை வேக வைத்து அதன் மேல் ப்ரெட்டை அடுக்கி... பரபரப்பானார்.



📷 ஷிவ் ✍ ச.ந. கண்ணன்

பானை பஜார்!



📷 முத்து

சென்னை வாசிகளின் அணி வகுப்பிற்கு புகழ்பெற்ற இடம் சாந்தோம் நெடுஞ்சாலை. தற்போது இச்சாலை மற்றொரு வகையில் மக்களின் கவனத்தை ஈர்க்கத் துவங்கியுள்ளது. அதாவது மண் பாண்டக் கலையின் மற்றொரு பரிணாமம் அங்கு காட்சியளித்து வருகிறது. பானைகள் மட்டுமே செய்யப் பயன்பட்டு வந்த மண், இன்று கால முன்னேற்றத்தால் இன்று அழகிய சிலைகளாக, பூந்தொட்டிகளாக, அழகு தரும் பொம்மைகளாக ஒரு வடநாட்டுக் குடும்பத்தால் தயாரிக்கப்பட்டு, விற்பனைக்காக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன சாலையோர நிழலில். இவற்றின் அதிக பட்ச விலையே நூறு ரூபாய்க்குள்தானாம்.

இவைகள் சிட்டியில் இருக்கும் பல்வேறு சாஃப்ட்வேர் கம்பெனிகளிலும், அலுவலக வாயில்களிலும் அழகாக கொலு வீற்றிருக்கின்றன. ஆனால் ஒன்று மட்டும் கொஞ்சம் உதைக்கிறது. அதாவது இவற்றைக் கையாள்வதற்கு நெல்சன் மண்டேலாவை விட அதிகப் பொறுமை தேவை. அத்தகைய பொறுமையும், நிதானமும் உங்களுக்கு இருந்தால் உடனே சரி_ நிதானமாகப் புறப்படுங்க சாந்தோம் ஹைரோட்டிற்கு.

✍ கலை

பூத்.காம்

பாம்புப் புத்து... மூணு யூத்து!

வண்டலூர் மிருகக் காட்சி சாலையில் வறுகடலை சாப்பிட்டுக் கொண்டே, சிங்க வால் குரங்கை ஊக் விட்டுக் கொண்டிருந்தனர் செலினா, மலர் அண்ட் சந்தியா டீம். அருகே சென்று பார்த்தால், பாம்பைப் பற்றி பரம சீரியசாக வம் படித்துக் கொண்டிருந்தார் செலினா.

"உனக்கு ஒண்ணு தெரியுமா? பாம்புக்குக் காது கிடையாது. நாக்கும் கிடையாது."

"ஐயோ பாவம்" என்று பாம்புக்காக சீரியசாகக் கவலைப்பட்டார் மலர். "நாக்கு மாதிரி ஒண்ணு இருக்கில்லை அது தான் உண்மையில் மூக்கு" என்று அள்ளிவிட்டார் நம்ம பாம்பு ஃப்ரொபஸர். இவருக்கு பாம்பு தான் ஃபேவரிட்டாம்.

"மணிரத்னம் எடுக்கும் படத்தை விட, பாம்பு எடுக்கும் படம் தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும்."

"சரி, பாம்புக்கு தான் நாக்கு இல்லையே, தைரியம் இருந்தா புத்துக்குள்ள கையை விடு பார்ப்போம்" என்று மலர் சொல்ல, உடனே ஒரு புற்றைத் தேடிக் கண்டுபிடித்து, அதன் வாய்க்குள் சிரித்தபடியே கையை விட்டார் செலினா. நல்ல வேளை பாம்பு அண்ணாச்சி வெளியில் வரவில்லை. வெற்றியுடன் புன்னகைத்தார் செலினா.






இவ்வளவு அமர்க்களத்திலும் சமர்த்தாக ஒதுங்கி இருந்து அரச மர இலை ஒன்றை வைத்து சீரியசாக, கொஞ்சிக் கொண்டிருந்தார் சந்தியா. செடி, கொடி, குச்சி, இலை, மரப்பட்டை இதில் ஏதாவது ஒன்றை அவரிடம் கொடுத்துவிட்டால், அடுத்த மூன்று மணி நேரத்திற்கு அவர் பிஸியாகி விடுவாராம்.

'இது பேரு என்னங்க' என்று விளையாட்டாக கீழே கிடந்த ஒரு புல்லை எடுத்துக் காண்பித்தது தான் தாமதம். புல்லின் பொடானிக்கல் நேம், அதன் ஜியாகிரஃபி, சிவிக்ஸ், அல்ஜீப்ரா எல்லாவற்றையும் பற்றி லெக்சர் கொடுக்க ஆரம்பித்து விட்டார். (இதுக்கு பேசாம பாம்பு வாய்க்குள்ளேயே கையை விட்டிருக்கலாம்!)

கண்டாமிருகத்தை நாம் நெருங்கிக் கொண்டிருந்தபொழுது, சந்தியாவின் கைப்பையிலிருந்து 'பீப்' இசை ஒலிக்க, எல்லோரையும் சைலண்ட் செய்து விட்டு செல் பேசத் தொடங்கினார். "யெஸ் டாடி, ஆமா டாடி, நான் இப்ப என் ஃப்ரெண்ட்ஸோட கோவில்ல தான் இருக்கேன். இன்னும் கொஞ்ச நேரத்துல அபிஷேகம் முடிஞ்சுடும். உடனே வந்திடறேன் டாடி!"

📷+✍ கங்கா



'சினேகா' -உங்க ஃப்ரெண்ட் மாதிரி!

சினேகா - தற்கொலைத் தடுப்பிற்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனம். இதற்காக மட்டுமின்றி மனச் சோர்வுடன் தவிப்போர்க்கு மனபாரத்தை இறக்கி வைக்க உதவும் சுமைதாங்கியாக, கடந்த பதினெட்டு ஆண்டுகளாக இயங்கி வரும் சினேகா அமைப்பின் இயக்குனர் P.V. சங்கரநாராயணனுடன் ஒரு சந்திப்பு:

'சினேகா' இயக்கத்திற்கான இன்ஸ்பிரேஷன் எங்கிருந்து கிடைத்தது?

தற்கொலை முயற்சியில ஈடுபடுறவங்க இரட்டை மனநிலையில இருப்பாங்க. அந்த மாதிரி நிலைமையில இருக்கறவங்களை மனம் திருந்தச் செய்து நல்வழிப்படுத்த UKவில 'சமாரிட்டன்'னு ஒரு மூவ்மெண்ட் இருக்கு. அதுதான் சினேகாவிற்கு இன்ஸ்பிரேஷன்னு சொல்லலாம்.

அதை இந்தியாவில் துவக்க என்ன அவசியம்?

இந்தியாவில் பார்த்தீங்கன்னா இவர்கள் ஒரு லட்சத்துக்கும் மேல தற்கொலை பண்ணிக்கறாங்க. அவங்கல்ல 10,000 பேர் தமிழர்கள் என்றும், 1200 பேர் சென்னைவாசிகள் என்றும் 'நேஷனல் கிரைம் ரெக்கார்ட்ஸ் பீரோ' சொல்லியிருக்கு. இது போதுமே இந்தியாவுல 'சினேகா' போன்ற அமைப்புகளைத் துவக்க.

தற்கொலை பண்ணிக்க காரணங்களா எதைச் சொல்றீங்க?

ஆக்சுவலா reports என்ன சொல்றதுன்னா, குடும்பத் தகராறு காரணமாக 25 சதவிகிதமும், தீராத வியாதி பயம் காரணமாக 20 சதவிகிதமும், மற்றபடி, காதல் தோல்வி, தேர்வுகளில் தோல்வி மற்றும் வேலையின்மை போன்றவையாலதான் அதிக தற்கொலைகள் நடக்குது. அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம் கேரளான்னு சொல்றோம். அங்கதான் அதிக தற்கொலைகள் நடக்குது. தற்கொலைக்கும் கல்விக்கும் தொடர்பே இல்ல. முழுக்க முழுக்க மனசு சம்பந்தப்பட்டது.

எந்த வயசுக்காரங்க அதிகமா தற்கொலை பண்ணிக்கிறாங்க?

அதாவது 15 முதல் 29 வயதை எட்டிய பெண்களும், 30 முதல் 45 வயதை எட்டிய ஆண்களும்தான் தற்கொலை பண்ணிக்கிறாங்க. இதுல ஆண்கள் 62% மற்றும் பெண்கள் 38%. ஒவ்வொரு தற்கொலைக்கு முன்னாலயும் 5 to 7 அட்டம்ப்ட் நடந்திருக்கும். இந்த முயற்சிகளில் அதிகமாக லேடீஸ்தான் ஈடுபடுறாங்க.

முக்கியமா ஸ்டூடண்ட்ஸ் தற்கொலை பண்ண காரணமா அமையறது எது?

எனக்குத் தெரிஞ்சு வெற்றியைக் கொண்டாட சொல்லித் தரும் ஆசிரியர்களும், பெற்றோர்களும், தோல்வியை எதிர்கொண்டு சமாளிப்பது எப்படின்னு சொல்லித்தரத் தவறிடறாங்க. இதுதான் மேக்ஸிமம் மாணவ - மாணவிகள் தற்கொலைக்குக் காரணம். குறிப்பா, தேர்வுகளில் தோல்வி அடைஞ்ச மாணவர்கள் suicide attempt பண்ணாம இருக்க, கூடுதல் நேரம் ஒதுக்கி பணியாற்றி வருகிறது 'சினேகா'.

தற்கொலை மூட்ல இருக்கறவங்களுக்கு உங்களால என்னவெல்லாம் செய்ய முடியும்?

குறைந்தபட்சம் அவர்களது பிரச்னைகளை காது கொடுத்துக் கேட்கிறோம். மனிதாபிமான உணர்வுடன் அவர்களுடன் பேசுகிறோம். நீங்க யாரு? உங்க பேரு, அட்ரஸ் சொல்லுங்கன்னு டார்ச்சர் கொடுக்காம, எங்களோட பரிபூரண, நிபந்தனையற்ற ஆதரவைத் தருகிறோம். அவர்கள் சொல்ற ரகசியங்களைப் பாதுகாக்கிறோம். எங்களால் இயன்றவரை அவர்களிடம் அனுசரணையாகப் பேசி, (கவுன்சிலிங்) அவர்களது மனச்சுமையை இறக்குகிறோம். சுருக்கமாகச் சொன்னால் It is a process of listening. அவ்வளவுதான். இதைவிட என்ன செய்ய முடியும். சொல்லுங்க. இதுவரைக்கும் எங்களை ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்டோர் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அதில் 60% தற்கொலை எண்ணம் உடையவர்கள். மற்றவர்கள் சிறு சிறு மன உளைச்சல்களுக்கு ஆளானோர்தான்.

கவுன்சிலிங் செய்ய volunteers எப்படி செலக்ட் பண்றீங்க?

இருபது வயசுக்கு மேற்பட்ட, தமிழ், இங்கிலீஷ் தெரிஞ்ச, வாரத்தில் ஒருநாள் மட்டும் 4 மணி நேரம் சேவைக்காக ஒதுக்க முடிந்த எவரும் விண்ணப்பிக்கலாம். Selection process சற்று கடினமாத்தான் இருக்கும். தேர்வு செய்த பின்னால experts மூலமாக பயிற்சி தரப்படும். இந்த மாதிரி விளம்பரத்தை கல்கி பத்திரிகையில 17 வருஷத்துக்கு முன்னால நான் பார்த்து, இங்க வந்து சேர்ந்தேன் (மெலிதாய்ப் புன்னகைக்கிறார்)

'சினேகா'வை அப்ரோச் செய்த ஓரிரு cases பற்றி...

I am terribly sorry. ரகசியங்களைக் காப்பாத்துறதுதான் எங்களுக்கு முக்கியம். அதையும் மீறி நான் ஏதாவது சொல்லி, அதனை ஏற்கனவே எங்களை அப்ரோச் செய்தவங்க படித்து, மனஉளைச்சல் ஏற்பட சான்ஸ் இருக்கு. புரிஞ்சுப்பீங்கன்னு நினைக்கிறேன்.

உங்க கவுன்சிலிங்குக்கு பிறகும் தற்கொலை பண்ணிக்க சான்ஸ் இருக்கே?

இல்லன்னு சொல்லலையே. அப்படி செஞ்சுட்டாங்கன்னா அதைவிட வருத்தம் என்ன இருக்க முடியும்? அப்படி நடக்கக் கூடாதுங்கறதுதான் 'சினேகா'வோட wish.

மனமே... ஓ மனமே... நீ மாறி விடு

தற்கொலை எண்ணமிருந்தால் அதை அடியோடு மாற்றி விடு...

மாற்றிக் கொள்ள இந்த எண்ணுக்கு தொடர்பு கொள்ளுங்கள்: 28352345

வரும் 10ஆம் தேதி உலக தற்கொலை தடுப்பு நாள். இதற்காக செப். 5ஆம் தேதி இது தொடர்பாக மினி மாரத்தான் போட்டி நடத்த திட்டமிட்டிருக்குது சினேகா.

📷 + ✍ இரா. முத்துக்குமார்

பூமாராங்



✉ ஆட்டோ டிரைவர்களின் கண்ணீர்க் கதை ஒரு தரப்பினரின் கருத்தாகவே உள்ளது.

E-mail: சந்தியா

✉ வக்கிர விளம்பரம். சென்னை ஸ்கேனின் சமூக அக்கறையை எடுத்துக் காட்டுகிறது. குட்!

E-mail: சுப்ரியா

✉ சோனியா 'குற்றப் பத்திரிக்கை'க்கு ஆதரவா? சேச்சே! 'மூத் கடல' உறுப் படியான கடல டோஸ்!

- ஒரு தேனாம்பேட்டை

யாருங்க அவரு?

வழக்கமாய் வியாழன் அன்று கமிஷனர் அலுவலகத்தில் நடைபெறும் பிரஸ்மீட், சென்ற வாரம் சென்னையில் நடக்கும் கொலை, கொள்ளை விவகாரங்களினால் கொஞ்சம் சூடாக நடந்து கொண்டிருக்கும்போது, பிரஸ் ஹாலின் ஓரமாய் ஐந்து இளம் பெண்கள் கும்பலாக நின்று வேடிக்கை பார்க்க, என்னடிது வரிசையில் மற்ற சேனல்களும் பெண் ரிப்போர்ட்டர்களை ஈடுபடுத்துகிறது போல, என்று அவரவர் பேனாவும் கையுமாய் பிஸியாய் இருந்தனர். பிறகுதான் தெரிந்தது, அவர்களனைவரும் எம்ஓபி. வைஷ்ணவா மாணவிகள் என்று. "ஜர்னலிசம் படிப்பதால் ட்ரெய்னிங்கிற்கு தானாக வந்தோம்" என்று வடக்கிப் பிடித்த மக்கள் தொடர்பு அதிகாரியிடம் பயந்தபடி விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்க, ஒரு சுடிதார் பவ்யமாய்க் கேட்டது. "நடுவுல உட்கார்ந்து பதில் சொன்னவர் யாருங்க?" (கமிஷனர் அலுவலக பிரஸ் மீட்டிற்கு வந்து கேட்கிற கேள்வியா இது?)



கணிப்பொறி புறாக்கள்

இப்பொழுதெல்லாம் குழந்தைகள் கிலேட், பல்பம், பம்பரம் என்று தவழ்ந்து போகாமல் சிடி, மல்ட்டி மீடியா, கம்ப்யூட்டர் கேம்ஸ் என்று ஒரே பாய்ச்சலாக பாய்ந்து கொண்டிருக்கிறார்கள். டன் மல்ட்டி மீடியா அவர்களைக் கட்டாயம் கவரும். பாபா ப்ளாக் ஷீப்பிடம் வுல் கேட்பதிலிருந்து, சீறிப் பாய்ந்து வரும் ஸ்பைடர்மேன் கேம்ஸ் வரை அனைத்து சமாச்சாரங்களையும் குறுந்தகடுகளில் பதித்து விற்பனை செய்து வருகிறார்கள் இவர்கள். விளையாட்டோடு விளையாட்டாக, ஃப்ரெஞ்ச், ஜெர்மன் போன்ற மொழிகளை சிடி மூலம் கற்றுக் கொள்ளலாம். ஜாவா, ஃப்ளாஷ் கற்றுக் கொள்ளலாம். கதை கேட்கலாம். ரைம்ஸ் கற்றுக் கொடுக்கலாம். (பாடியிருப்பவர் பாப் ஷாலினிங்க்). எனக்கிலோ பிடியாவா, இந்தா பிடி, என்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட ஸ்பெஷல் சிடிக்களும் இந்த கணிப்பொறி புறாக்களிடம் கிடைக்கும்.

டன் மல்ட்டி மீடியா பிரைவேட் லிமிடெட், 50, மார்ஷல் ரோடு, லக்ஷ்மி நிவாஸ்



அபார்ட்மெண்ட்ஸ், எழும்பூர், சென்னை 600 008, தொலைபேசி: 28546297, 28585552

மடிசார் மேஜிக்!



உலகையே பிரட்டிய 'மம்மீஸ் ரிட்டன்ஸ்' தெரியும்! 'மாமீஸ் ரிட்டன்ஸ்' தெரியுமா? சென்னை ஜி.ஆர்.டி சாலையில் மீனம்பாக்கத்தை ஒட்டியுள்ள நட்சத்திர ஹோட்டல் ரேடிசன் ஜி.ஆர்.டி. இங்கேதான் 'மாமீஸ் ரிட்டன்ஸ்' உணவுத் திருவிழா. பிராமண சமையலில் கைதேர்ந்த இருபது மேற்கு மாம்பலம் மாமிகளை அழைத்து வந்து, 'மடிசார் மேஜிக் கிச்சன்' என்ற தலைப்பில் சைவ உணவுகளைக் கொடுத்து அசத்துகிறார்கள். பானகம், நீர்மோர் என்று ஆரம்பித்து, கடச்சட கீரை வடை, அரிசி கை முறுக்கு, பருப்பு அடை என களை கட்டி, விதவிதமான கூட்டுகள், பொரியல், குழம்புகள், சாத வகைகள், கடைசியாய் டிகிரி காப்பி வரை, பட்டையைக் கிளப்பி விடுகிறார்கள். கடந்த ஆண்டு அமோக வரவேற்பு பெற்றதால் இந்த ஆண்டும் 'மீண்டும் மாமிகள்.' செப்டம்பர் ஐந்தாம் தேதி வரை களை கட்டும் மடிசார் மேஜிக்கை பஃபேவாக ருசிக்க, தலை ஒன்றுக்கு முன்னூற்று இருபத்தைந்து. பொடிகள் என்றால் இருநூற்று இருபத்தைந்து.

- ஸ்ருதி

பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரையோரம் அமைந்துள்ளது அன்னை வேளாங்கண்ணி திருத்தலம். இங்கு கடந்த 29ஆம் தேதி முதல் ஆண்டுத் திருவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழா செப்டெம்பர் 8ஆம் தேதி வரை நடக்குமாம். இவ்விழாவிற்கு வரும் பக்தர்களுக்காக சிறப்புப் பேருந்துகளும் சென்னை மாநகர் முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.



- ஸ்வரா


FOLLOW UP

மா(நா)றி வரும் மயிலை

22 ஆகஸ்டு, 2004 தேதியிட்ட நமது சென்னை ஸ்கேனில் மயிலாப்பூர் தெனரல் பேங்க் ரோட்டில் கன்னக் கால்வாய் பற்றி எழுதியிருந்தோம். தற்போது அந்தக் கால்வாயானது அதிகாரிகளினால் பார்வையிடப்பட்டு, பணியாளர்கள் மூலம் அங்கிருந்த அசுத்தங்கள் நீக்கப்பட்டு வருகிறது. இப் பணியில் விரைந்து ஈடுபட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் நன்றி. மயிலை மாறி வருகிறது.

தேவதைகள் உலகம்!

இனி நீங்கள் அடிக்கடி ஐஸ்வர்யா ராய்களையும், பிரியங்கா சோப்ராக்களையும் சென்னையில் பார்க்கப் போகிறீர்கள். எப்படி என்கிறீர்களா! எல்லாம் ஏஞ்ஜெல்ஸ் ப்யூட்டி பார்லரின் கைவண்ணம்தான். ஸில்வர், பியர்ல், ஃப்ரூட், கோல்ட், ஹெர்பல் என்று அசத்தலான ஃபேஷியல் முறைகளை பயன்படுத்தி வருபவர்களை எக்ஸ்ட்ரா அழகானவர்களாக மாற்றி அனுப்புகிறார்கள். புருவம், உதடு என்று தனித் தனியாக டச் அப் செய்து கொள்ளுவதற்கும் வசதியுண்டு. அமெரிக்கன் டைமண்ட்,



இயரிங், வளையல் வகையறாக்கள் கொண்ட ஒரு தனி ஆர்ட் ஜுவல்லரி வேறு வைத்திருக்கிறார்கள். டெய்லரிங்கும் உண்டு. தேவதைகளாக கன்வர்ட் ஆக விரும்பும் பெண்களுக்கும், குட்டி குட்டி ஏஞ்ஜெல்களாக மாற விரும்பும் குழந்தைகளுக்கும் ஏற்ற குளு குளு அழகு நிலையம் இது.

ஏஞ்ஜெல்ஸ் ப்யூட்டி பார்லர், எண்.31/17, சுந்தரம் பிள்ளை தெரு, புரசைவாக்கம், சென்னை - 600 007. போன்: 52084540

✍ முகில்



ஆடு களம்..

'ஓட கிரவுண்ட் இல்லை'



தெருமுனையிலுள்ள கடைக்குச் செல்லவே நமக்கெல்லாம் கால் வலிக்கும். ஆனால் 21கி.மீ. ஓடக் கூடிய மராத்தான் ஓட்டப் பந்தயத்தை, 38 நிமிடங்களில் ஓடி, தமிழ்நாடு சார்பாக அகில இந்திய போட்டிகளில் கலந்து கொள்ளும் ஒரே பெண்ணாக இருக்கிறார் எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரியில், பி.ஏ. ஜர்னலிசம் படிக்கும் பாப்பாத்தி. கிராமத்திலிருந்து கிளம்பிய புயல் என்பதால், விகல்பம் இல்லாமல் அனைத்தையும் நம்மிடம் கொட்டித் தீர்த்தார்.

"எங்க ஊரு புதுக்கோட்டை பக்கம் கிரனூருங்க. ஓட்டப்பந்தயத்துல ஜெயிச்சு நிறைய பரிசும் பணமும் வாங்கினதால, விவசாயம் பார்க்கிற எங்க அப்பா அம்மா "சரி சரி, நீ ஓடிட்டே படி கண்ணு"ன்னு சொல்லிட்டாங்க.

எங்க ஊருல நிறைய கிரவுண்டு இருக்குங்க. சரி சென்னைக்கு வந்தா வேலை வாய்ப்பும் நிறைய பயிற்சியும் கிடைக்கும்னு வந்தேன். இங்க வந்தா அநியாயம், ஓடிப் பயிற்சி பண்ண, எனக்கும் என்னை மாதிரியான முன்னூறு வீரர்களை ஸ்பான்சர் செய்ற செயிண்ட் ஜோசப்புக்கும் யாரும் கிரவுண்டே தர மாட்டேங்கறாங்க. அதனால, இப்போ மெரினா பீச் மணல்ல தான் ஓடி ப்ராக்டிஸ் பண்ணிட்டு இருக்கோம். பீச் மணல ஓடறதால சீக்கிரம் உடம்பு டயர்டாயிடும். அங்க ப்ராக்டீஸ் பண்ணிட்டு போட்டிக்கு போறப்போ எங்க ஸ்பீடும் குறைஞ்சிடும். இதனால எங்களுக்கு எந்தவித பிரயோஜனமும் இல்லைன்னாலும், வேற வழியில்லைங்களே.

இப்போ இந்திய அளவுல மாரத்தான் ஓடறவங்க நாலே பேர்தான். தமிழ்நாட்டுல நான் மட்டும்தான். ஆனாலும் ஒலிம்பிக் லெவலுக்கெல்லாம் என்னால போக முடியுமான்னு தெரியலை. என்னை இந்த அளவுக்கு கொண்டு வந்ததே எங்க ஊர் பயிற்சியாளர் சேகர்தான். எல்லார் மாதிரியும் வெறும் சாம்பார், ரசம் சாதம் சாப்பிட்டுக்கிட்டிருந்தா போதுமா? அசைவமும் பழ வகைகளும் நிறைய சாப்பிட்டாதான் சக்தி கிடைக்குமாம். எனக்கு அந்த கொடுப்பினை இல்லை.

கேரளாவுல ப்ளேயர்ஸுக்கு நல்ல மதிப்பும், ஊக்கமும் கிடைக்குது. நிறைய மலையாளிகள் ரெயில்வேயில் வேலை பார்க்கறதால, அவங்க ஊர் ப்ளேயர்களை தான் வேலைக்கு எடுக்கறாங்க. அங்கிருந்து தமிழ்நாட்டுக்கு வந்த ஷைனி வில்சன், அஞ்சு ஜார்ஜுக்கெல்லாம் நம்ம தமிழக அரசு லட்சம் லட்சமா பணம் கொடுத்திருக்கு. இப்படி நாங்க கேரளா போனா, அங்கே இதே மாதிரி மதிப்பாங்களா? உள்ளேயே விடமாட்டாங்களே" என்றார் கொஞ்சம் கொதிப்புடன்.

காலம் காலமாய் அத்லெடிக் வீரர்களுக்கு நேரும் மன உளைச்சல்கள் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.


இப்பொழுது புரிகிறதா, ஏன் ஒலிம்பிக்கில் இந்தியா மட்டும் ஒவ்வொரு முறையும் வெறுங்கையுடன் திரும்பி வருகிறது என்று!

✍ கண்ணன்

போஸ்ட் கார்டு POLL

சென்ற வார Poll ரிசல்ட்

சென்னை வழக்கறிஞர்கள் போராட்டம்



ஹாய் சென்னை!



உங்க ஏரியாவுல சுவையான சமாச்சாரங்கள் எது நடந்தாலும் அதை உங்க சென்னை ஸ்கேனோடு தாராளமா ஷேர் பண்ணிக்கலாம். ஆனா ஒரு விஷயம் - நீங்க சொல்ற மேட்டர் சென்னை ஸ்கேனுக்குப் பொருந்தற மாதிரி இருக்கணும். உங்க ஏரியாவில் ஃபோகஸ் பண்ண வேண்டிய பிரச்னைகள், உங்களுக்குத் தெரிந்த 'உச்சாணி' மனிதர்கள் கல்லூரியில் நடக்கும் ஸ்பெஷல் விழாக்கள், உண்மையான காதலிஸங்கள், உங்க நாக்குக்குத் தெரிந்த டேஸ்ட்டான்கள் இப்படி எதுவானாலும் தெரியப்படுத்துங்க. அதுக்கு எங்களோட இன்பாக்ஸ், போஸ்ட் பாக்ஸ், போன் ரிசீவர் மூணும் தயாராயிருக்கு. (மனசும்தாங்க!)

முகவரி: **சென்னை ஸ்கேன்,**

47 - NP ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 097 போன்: 22345622, 23, 24

Email: Chennaiscan@kalkiweekly.com

Registered with the Registrar of Newspaper of India under No. 104/57 " Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05" Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 "

Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki Issue Dated 5.9.2004



மைத்தடங்கண்ணி யசோதைவளர்க்கின்ற

செய்த்தலை நீலநிறத்துச்சிறுப்பிள்ளை

நெய்த்தலைநேமியும் சங்கும்நிலாவிய

கைத்தலங்கள்வந்துகாணீரே கனங்குழையீர்வந்து காணீரே.

செப்டெம்பர் 6 ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka